# தமிழரசு

16 மே 1978 50 காசு.

JDD 26/78-79

சுற்றுலாச் சிறப்பிதழ்



சென்னை, அண்ணா மேம்பாலம்

# அரசு சிமெண்ட்

உபயோகித்துக்
கட்டப்பட்டது!




- கண்கவர் வண்ணம்
- துல்லியமான பூச்சு
- அதிகப்படி மணல் கலந்து உபயோகிக்கக் கூடியது.
- காங்க்ரீட் சுண்ணாம்புக் கலவை வேலைக்குகந்தது.
- அதிக உழைப்பு உறுதி
- கந்தக நீர் மற்றும் அமில மண்ணால் பாதிப்பு ஏற்படாது.

IS தர நிர்ணயங்களின் படி தரமேன்மையுடன் தயாரிக்கப்பட்டது.

**தமிழ்நாடு சிமெண்ட்ஸ்
கார்ப்பொரேஷன் லிமிடெட்**
ஆலங்குளம் தொழிற்சாலை,
இராமநாதபுரம் மாவட்டம்

மேற்கண்ட சார்பு நிறுவனத்தின் முழு உரிமையாளர்கள்:

**தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம்,**
150-A அண்ணாசாலை, சென்னை — 600 002.



**7-5-1978ல் பதவியேற்ற புதிய அமைச்சர்களுடன்**

**தமிழ்நாடு ஆளுநரும் அமைச்சரவையினரும்**

அமர்ந்திருப்பவர்கள் :

திரு. ஆர். எம். வீரப்பன் - செய்தி-அறநிலைய அமைச்சர்; திரு. ஜி. ஆர். எட்மண்ட் - உணவு அமைச்சர்; திரு. எஸ். டி. சோமசுந்தரம் - வருவாய்த் துறை அமைச்சர்; திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி - கூட்டுறவுத்துறை அமைச்சர்; திரு. பிரபுதாஸ் பட்வாரி - ஆளுநர்; திரு. எம். ஜி. இராமச்சந்திரன் - முதலமைச்சர்; திரு. கி. மனோகரன் - நிதியமைச்சர்; திரு. ச. இராமச்சந்திரன் - மின்சாரத்துறை அமைச்சர்; திரு. பெ. சௌந்தரபாண்டியன் - அரிசன நல அமைச்சர்.

நிற்பவர்கள் :

திரு. கே. நாராயணசாமி முதலியார் – சட்ட அமைச்சர்; திரு. சி. பொன்னையன் - போக்குவரத்து அமைச்சர்; திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் - கைத்தறி அமைச்சர்; செல்வி பி. டி. சரஸ்வதி - சமூக நல அமைச்சர்; திரு. எஸ். இராகவானந்தம் - தொழிலாளர் நல அமைச்சர்; திரு. கே. காளிமுத்து - உள்ளாட்சித்துறை அமைச்சர்; திரு. ஆர். சௌந்தரராஜன் - மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்; திரு. ராஜா முகமது - கிராமத் தொழில் அமைச்சர்; திரு. சி. அரங்கநாயகம் - கல்வி அமைச்சர்; திரு. பி. குழந்தைவேலு - வேளாண்மை, நீர்ப்பாசன அமைச்சர்.



## இந்த இதழில்...



மேலட்டையில் மதுரைச் சித்திரைத் திருவிழாவில் அழகர் உற்சவக் காட்சியினைத் தாங்கி வரும் இந்த இதழ் சுற்றுலாச் சிறப்பிதழாக வெளி வந்துள்ளது. கல்லெல்லாம் கவிபாடும் மாமல்லை— அவனியிலேயே அழகிய கடற்கரைகளில் ஒன்ருன சென்னை மெரினக் கடற்கரை—சிந்தனைக்கு நல்விருந்தாய் அமையும் எழிலார் சிற்பங்கள் —வான்முட்டும் கோபுரங்கள்—அத்தனை எழிலையும் தன்னகத்தே கொண்டு அழகின் திருவுருவாகத் திகழ்கிறது தமிழகம். தமிழகத்தில் சுற்றுலா வளர்ச்சிக்கு ஆக்கப்பூர்வமான திட்டங்கள் தீட்டப்பட்டு வருகின்றன. சுற்றுலா வளர்ச்சி குறித்து மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய கருத்துக்களும், சுற்றுலா மேம்பாடடையத் தமிழக அரசின் எதிர்காலத் திட்டங்களை உள்ளடக்கிய மாண்புமிகு செய்தி-அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் சிறப்புக் கட்டுரையும் இவ்விதழின் சிறப்புக்கு அணி செய்கின்றன. பேரெழில் கொஞ்சும் பிச்சாவரம் போன்று சுற்றுலாவை மையமாகக் கொண்ட வேறுபல க்ட்டுரைகளும், செய்திகளும் இவ்விதழில் உண்டு. 'வளரும் தமிழகம்' என்ற தொடரில் வானெலியில் மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை இடம் பெற்றுள்ளது.

புதிய அமைச்சர்களின் பதவி ஏற்புப் படங்களும், அமைச்சரவைப் படமும், அமைச்சர்கள் வகிக்கும் துறைகளின் விவரங்களையும் இவ்விதழில் காணலாம்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களின் பிறந்தநாள் விழா, கடந்த ஏப்ரல் திங்கள் 29, 30 நாட்களில் நடைபெற்றது. அரசின் சார்பில் புரட்சிக் கவிஞருக்கு விழா எடுப்பது என்பது இதுதான் முதல் தடவையாகும். சென்னை மாநகரில் நடைபெற்ற பாவேந்தர் பிறந்த தின விழாவின் மாட்சியினைத் தொகுத்துக் கூறும் கட்டுரையும், பாரதிதாசன் கவிதைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதைகளும் இவ்விதழினை அலங்கரிக்கின்றன. (கவிதைப் போட்டிக்கு மொத்தம் 441 கவிதைகள் பெறப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.)

பேரறிஞர் அண்ணுவின் ஆங்கிலப் புலமையைச் சுட்டிக் காட்டி, அப்புலமை, பேரறிஞர் அண்ணு எழுதிய நூல்களுக்கு எந்த அளவுக்கு அடித்தளம் அமைத்துக் கொடுத்துள்ளது என்பதை அழகுபட இந்த இதழில் 'அண்ணு எனும் இலக்கியவாதி' தொடர் கட்டுரையில், கட்டுரை ஆசிரியர் விமர்சிக்கிருர்.

மகளிர் அரங்கம் போன்ற வழக்கமான அம்சங்களும் இடம் பெற்றுள்ளன.

அடுத்த இதழ் கல்விச் சிறப்பிதழாக மலர்கிறது.


# தமிழரசு

மலர் : 8 இதழ் : 22

16-5-1978


### உள்ளே....


| | பக்க எண் |
|---|---|
| சுற்றுலா வளர்ச்சிக்கு .. | 5 |
| சுற்றுலா மேம்பாடடைய .. | 6 |
| ஆரோக்கியமான போட்டி | 11 |
| பேரெழில் கொஞ்சும் பிச்சாவரம் ... .. | 13 |
| ஒருமைப்பாட்டை வளர்க்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் | 15 |
| கனிதந்த தீஞ்சாறே ! .. | 17 |
| அகதிகள் அவலம் போக்கிட | 20 |
| சுற்றுலாக் காட்சிகள் .. | 24 |
| மனநலம் .. .. .. | 29 |
| சுற்றுலாவும் வேலைவாய்ப்பும் .. | 33 |
| பாவேந்தே....! .. .. | 34 |
| பகுத்தறிவுப் பாவலன் .. | 36 |
| புரட்சிக் கவிஞர் .. .. | 38 |
| அமுதத் தமிழ்க் கவிஞருக்கு அரசு எடுத்த விழா .. | 41 |
| அண்ணு எனும் இலக்கியவாதி .. .. | 47 |





மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு. எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள்.

7-5-1978 அன்று காலையில், தமிழக அமைச்சரவையின் புதிய அமைச்சர்கள் பதவி ஏற்றனர். ஆளுநர் மாளிகையில் புதிய அமைச்சர்களுக்கு ஆளுநர் அவர்கள் பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. ஆர். சௌந்தரராஜன் அவர்கள்.

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள்.





# அமைச்சர்கள் பொறுப்பு ஏற்றுள்ள துறைகள்

**திரு எம். ஜி. இராமச்சந்திரன் (முதலமைச்சர்)**

பொது நிர்வாகத் துறை — ஐ. ஏ. எஸ். அதிகாரிகள்—மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள் — டெபுடி கலெக்டர்கள் — போலீஸ்—பாஸ்போர்ட் — மதுவிலக்கு— லஞ்ச ஒழிப்பு—பெருந்தொழில்கள் உள்ளிட்ட தொழில் துறை—சுரங்கங்கள்— கனிவளம்.

**திரு கே. மனோகரன் (நிதி அமைச்சர்)**

நிதித்துறை— திட்டம்—சட்ட மன்றம். பொதுப்பணித்துறை — கட்டடங்கள்

**திரு எஸ். இராமச்சந்திரன் (மின்சாரத் துறை அமைச்சர்)**

மின்சாரத்துறை —மின்சாரம் — இரும்பு, எஃகு கட்டுப்பாடு.

**திரு கே. ஏ. கிருஷ்ணசாமி (கூட்டுறவு அமைச்சர்)**

கூட்டுறவு—பத்திரப்பதிவு.

**திரு எஸ். டி. சோமசுந்தரம் (வருவாய்த் துறை அமைச்சர்)**

வருவாய்த் துறை—வணிக வரித்துறை- ஆயத்தீர்வை.

**திரு ஜி. ஆர். எட்மண்ட் (உணவு அமைச்சர்)**

உணவு — மீனளம் — இளைஞர் அணி— பிற்பட்டோர் நலத்துறை—தேர்தல்கள்— முன்னாள் இராணுவத்தினர் நலன்கள்.

**திரு ஆர். எம். வீரப்பன் (செய்தி-அறநிலைய அமைச்சர்)**

செய்தி-மக்கள் தொடர்புத் துறை—மாநில அரசு திரைப்படத் தொழில் நுட்பக் கல்லூரி — சுற்றுலாத் துறை — சுற்றுலா வளர்ச்சிக் கழகம்—திரைப்படங்கள் சம்பந்தப்பட்ட சட்டம் — அறநிலையத் துறை—வனத்துறை-சின்கோனா:

**திரு கே. நாராயணசாமி முதலியார் (சட்ட அமைச்சர்)**

சட்டம், நீதி மன்றங்கள்—சிறைச்சாலை— எடை அளவு குறித்த சட்டங்கள்—லேவாதேவி சட்டம்—சீட்டுக் கம்பெனிச் சட்டம்— கம்பெனிகள் பதிவு.

**திரு சி. அரங்கநாயகம் (கல்வி அமைச்சர்)**

தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட கல்வி— ஆட்சி மொழி—வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை.

**திரு கே. காளிமுத்து (உள்ளாட்சித்துறை அமைச்சர்)**

நகரசபைகள் நிர்வாகம்—சமுதாய மேம்பாட்டுத் திட்டம்— ஊராட்சிகள்— ஊராட்சி ஒன்றியங்கள்.

**திரு எஸ். இராகவானந்தம் (தொழிலாளர் நல அமைச்சர்)**

தொழிலாளர் நலன் — வீட்டு வசதி வாரியம்—குடிசை மாற்று வாரியம்— புள்ளியல் துறை—தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் அகற்று வாரியம்— நகரமைப்பு—வீட்டு வசதிக் கட்டுப்பாடு.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் (அரிசன நல அமைச்சர்)**

அரிசன நலன்—எழுதுபொருள் அச்சுத் துறை— அரசு அச்சுக்கூடம்—பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு — மலைச்சாதியினர் மேம்பாடு—கொத்தடிமை விடுவிப்பு.

**திரு சி. பொன்னையன் (போக்குவரத்து அமைச்சர்)**

நாட்டுடைமையாக்கப்பட்ட பஸ் போக்குவரத்து உள்ளிட்ட போக்குவரத்து— மோட்டார் வாகனச் சட்டங்கள்— நெடுஞ்சாலை—துறைமுகங்கள்.

**திரு பி. குழந்தைவேலு (வேளாண்மை, நீர்ப்பாசன அமைச்சர்)**

விவசாயம்—விவசாய மறுநிதி—வேளாண்மைப் பொறியியல் பிரிவு--வேளாண்மைப் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள்—சிறு பாசனம்—உள்ளிட்ட பாசனத்துறை.

**திரு கே. ராஜா முகமது (கிராமத் தொழில் அமைச்சர்)**

குடிசைத் தொழில்கள் உள்ளிட்ட கிராமத் தொழில்கள் மேம்பாடு—பால் வளம்— பால் வள மேம்பாட்டு நிறுவனம்.

**திரு. ஆர். சௌந்தரராஜன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)**

மக்கள் நல்வாழ்வு.

**செல்வி பி. டி. சரஸ்வதி (சமூக நல அமைச்சர்)**

சமூக நலத்துறை—மாதர், குழந்தைகள் நலன்—கால்நடை பராமரிப்பு—பிச்சைக்காரர்கள் விடுதி—அனாதைகள் பராமரிப்பு— வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களின் நலன்—அகதிகள் மற்றும் குடி பெயர்ந்தார் நலன்—பெண்கள் சீர்திருத்தப் பள்ளிகள் நிர்வாகம்.

**திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் (கைத்தறி, பஞ்சாலை அமைச்சர்)**

கைத்தறி—கதர்—ஜவுளி—நூல்.



# சுற்றுலா வளர்ச்சிக்கு..

## முதல்வர் உரை

"எத்தனையோ மைல்களுக்கு அப்பால் இருப்பவர்களானாலும், நெருங்கி வந்து கொண்டிருக்கும் நிலை விஞ்ஞான வளர்ச்சி மூலம் ஏற்பட்டு வருகிறது.

''தனிப்பட்டவர்களின் வளர்ச்சியோ, விஞ்ஞான முதிர்ச்சியோ மட்டும் ஒரு நாட்டின் முழு வளர்ச்சியாகாது என்று தெளிவாகியிருக்கிறது. சர்வதேச சரக்குக் கூடம் போன்ற வசதிகளை ஏற்படுத்துவதும் வளர்ச்சியின் அறிகுறியாகும். இந்த வசதி தமிழகத்துக்கோ, தென்னாட்டுக்கோ மட்டுமல்ல—இந்தியத் துணைக் கண்டத்துக்கே நன்மை பயப்பதாகும்.

''2,000 மைல்களுக்கு அப்பால் இருந்தாலும் மத்திய அரசு வேறு அரசு என்று கருதும் குறுகிய எண்ணம் கொண்டவர்களல்ல நாங்கள்.

''மக்களால் தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் அவர்கள். அவர்கள் முயற்சி வெற்றி பெற வேண்டும் என்பதில் நாங்கள் ஆர்வம் கொண்டிருக்கிறோம். அதே நம்பிக்கையோடு மத்திய அமைச்சர்கள் செயல்படுவதை எண்ணி தமிழக மக்களின் தென்னக மக்களின் சார்பில் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



''நான் முதன் முதலாக வெளி நாட்டுக்குச் சென்றபோது எனக்கு ஏற்பட்ட அனுபவம் வியப்பை அளித்தது.

''விமானத்தை விட்டு இறங்கி நான் வெளியே வருவதற்குள் எனது பெட்டி அங்கே வந்திருப்பதைக் கண்டேன். அப்படிப்பட்ட வசதிகள் இங்கேயும் உருவாகிறது என்று கருதும்போது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

''ஏற்றுமதித் துறையில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியினால் நமக்கு அந்நியச் செலாவணி அதிகம் கிடைக்கிறது. இந்த வகையில் நம்மோடு ஒத்துழைக்கும் மத்திய அரசுக்கும், அமைச்சருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

''இந்தத் தொடர்பு வளர்ந்து கொண்டே வரும்.

''நான் இங்கே விழாப் பந்தலுக்குள் நுழைந்ததும் தமிழகத்துக்கே உரிய நாதசுர இசை மங்கலமாக ஒலித்துக்கொண்டிருந்தது மனத்துக்கு மகிழ்ச்சியை அளித்தது. இப்படிப்பட்ட மகிழ்ச்சியும் புளகாங்கிதமும் இங்கே சரக்கு அனுப்ப வரும் மக்களுக்கும் ஏற்படும் வகையில் நடந்து கொள்ள வேண்டும்.

''இந்த வகையில் ஜப்பான் நாட்டின் உதாரணம் இங்குக் கவனிக்கத்தக்கதாகும்.

''அங்கே எங்கே சென்றாலும் ஒரு காட்சியைக் கண்டு மகிழ்ந்து பொழுது போக்குவதற்கு வாய்ப்பு உள்ளது.

''விமானத்தில் விரைவில் செல்ல வசதி இருந்தாலும், அவரவர்கள் சாமான்களை அவரவர்களே வெளியே எடுத்து வர வேண்டிய நிலை அங்கே இருக்கிறது.

''ஆனால், நம்நாட்டில் நாம் ஒரு சிறிய பெட்டியைக்கூட தூக்கி வருவது அவமானமாகக் கருதும் நிலை இருக்கிறது.

''மத்திய அரசின் ஒத்துழைப்புடன் சுற்றுலாத் துறை வளர்ச்சியில் நாம் ஈடுபட்டிருக்கிறோம்.

''நமது சுற்றுலாத் துறையை மற்றவர்கள் பாராட்டும் வகையில் வளர்ச்சியடையச் செய்யவிருக்கிறோம். அடுத்த இரண்டு மூன்று ஆண்டுகளில் இதற்கான தீவிரத் திட்டம் நிறைவேற்றப்படும்.

''வெளிநாட்டினர் எப்படி வருவது என்று கருதாமல், விரும்பிவரும் வகையில், தொழிலாளர்கள், அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

''இந்த வகையில் மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு மாநில அரசு முழு ஒத்துழைப்புத் தரும். மத்திய-மாநில உறவுக்கு இப்படிப்பட்ட திட்டங்கள் நல்ல இணைப்பை ஏற்படுத்துவனவாகும்.''

[சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் சர்வ தேச சரக்குக் கூடத் தொடக்க விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து..... 1-2-1978)

# சுற்றுலா மேம்பாடடைய...



—மாண்புமிகு

செய்தி-அறநிலைய அமைச்சர்

## திரு ஆர். எம். வீரப்பன்



நாட்டுக்குப் பொருள் வருவாயை ஈட்டுவதாகவும் மக்களுக்குப் பரந்த மனப்பான்மையை ஊட்டுவதாகவும் சுற்றுலாக் கலை உலக அரங்கில் சிறப்போடு ஓங்கி வருவதோடு தொழில் துறையாகவும் செழித்து வருகிறது. ''யாதும் ஊரே யாவரும் கேளிர்'', ''நாடும் நகரமும் நல்திருக்கோயிலும் பாடிப் பணிமின்'' என்னும் தமிழ்ச் சான்றோர்களின் கருத்துக்கள் சுற்றுலாக் கலையின் பெருமையைச் சுட்டிக் காட்டுவதோடு, அதை. மேலும் வளர்ப்பதற்கான ஊக்க உரைகளாகவும் நமக்கு அமைகின்றன. விருந்தினர்களை வரவேற்பதையும், சுற்றுலாக்களை மேற்கொள்வதையும் நாடுகாண் காதை, ஊர்காண் காதை என்றெல்லாம் பழைய இலக்கியங்களிலே காணலாம்.

மேலை நாடுகளில் சுற்றுலா மிகப் பெரிய அளவில் வளர்ந்து வருகிறது. ஆசிரியர்கள், மாணவர்கள், வணிகர்கள், தொழிலாளர்கள், மகளிர் என எல்லா நிலையினரும், வெளிநாடுகளில் ஆண்டுதோறும் உலகப் பயணத்தை மேற்கொள்கிறார்கள். மாதந்தோறும் தங்கள் ஊதியத்தில் ஒரு பகுதியை உலகப் பயணத்துக்காக இளைஞர்கள் ஒதுக்கிச் சேமித்து வைக்கிறார்கள். அயல் நாட்டு விருந்தினர்களின் பயணங்களோடு, செல்வம் படைத்தவர்கள் உல்லாசமாகப் பயணம் செய்கின்ற வழக்கமும் உண்டு. வணிகர்கள், அறிஞர்கள், அலுவலர்கள் தங்கள் பணிகளின் காரணமாகப் பயணம் மேற்கொள்வதும் உண்டு.

''சாமானியர்களின் சகாப்தம் என்று இந்தக் கால கட்டத்தை நாம் அழைக்க வேண்டும். ஏழைகளின் கரங்களுக்கு எட்டும்படியாக எல்லாவற்றையும் இழுக்க வேண்டும்'' என்ற பேரறிஞர் அண்ணாவின் கருத்திற்கேற்ப நடுத்தர, எளிய மக்களும் சுற்றுலாக் கலையின் வாய்ப்புக்களையும் வசதிகளையும் பெற்றாக வேண்டும் என்பதே மாண்புமிகு முதல்வர் அவர்களின் விருப்பமாகும். சுற்றுலாத் திட்டங்களை அந்த அடிப்படையில் வகுக்க இந்த அரசு கருதியுள்ளது.

வடக்கே காசியில் விசுவநாதர், தெற்கே இராமேசுவரத்தில் இராமநாதர், மேற்கே சோமநாதர், கிழக்கே ஜெகன்னாதர் என்று நான்கு நாதர்களையும் வழிபட வேண்டுமென்றெல்லாம் சமய உணர்வினைக் காட்டுவதன் மூலம் ஒருமைப்பாட்டை நமது மக்கள் பல காலமாகக் கருதியும் வந்திருக்கிறார்கள். என்றாலும், இந்நாளில் எல்லா நிலையினரும் எல்லாத் தரப்பினரும் சுற்றுலாச் செல்லும் வாய்ப்புக்களைப் பெறும் நிலைமைகள் உருவாக்கப்பட வேண்டும்.

ஏராளமான சுற்றுலா மையங்களையும் எழில் குலுங்கும் இடங்களையும் தமிழகம் கொண்டு விளங்குகிறது. வான் முட்டும் கோபுரங்களைக் கொண்ட வழிபாட்டு ஆலயங்களும், அற்புதச் சிற்பக் கலைக் கூடங்களும், வண்ணக் களஞ்சியங்களாக அருவிகளும், அடவிகளும், வாழும் வன விலங்குகளும், கோல எழில் கொழிக்கும் குறிஞ்சி நகர்களும், நலப் புகலிடங்களும் நெஞ்சைக் கவரும் நீண்ட கடற்கரைப் பகுதிகளும், வளம் கொழுமிய நம் தமிழகத்தை அலங்கரிக்கின்றன.

மேலை நாட்டினரைப் போலவே சுற்றுலாப் பலன்களையும் அனுபவ வளர்ச்சியையும் நம் நாட்டினரும் பெற வேண்டும். மாவட்டந்தோறும் சுற்றுலா மையங்களை ஏற்படுத்தி வார விடுமுறைகளை நமது மக்களில் எல்லா நிலையினரும் அந்த மகிழ்விடங்களுக்குச் செல்வதன் மூலம் ஓய்வைப் பயனுள்ளதாக்கிக் கொள்ள வேண்டும். நம்மோடு ஒரு மாவட்டத்தில் பல ஆண்டுகளாக வாழ்பவர்களில் பலர்கூட இன்னொரு

மாவட்டத்தின் சிறப்புக்களையோ இயல்புகளையோ கூட அறிந்து கொள்ளாமல் இருக்கின்ற நிலைமைகளை மாற்ற வேண்டும்.



நாம் அறியாத இடங்கள், தெரியாத தலங்கள், விளம்பரப் படுத்தாமற் போன கலைக்கூடங்கள் என்று விடுபட்டுள்ள பல இடங்களை மக்களுக்கு அறிமுகப்படுத்தும் பணியையும் அரசு செய்யக் கருதியுள்ளது. சிற்பங்களைக் கொண்ட சிற்றூராகப் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளி உலகிற்குத் தெரியாதிருந்த மத்தியப் பிரதேசத்திலுள்ள கஜேராஹோ சுற்றுலாத் துறையின் தொடர்பினால் இலட்சக்கணக்கான அயல் நாட்டுப் பயணிகளைக் கவரும் அழகு புரியாக இன்று அமைந்த தோடு, ஆண்டுக்கு ரூ. 60 இலட்சம் வருவாயையும் ஈட்டித் தருகிறது. இதனால் சுற்று வட்டாரத்தில் பொதுமக்களுக்குப் பெரும் பயன்களும் வாழ்க்கைக்கான வேலை வாய்ப்புக்களும் விளைந்துள்ளன. இந்த வகையில் இதுவரை அறிமுகமாகாத தமிழகத்தில் உள்ள இடங்களைக் கண்டறிந்து சுற்றுலாத் துறை ஆவன செய்ய உள்ளது. அவ்வகையில் தென்னார்க்காடு மாவட்டத்தில் சிதம்பரத்தை அடுத்துள்ளதும் பேரறிஞர் அண்ணாவின் சிந்தை கவர்ந்த கடற்கரைப் பகுதியான பிச்சாவரத்தையும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரியையும் தமிழகச் சுற்றுலாத் துறை மேம்படுத்த முற்பட்டுள்ளது.

இனிவரும் ஆண்டுகளில் சுற்றுலாவைப் பெருக்கவும் உள்நாட்டு வெளிநாட்டுப் பயணிகள் வந்திறங்கும் பகுதியாகத் தமிழகத்தை வளர்ச்சியுறச் செய்யும் வகையில் திட்டங்களை வகுக்க வேண்டும். 1980-ல் 10 இலட்சம் (1 மில்லியன்) வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வருகை தருவார்கள் என்று இந்திய அரசு கணித்துள்ளது. இப்போதைய சுற்றுலா வளர்ச்சிப் பாங்கின் அடிப்படையில் இதில் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் தமிழ்நாட்டிற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. உள்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளையும் நாம் இவர்களோடு கருத்திற் கொள்ள வேண்டும்.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்தவும், சுற்றுலாப் பயணிகளுக்கு அதிக வசதிகளைச் செய்து கொடுக்கவும், வசதிகளை மேலும் விரிவுபடுத்தவும், பரந்த கண்ணோட்டத்தில் திட்டமிடுதல் வேண்டும்.

நமது மாநிலத்தில் 1971 மே திங்களில் சுற்றுலாத் துறை அமைக்கப்பட்டது. சுற்றுலா இயக்குநர் அலுவலகமும், சுற்றுலாச் செயலகத் துறையும் இணைந்து தலைமைச் செயலகத்தின் பகுதியாகப் பணி ஆற்றி வருகிறது. சுற்றுலா மாளிகைகள் சுற்றுலா சொகுசுப் பேருந்துகள் நிருவகிக்கும் பணி முதலிய வணிக முறை நடவடிக்கைகள் 1971 ஜூலையில் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

செயலகத்தோடு இணைந்து செயல்படும் சுற்றுலாத் துறையின் கீழ் மதுரை, உதகை, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், மாமல்லபுரம், சென்னை ஆகிய இடங்களில் சுற்றுலா அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சுற்றுலா அலுவலகங்கள் பயணிகளுக்குச் சுற்றுலாத் தகவல்களை அளிப்பதோடு, சுற்றுலா மேம்பாட்டிற்கான விளம்பரத்திலும், வளர்ச்சிப் பணிகளிலும், களப் பிரிவுகளாகச் செயல்பட்டு வருகின்றன. மதுரை, திருச்சிராப்பள்ளி, இராமேசுவரம் இரயில் நிலையங்களிலும் மற்றும் கொடைக்கானலிலும் சுற்றுலாத் தகவல் நிலையங்கள் பணியாற்றி வருகின்றன. சென்னை சென்ட்ரல் இரயில் நிலையத்திலும், கோயமுத்தூர் இரயில் நிலையத்திலும், புது டில்லியிலும், சுற்றுலாத் தகவல் நிலையங்கள் விரைவில் தொடங்கப் பட உள்ளன.

## இளைஞர் விடுதி:

இளைஞர்கட்குக் குறைந்த செலவில் தங்குமிட வசதியை அளிக்கும் நோக்கத்துடன் மத்திய அரசு அடையாறில் ஓர் இளைஞர் விடுதி கட்டுவதற்கு ரூ. 5.25 இலட்சம் வழங்கியது. மாநில அரசு ரூ. 1.5 இலட்சம் மதிப்புள்ள நிலத்தை அதற்கு அளித்தது. மத்திய அரசின் நோக்கப்படி உள் நிர்வாகக் குழுவினரின் வழிகாட்டுதலுடன் 1975 ஜூலையிலிருந்து இவ் விளைஞர் விடுதியை வருவாயோ இழப்போ இன்றி மாநில அரசு நடத்தி வருகின்றது. இளஞ் சுற்றுலாப் பயணிகளை ஊக்குவிக்கும் நோக்கத்தோடு உதகையில் இளைஞர் விடுதியினைத் திறப்பதற்கான வாய்ப்பு வசதிகளை அரசு ஆய்வு செய்து வருகிறது.

## சுற்றுலா மாளிகைகள்:

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் உதகையில் படகுவீடு நடத்துவதுடன், கீழ்க்கண்ட சுற்றுலா மாளிகைகளையும் நடத்தி வருகின்றது:—

சுற்றுலா மாளிகை, உதகை; சுற்றுலா மாளிகை, திருச்சி; சுற்றுலா மாளிகை, மதுரை; சுற்றுலா மாளிகை, கன்னியாகுமரி; கேப் விடுதி, கன்னியாகுமரி; சுற்றுலா மாளிகை, திருச்செந்தூர்; சுற்றுலா மாளிகை, கொடைக்கானல்; சுற்றுலா மாளிகை, ஏர்க்காடு; சுற்றுலா மாளிகை, ஒகேனக்கல்; சுற்றுலா மாளிகை, இராமேசுவரம்; கடற்கரை மையம், மாமல்லபுரம்; இராஜா ஒய்வு விடுதி, தஞ்சாவூர்; சுற்றுலா மாளிகை, சிதம்பரம்;

சுற்றுலா வளர்ச்சிக் கழகம் கோயமுத்தூர், நாகப்பட்டினம், குற்றாலம், காஞ்சிபுரம், பிச்சாவரம், முதுமலை ஆகிய இடங்களில் விரைவில் சுற்றுலா மாளிகைகளை அமைப்பதற்குத் திட்டமிட்டுள்ளது:—

தேசிய நெடுஞ்சாலைகளில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இராணிப்பேட்டையிலும் தென்னார்க்காடு மாவட்டத்தில் உளுந்தூர்ப் பேட்டையிலும் சாலை விடுதிகள் கட்டப்பட்டு வருகின்றன. ஒசூரில் இத்தகைய ஒரு சாலை விடுதி ( Motel ) விரைவில் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தியச் சுற்றுலா வளர்ச்சிக் கழகம் காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சாவூர் முதலிய நகரங்களிலுள்ள சுற்றுலா விடுதிகளையும், மாநில அரசுக்கு ஏட்டு மதிப்பீட்டின்படி (Book Value) அளிப்பதற்குத் தயாராக உள்ளது. மாநில அரசு அச்சுற்றுலா விடுதிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது.

**பூம்புகாரும், கட்டபொம்மன் நினைவிடமும் :**

காவிரிப்பூம் பட்டினத்தில் உள்ள பூம்புகார் அமைப்பும், பாஞ்சாலங்குறிச்சியிலுள்ள கட்டபொம்மன் நினைவிடமும் செய்தி மக்கள் தொடர்புத் துறையிலிருந்து, சுற்றுலாத் துறையின் பொறுப்புக்கு மாற்றப்பட்டுள்ளன. உள்ளூர்ச் சுற்றுலாப் பயணிகளை அதிக அளவில் இவை ஈர்த்து வருகின்றன.

**உதகை ஏரி :**

உதகையின் ஏரிப் பகுதியை மேலும் கவரக்கூடிய வகையில் மேம்படுத்தி அழகுபடுத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கட்டடக்கலையில் முன்னணியில் உள்ள சென்னை நிறுவனம் ஒன்றை இவ் ஏரியை அழகுபடுத்துவதற்கான பெருந்திட்டம் ஒன்றைத் (Master plan) தயாரிக்க அரசு அமர்த்தி உள்ளது. இவ் ஏரிப் பகுதியை மேம்படுத்தும் திட்டத்திற்கு ரூ. 16 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1976-77ஆம் ஆண்டில் ரூ. 1.56 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 6.69 இலட்சம் செலவு செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் நடப்பு ஆண்டில் ரூ. 2.5 இலட்சமும் 1978-79-ஆம் ஆண்டில் மீதித் தொகையையும் அளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**ஏர்க்காடு ஏரி :**

ஏர்க்காட்டில் உள்ள ஏரியையும் அதன் சுற்றுப் புறத்தையும் அழகுபடுத்தி, சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் நோக்கத்தோடு திட்ட மதிப்பீட்டுடன் அறிக்கை ஒன்று தயாரிக்கக் கட்டடக்கலை நிறுவனம் ஒன்று அமர்த்தப்பட்டது. இந்நிறுவனம் பல்வேறு திட்டங்களையும் ப்டிப்படியாகச் செயல்படுத்த ரூ. 36.35 இலட்சம் தோராய மதிப்பீட்டில் அறிக்கை ஒன்றை அரசுக்கு வழங்கியுள்ளது. 1977-78 ஆம் ஆண்டில் முதல் கட்டப் பணியாக மேற்கொள்ள ரூ. 2.60 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. 1978-79-ஆம் ஆண்டில் இரண்டாம் கட்டப் பணியாக ரூ. 1.5 இலட்சம் அனுமதிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**கொடைக்கானல் ஏரி :**

கொடைக்கானல் ஏரியை மேம்படுத்தி அதிக அளவில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் பொருட்டுக் கவர்ச்சியுள்ள வகையில் அப்பகுதியைக் கவினுள்ள தாக்கத் திட்டங்களும் மதிப்பீடும் அடங்கிய திட்ட அறிக்கையைத் தயாரித்துக் கொடுப்பதற்கு வேறொரு கட்டடக்கலை நிறுவனம் அமர்த்தப்பட்டது. மூன்று கட்டங்களில் செயலாக்கும் வகையில் ரூ. 25,64,100-க்கான தோராய மதிப்பீட்டில் ஒரு விரிவான அறிக்கையைத் திட்ட மதிப்பீட்டுடன் இந்நிறுவனம் அளித்தது. முதல் கட்டமாகச் சில சிறு பணிகளை மேற்கொண்டு இவ் ஏரியை அழகுபடுத்துவதற்காக 58,100 ரூபாய் 1977-78-ஆம் ஆண்டில் வழங்கப்பட்டது. இரண்டாவது கட்டத்தில் இன்னும் சில பெரிய பணிகளைச் செயலாக்குவதற்கு ரூ. 2.03 இலட்சம் 1978-79-ஆம் ஆண்டில் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**உதகை, கொடைக்கானலில் மேலும் வசதிகள் :**

கொடைக்கானலில் ''கோக்கர்ஸ் வாக்'' என்னும் இடத்திலும், ''குறிஞ்சி ஆண்டவர் கோயில்'' அருகிலும் ஆக இரண்டு தொலை நோக்காடிகள் ரூபாய் 1,60,000 செலவில் அமைக்கப்பட்டன. கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப் பயணிகள் இத் தொலை நோக்காடிகளின் உதவியால் பழனி ஆலயத்தின் வடக்குப் பகுதியையும், வைகை அணையின் பொலிவான காட்சியினையும் கண்டு களிக்கலாம். இத் தொலைநோக்காடிக் கருவிகளை அங்கே அமைத்ததன் மூலம் கொடைக்கானலுக்கு அதிக அளவில் சுற்றுலாப் பயணிகள் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது. நீலகிரி மாவட்டத்தில் 1978-79 ஆம் ஆண்டில் இத்தகைய தொலை நோக்காடிகள் இரண்டு ரூ. 2.14 இலட்சம் செலவில் நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளன. உதகை வரும் சுற்றுலாப் பயணிகளின் தேவையை ஈடு செய்யும் வகையில் பல படுக்கைகள் கொண்ட கூடமும், ஓய்வு விடுதி ஒன்றும் ரூ. 10 இலட்சம் செலவில் கட்டும் திட்டமும் உத்தேசத்தில் உள்ளது.

**மாமல்லபுரம் மேம்பாடு :**

ஐக்கிய நாடுகளின் மேம்பாட்டுத் திட்ட நிபுணர் குழுவினர் அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்தி மாமல்லபுரத்தின் சுற்றுலாச் சிறப்பினைப் பேணிககாத்து மேலும் மேம்படுத்த இவ்வரசு முழு முயற்சி எடுத்து வருகின்றது. மாமல்லபுரம் மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்ட இயக்குநர் குழு, ஐக்கிய நாடுகள் மேம்பாட்டுத் திட்ட நிபுணர்கள் அளித்த பரிந்துரைகளைச் செயல்படுத்துவதற்கான பணிகளில் ஈடுபட்டுள்ளது. புதுடெல்லியில் 1977-ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில்



நடைபெற்ற மாநிலச் சுற்றுலா அமைச்சர்கள் மாநாட்டில் மாமல்லபுரத்தை அனைத்துலகச் (சுற்றுலாக்) கடற்கரை மையமாக ஆக்குவதற்கு மத்திய உதவிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

1977-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் மத்திய அரசின் சுற்றுலா, சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் மாமல்லபுரத்தைப் பார்வையிடுகையில் இக்கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டது. அதற்கு அவர் பதிலளிக்கையில் விரிவான மதிப்பீடுகளுடன் குறிப்பிட்ட திட்டங்களைத் தீட்டி மத்திய அரசின் ஆய்வுக்கு அனுப்பி வைக்கும்படி கூறினார். இதைத் தொடர்ந்து மாமல்லபுர மேம்பாட்டிற்கான திட்டங்கள் தீட்டித்தர தமிழக அரசு கட்டடக்கலை நிறுவனம் ஒன்றை அமர்த்தியுள்ளது.

இடைக்காலத்தில் கீழ்க்கண்ட திட்டங்களை நிறைவேற்ற ஆண்டின் நிதிநிலை அறிக்கை மதிப்பீட்டில் ரூபாய் 3.10 இலட்சம் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடற்கரைக் கோயிலை அடுத்துள்ள நிலத்தைக் கையகப்படுத்தி, காற்றுத் தடுப்பாகப் பசுமையான சவுக்குத் தோப்புகளை எழிலுற வளர்த்தலும், எளிய, குறைந்த வருமானமுள்ள சுற்றுலாப் பயணிகளுக்கேற்ற வகையில், பெரிய அளவில் தகுந்த வசதிகளுடன் ஓய்விடம் ஒன்றை அமைத்தலுமாகும்.

## சுற்றுலாத் திட்டங்கள் :

தமிழ்நாட்டின் எல்லாச் சுற்றுலா மையங்களிலும் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு இத்துறை பல செயற்குறிப்புகளை ஆய்வு செய்து வருகின்றது. உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளுக்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதற்கு அரசு மிகவும் ஆவலாக உள்ளது. தொடக்கத்திலேயே நான் குறிப்பிட்டதுபோல, பொது மக்கள் பார்வையில் படாத, சிறப்பு மிக்க பல இடங்கள் தமிழகத்திலுள்ளன. அத்தகைய இடங்களாகிய தென்னார்க்காடு மாவட்டம் சிதம்பரத்திற்கு அருகிலுள்ள பிச்சாவரம், வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள ஏலகிரி, புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள ஆவுடையார் கோயில் ஆகிய இடங்களை மேம்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

## சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரிப்பு

**1978** மார்ச் மாதத்தில் அயல்நாட்டுச் சுற்றுலாப் பயணிகளின் வருகை முந்தைய ஆண்டு மார்ச் மாதத்தைக் காட்டிலும் 16.5 சதவிகிதம் உயர்ந்துள்ளது. 1978 மார்ச் மாதத்தில் 64,481 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்தனர். 1977—மார்ச்சில் வந்தவர்களின் எண்ணிக்கை 55,358.

1977 முதல் மூன்று மாதங்களில் 7,88,095 சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இது 1977-ல் இதே மூன்று மாத காலத்தில் இருந்ததைவிட 1.67 சதவிகிதம் அதிகம்.

## விளம்பரம்:

இம்மாநிலத்திற்குச் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும்பொருட்டு விளம்பரங்கள் அளித்தல், பொருட்காட்சிகள் நடத்துதல், திரைப்படங்கள், திரையிடுதல், சுற்றுலாக் கையேடுகளை அச்சிட்டு வழங்குதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தமிழகத்தின் சுற்றுலாச் சிறப்புக்களை விளக்கும் வகையிலும், சுற்றுலாப் பயணிகளுக்குத் தமிழகத்தில் உள்ள வசதிகளைப் பரப்பும் வகையிலும் சுற்றுலாத் தொடர்பான இதழ்களிலும், நாளிதழ்களிலும் விளம்பரம் கொடுத்து வருகிறது. சுற்றுலாவின் முக்கியத்துவத்தைத் தமிழக மக்கள் உணரும் வகையிலும் தமிழகச் செய்தித் தாள்களிலும், இதழ்களிலும், விளம்பரம் வழங்கப்படுகிறது.

## பொருட்காட்சிகள் :

சென்னையிலும் மற்ற மாநிலங்களிலும் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் தமிழகத்தின் சிறப்பு அம்சங்களை எடுத்துக் காட்டும் வகையில் பொருட்காட்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சென்னையில் சனவரி-பிப்ரவரி மாதங்களில் சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறையும் பங்கேற்று வருகின்றது. 1977-ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் புது டில்லியில் நடைபெற்ற தேசிய வேளாண்மைப் பொருட்காட்சியில் சுற்றுலாத் துறை பங்கு கொண்டது. 1978 சனவரியில் புது டில்லியில் நடைபெற்ற பசிபிக் கடற்கரை நாடுகளைச் சார்ந்த பயண முகவர்களின் மாநாட்டிலும் இத்துறை பங்கேற்றது. சென்ற ஆண்டு ஆக்ராவில் நடைபெற்ற இந்தியப் பயண முகவர் குழுவினரின் கூட்டத்தில் சிறிய பொருட்காட்சியை அமைத்ததன் வாயிலாக 'ஆலன் கரீம்பாய் சுழற் கோப்பையை' இத்துறை வென்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது.



**திரைப்படங்கள் :**

இத்துறை பெல்ஜிய நாட்டு நிபுணர் ஒருவரை நியமித்து ஒரு வண்ணத் திரைப்படம் எடுத்துள்ளது. வெளிநாடுகளிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களுக்கு அப்படம் வழங்கப்பட்டுள்ளது. கேரள, கர்நாடக மாநில அரசுகளின் கூட்டுடன் மற்றொரு வண்ணப்படமும் தயாரிக்கப்பட்டுள்ளது. மேலும் தமிழ்நாடு திரைப்படப் பிரிவின் வாயிலாகச் சில படங்களைத் தயாரிப்பதற்கு இத்துறை திட்டமிட்டுள்ளது.

**நிழற்படம் :**

இத்துறையின் நிழற்படப் பிரிவில் சுற்றுலாத் தொடர்பான முக்கிய இடங்களைப் பற்றிய சாதாரண நிழற்படங்கள், வண்ணப் படங்கள் சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ளன. நிழற்படங்கள் தமிழ்நாட்டைப் பற்றிய கட்டுரைகளுடன் பத்திரிகைகளில் வெளியீடுவதற்காகக் கொடுக்கப்படுகின்றன. இத்துறை வெளியிடும் சுற்றுலாக் கையேடுகளிலும் இப்படங்கள் அதிக அளவில் பயன்படுத்தப்படுகின்றன. சிறப்பு விருந்தினர்களுக்கும், பயண முகவர்களுக்கும், பயண எழுத்தாளர்களுக்கும் காண்பிப்பதற்காகச் 'சிலேடு தொகுப்பும்' இத்துறையிடம் உள்ளது.

**சுற்றுலாக் கையேடு**

பலதரப்பட்ட சுற்றுலாக் கையேடுகள், வண்ண அஞ்சலட்டைகள், சுவரொட்டிகள் முதலியன ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பெற்று அவைகள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலுள்ள இந்தியச் சுற்றுலா அலுவலகங்களிலும், ஏர் இந்தியா முதலிய பிற விமான அலுவலகங்கள், பயண முகவர்கள் ஆகியோருக்கும் வழங்கப்பட்டு வருகின்றன.

**விருந்தோம்பல் :**

பயண எழுத்தாளர்கள், பயண முகவர்கள் ஆகியோரை வரவேற்று விருந்தோம்புவது சுற்றுலா வளர்ச்சியின் மிக முக்கிய அம்சமாகும். எனவே, இத்திட்டத்தில் தனிக்கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. ''தென்னகத்தை நோக்கி'' என்னும் திட்டத்தின் கீழ் 1977 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்த 60-க்கும் மேற்பட்ட பயண எழுத்தாளர்கள் தென்னகத்துக்கு வருகை தந்தார்கள். சென்னையில் இந்தப் பயண எழுத்தாளர்களுக்கு இத்துறை சிறப்பான வரவேற்பு அளித்தது.

1978 சனவரியில் பசிபிக் கடற்கரை நாடுகளைச் சார்ந்த முகவர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்னை வழியாகச் சென்ற சார்பாளர்களுக்கும் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. தமிழகத்தின் பல்வேறு பண்பாட்டுச் சிறப்புகளை நேரடியாகக் கண்டு செல்லும் இவ் விருந்தினர்கள் தங்கள் நாட்டுச் செய்தித்தாள்கள், இதழ்கள் ஆகியவற்றில் தமிழகத்தைப் பற்றி எழுதிப் பலரும் அறிந்து நம்நாடு வர வழி செய்கின்றனர். இவ்வகையில் செலவாவதைக் காட்டிலும் நமக்குக் கிட்டும் விளம்பரம் பெரியதாகும்.

கண்ணுக்கும் கருத்துக்கும் கவர்ச்சியூட்டுவதோடு நாட்டின் கருவூலத்திற்குப் பொருளும் சேர்க்கின்ற சுற்றுலாத் துறையில் இவ்வாறு பல்வேறு திட்டங்களை இணைத்துச் சுற்றுலாத் துறையை விரிவுபடுத்த அரசு கருதுகிறது. எல்லாத் தரப்பினரும் நிறைந்த ஓய்வை நுகரவும், நெஞ்சுக்கு நிம்மதியைத் தேடிக் கொள்ளவும் உணர்வுகளால் உயர்வடையவும், தாயகத்தின் வரலாற்றுப் பெருமைகளையும், தனிப் பெரும் கலைக் கூறுகளையும், அறிந்து, அனுபவித்து எழுச்சியும் ஏற்றமும் பெற, சுற்றுலாத் துறை செயல்பட்டு வருகிறது.

[செய்தி-சுற்றுலா திரைப்படப் பிரிவு, கொள்கை விளக்கக் குறிப்பிலிருந்து.]

## எழில் கொஞ்சும் ஏலகிரி மலை

ஏளிய மக்களின் 'உதகை' என்று போற்றப்படும் இடமாகும் ஏலகிரி மலை.

ஏலகிரிமலை வடஆர்க்காடு மாவட்டம், திருப்பத்தூர் வட்டத்தில் உள்ள ஊராகும். ஜோலார்ப்பேட்டை இரயில்வே சந்திப்பிலிருந்து 23 கிலோ மீட்டர் தொலைவிலும், சென்னையிலிருந்து 233 கிலோ மீட்டர் தொலைவிலும் உள்ளது. சுற்றுலாப் பயணிகளைக் கவரும் இம்மலை கிழக்கு மலைத் தொடரில் தனியானதொரு இடமாக அமைந்துள்ளது. ஏலகிரி மலை கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 1000 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

ஏலகிரி மலையில் 'ஆறுமுகம் அருவி' எனப்படும் ஓர் அருவியும் அதனருகில் குமரன் உறையும் கோட்டமும் உள்ளன. உல்லாசப் பயணிகளுக்கு இம்மலை ஓர் அழகான பொழுதுபோக்கு இடமாகும். ஏலகிரி மலைக்குள்ள இன்னொரு சிறப்பு, ஆண்டு முழுவதும் இங்கு வந்து இயற்கை எழிலைக் கண்டு களிக்கலாம். இங்கு ஆண்டுதோறும் 90 செண்டி மீட்டரிலிருந்து 110 செண்டி மீட்டர் வரை மழை பெய்கிறது.

இப்பொழுது ஏலகிரி மலையில் அரசு அலுவலர்களும் சுற்றுலாப் பயணிகளும் தங்குவதற்கு வசதியாக நெடுஞ்சாலைத் துறையினரின் பயணியர் மாளிகை ஒன்றுதான் உள்ளது. ஏலகிரி மலையைக் காணவரும் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்குப் போதுமான இட வசதிகள் இல்லை.

முதல் தேவையாக ஏலகிரி மலைப் பகுதியில் சுற்றுலாப் பயணிகள் தங்குவதற்கு வசதியாகப் படுக்கைகள் கொண்ட கூடம் ஒன்றைக் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. இது மலைப்பகுதியான தால் இக்கூடத்திற்கு உறுதிப்படுத்தப்பட்ட கற்கலவையினால் மேற்கூரை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வளரும் தமிழகம் என்ற தலைப்பில் தமிழகத்தின் சமூகப் பொருளாதாரச் சூழ்நிலைகளை விளக்குவதற்கான வாய்ப்பினை வானொலி நிலையத்தார் வழங்கியிருக்கிறார்கள்.

பொருளாதார முன்னேற்றத்திற்கும் சமுதாய மேம்பாட்டுக்கும் ஓர் இறுக்கமான தொடர்பு இருப்பதை நாம் ஏற்றுக்கொண்டாக வேண்டும்.

ஒரு சமுதாயத்தின் மேம்பாட்டை நிர்ணயிக்கிற அளவுகோலாகப் பொருளாதார வளர்ச்சி அமைந்திருக்கிறது. இலக்கிய வளர்ச்சியையும் தொன்மையான வரலாற்றுச் சிறப்புகளையும் மட்டுமே கொண்டிருக்கிற சமுதாயம் வளர்ச்சி அடைந்த சமுதாயமாகக் கருதப்பட முடியாது.

திற்குச் செல்லவும் இறுதியான இலட்சிய இலக்கை அடையவும் தமிழக அரசு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலைமையில் செயல்படுத்தி வருகிற வளர்ச்சித் திட்டங்களின் சில முக்கியமான பகுதிகளை விளக்க விரும்புகிறேன்.

நம்முடைய பொருளாதார வளர்ச்சிக்கு விவசாயியும், நெசவாளியுமே ஆணிவேர்களாக இருக்கிறார்கள். வேளாண்மைக்கு அடுத்தபடியாக மிகப் பெரிய தொழிலாக, பெரும்பான்மையான மக்களுக்கு வாழ்வளிக்கும் தொழிலாக, நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடித்தளமாகவும் அடிப்படையாகவும் நின்று உதவுகின்ற தொழிலாகக் கைத்தறித் தொழில் அமைந்திருக்கிறது. நாட்டின் மிகப் பெரிய குடிசைத் தொழிலாக விளங்குவதும் கைத்தறி நெசவுத் தொழிலே; நம்நாட்டில் 60 பேர்களுக்கு ஒருவர் வீதம் கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இந்திய நாட்டில் உள்ள 35.63 இலட்சம் கைத்தறிகளில் தமிழ்நாட்டில் மட்டும் 5.6 இலட்சம் கைத்தறிகள் உள்ளன. தமிழகத்தில் சுமார் 20 இலட்சம் தொழிலாளர்கள் இதில் ஈடுபட்டுள்ளனர்.

மின்சாரம், சிமெண்ட், எஃகு போன்ற தட்டுப்பாடு ஏற்படக் கூடிய பொருள்களை எதிர்பார்க்காமல், குறைந்த மூலதனத்தில் செய்யக் கூடிய தொழிலாக இது இருப்பதால், அரசின் கவனத்தைத் தற்போது வெகுவாகக் கவர்ந்துள்ளது.

பழம்பெருமைகளை எடுத்துக் காட்டி அனுதாபத்தின் அடிப்படையில் மக்களின் ஆதரவை நம்பி இருக்கும் நிலையை மாற்ற அரசு எடுத்துவரும் நடவடிக்கை

# ஆரோக்கியமான போட்டி

நோயாளிக்குப் பட்டாடை தைத்துப் போட்டது போலத் தான் இது இருக்கும்.

ஒரு முழுமையான பொருளாதார வளர்ச்சியை நோக்கி இன்றையத் தமிழகம் எப்படித் தவழ்ந்து, வளர்ந்து செல்கிறது என்பதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். முப்பதாண்டுக் காலச் சுதந்தர இந்தியாவில் தமிழகத்தின் பொருளாதாரம். நியாயமான வேகத்துடன் வளர்ச்சியடைந்து விடவில்லை. 1947-ஆம் ஆண்டிலிருந்து 1969 ஆம் ஆண்டுவரை தமிழகத்தின் பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்கள் ஒரு சீரான நோக்கில் ஒருவாக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வந்ததால் இந்தியாவிலேயே ஒரு குறிப்பிடத்தக்க இடத்தை, தொழில்வளர்ச்சியில் தமிழகம் பெற முடிந்தது. முன்னேறிய மூன்று மாநிலங்களில் ஒன்றாகத் தமிழகம் தொழில் வளர்ச்சியில் இடம் பெற்றிருந்தது. தற்பொழுது 12 வது இடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இந்த இடத்திலிருந்து முன்னேறி, முதல் இடத்



மாண்புமிகு
கிராமத் தொழில்
அமைச்சர்
கா. இராசா முகமது

பெரிய திருப்பு முனையாக அமைந்திருக்கிறது. தற்போது கைத்தறித் துணியின் தரம், வகைகள், ரகங்களை உயர்த்தி ஆலைத்துணிகளுடன் விலை, ரகம், தரத்தில் ஒப்பிடக்கூடிய வகையில் அரசு பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. மக்களின் தேவைகளையும், விருப்பத்தையும் கவனத்தில் கொண்டு, புதிய வகைகளில் வண்ணத்துணிகளைத் தயாரிக்கும் பணியில் தமிழக அரசு தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. இதற்கான வடிவமைப்புப் பணி மையம் ஒன்றினை ரூ. 3.5 இலட்சம் செலவில் மதுரை மாநகரில் கோ-ஆப்டெக்ஸ் நிறுவியுள்ளது.

கூட்டுறவுச் சங்கங்களில் செயல்படும் சாயச்சாலைகள் தவிர, தரமான கெட்டிச் சாயத்தின் மூலம் துணியின் தரத்தையும், கவர்ச்சியையும் அதிகரிக்கத் தமிழ்நாட்டில் சேலம்-கோவை-மதுரை-திருநெல்வேலி - திருச்சி-ஆகிய இடங்களில் ரூ. 60 இலட்சம் செலவில் 5 நவீன சாயத் தொழிற்சாலைகளை நிறுவ அரசு ஏற்பாடு செய்திருக்கிறது.

கைத்தறித் தொழிலை இலாபகரமான முறையில் நடத்தி, நெசவாளர்களின் வருவாயைப் பெருக்கிட, கூட்டுறவுச் சங்கங்களை விரிவாக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நெசவாளர்களில் 60 சதவீதத்தினரைப் படிப்படியாகக் கூட்டுறவு அமைப்பின் கீழ் கொண்டுவருவது அரசின் முக்கிய நோக்கமாகும். புதிய சங்கங்களை அமைப்பது, நலிந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துவது, தறியில்லாத கூலி நெசவாளர்களுக்குத் தொழிலியல் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பது ஆகியன அரசின் திட்டங்களாக உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

தனியார் துறையில் செயல்படும் 22 ஆயிரம் நெசவாளர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்பு-அதிகக் கூலி கிடைக்கக்கூடிய வகையில் கைத்தறி தீவிர வளர்ச்சி நிலையங்கள், கைத்தறி ஏற்றுமதி ரக உற்பத்தி நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ரூ. 40 இலட்சம் செலவில் 1,000 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கக் கரூரில் ஏற்றுமதி உற்பத்தித் திட்டம் செயல்பட்டு வருகிறது. ரூ. 77 இலட்சம் செலவில் 5,000 நெசவாளர்களுக்கு வாழ்வு தரும் வகையில் கைத்தறி தீவிர வளர்ச்சித் திட்டம் காஞ்சிபுரத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

ரூ. 106 இலட்சம் செலவில் 5,000 நெசவாளர்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்க ஈரோட்டில் தீவிர வளர்ச்சித் திட்டம் ஒன்றை அரசு செயல்படுத்தி வருகிறது. ரூ. 32 இலட்சம் செலவில் 1,000 நெசவாளர்களுக்கு நிரந்தரமாக வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில் ஏற்றுமதி உற்பத்தித் திட்டம் குறிஞ்சிபாடியில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் ரூ. 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 10,000 நெசவாளர்களுக்கு நம்பிக்கையான தொழிலையும் நலமான வாழ்வினையும்-நல்கும் வண்ணம் மதுரையிலும், சேலத்திலும் தீவிர வளர்ச்சித் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

இப்படி நுட்பமான திட்டங்களைச் செயல்படுத்துவதிலும், நூதனமான முறைகளைக் கையாள்வதிலும் அரசு எடுத்து வரும் அக்கறையின் விளைவாகக் கைத்தறித் தொழில் இயக்கத்தில் புதிய நம்பிக்கை மையம் கொண்டு, உருவாகி வருவதை நெசவாளர் பெருங்குடி மக்கள் உணர்ந்து கொள்வார்கள் என்றே நம்புகிறேன். மேலும் கிராமங்களில் நிலவிவரும் ஏழ்மை நிலையைப் போக்கவும், மனித உழைப்பிற்கு முதலிடம் தந்து, ஆங்காங்கே கிடைக்கிற மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, கிராமப் பகுதியில் உள்ள மக்களின் தேவைகளை நிறைவேற்றும் வகையில் கிராமத் தொழிலை ஊக்குவிக்கும் திட்டத்தைக் கதர்-கிராமத்தொழில் வாரியத்தின் மூலமாக அரசு செயல்படுத்தி வருகிறது.

உண்மையான பொருளாதார வளர்ச்சி என்பதைக் கிராம மக்களின் வாங்கும் சக்தியை வைத்தே கணக்கிட வேண்டும். வாங்கும் சக்தியைப் பெருமளவிற்கு இழந்து நிற்கும் கிராமங்களையும் வாங்கும் சக்தியை அளவுக்கு அதிகமாகத் தேக்கி வைத்திருக்கும் நகரங்களையும் இன்றைய இந்தியப் பொருளாதாரம் வளர்த்துவிட்டிருக்கிறது, இதனால் தான் நகரத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் வளர்ச்சியை நாட்டின் பொருளாதார வளர்ச்சியாகப் பார்க்க முடியாமல் ஒரு பகுதியில் மட்டுமே ஏற்பட்டிருக்கிற ஆபத்தான வீக்கம் என்று கருத வேண்டிய நிலை வந்துவிட்டது. குறைந்த மூலதனத்தில் குடிசைத் தொழில்களைக் கிராமங்களில் நிறுவி, அதிகமான அளவிற்கு வேலை வாய்ப்பை உண்டாக்குவதன் மூலம், திட்ட முதலீட்டுச் செலவைப் பரவலாக்கி, அனைத்துப் பகுதி மக்களும் சீரான நன்மைகளைப் பெறத் தமிழக முதல்வர் திட்டமிட்டுச் செயல்பட்டு வருவதை நாம் நன்கு அறிவோம்.

சிறு தானியங்களையும், பருப்பு வகைகளையும் செயல்முறைப்படுத்துதல், கிராமச் செக்கு எண்ணெய் உற்பத்தி செய்தல், கிராமத் தோல் பதனிடு தொழில் செய்தல், தீப்பெட்டித் தொழிலில் ஈடுபடுதல், கரும்பு, வெல்லம், கந்தசாரி தயாரித்தல், பனை வெல்லம் பிற பனைப்பொருட்கள் தயாரித்தல், சமையலுக்கு உதவாத எண்ணெய், சோப்புத் தயாரித்தல், கிராம மண்பாண்டத் தொழில், நார், தச்சுத் தொழில், கருமார்த் தொழில், சுண்ணாம்பு தயாரித்தல், உரம், மீத்தேன் வாயு தயாரித்தல், பயன்படுத்துதல், மருந்திற்காக வனச் செடிகளையும் பழங்களையும் சேகரித்தல், பழங்களைப் பதப்படுத்துதல், பாதுகாத்தல், பிரம்பு மூங்கில் தொழில், அலுமினிய, வீட்டுச் சாமான்களைத் தயாரித்தல், கத்தா தயாரித்தல், மரப் பிசினையும், ரோசினையும் தயாரித்தல், அரக்கு தயாரித்தல் என்று இப்படிப்பட்ட கிராமத் தொழில்களை ஊக்குவிக்க அரசு பேராதரவு காட்ட ஆரம்பித்துவிட்டது ஒரு நல்ல அடையாளமாகும். மேலும், கதர் ஆணைக் குழுவின் நிதி உதவியைப் பெறுமல் தமிழக அரசே அகர்பத்தி, சிகைக்காய்கள், பற்பொடி, குங்கிலி போன்றவைகள் தயாரிக்க அனுமதியும் கொடுத்திருக்கிறது. இவைகளெல்லாம் தொழில்களா? இந்த நவீன காலத்தில் இந்தத் தொழில்கள் தேவைப்படுமா? அல்லது எடுபடுமா? என்று கருதிய கறுப்பு நாட்கள் இப்போது மறைந்துவிட்டன.

இவைகள் தான் உண்மையான தொழில்கள் - இவைகளைத்தான் முதலில் வளர்க்க வேண்டும் என்கிற சிந்தனை, கிழக்கின் செவ்வெளுப்பாகத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. புறச் சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களை-இந்தச் சிந்தனை நியாயப்படுத்துகிறது.

வளர்ந்துவிட்ட ஒன்றைப் பார்த்து, மற்றொன்று அதைப் போல வளர நினைப்பது போட்டி; வளர்ந்துவிட்ட ஒன்றை அழிக்க நினைப்பது பொறாமை.

இப்பொழுது நகரங்களைப் பார்த்துக் கிராமங்கள் போட்டி போட முடிவெடுத்திருக்கின்றன. இது ஆரோக்கியமான போட்டி. இதனை நாம் வரவேற்போம்.

*[வானொலி உரை 18-4-'78]*

## இராமேஸ்வரம்

இராமேஸ்வரத்தை அடைவதற்குப் பிரதான நிலப்பகுதியில் மிக அருகில் அமைந்துள்ள இடம் மண்டபமாகும். இராமேஸ்வரம் இந்தியாவிலுள்ள புனிதப் பயணத் தலங்களில் முதன்மையானதாகும். ஏராளமான புனித யாத்திரீகர்களும்; சுற்றுலாப் பயணிகளும் இங்கு வருகின்றனர். இராமேஸ்வரத்திற்கு அருகில் அமைந்துள்ள குருசடைத் தீவு உயிரியல் வல்லுநர்களின் பேரின்ப இடமாகும்.

கடல் உயிரியல் ஆராய்ச்சிக்காக இவர்கள் மண்டபத்திலிருந்து படகில் இங்கு வருகின்றனர். கடல் உயிரியல் ஆராய்ச்சி நிலையமும், இந்திய-நார்வே மீனளத் திட்டமும் மண்டபத்தில் அமைந்துள்ளன. எனவே, இராமேஸ்வரத்திற்கும், குருசடைத் தீவுக்கும் வருகின்ற சுற்றுலாப்பயணிகள் இவ்விடத்தின் வழியாகத்தான் செல்ல வேண்டும்.

மண்டபத்தில் ஓய்வு எடுத்துக் கொள்வதற்காகக் குடிநீர் மற்றும் கழிப்பிட வசதிகளுடன் கூடிய தங்குமிடம் ஒன்றும், படகுத்துறையும் கட்ட தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் திட்டமிட்டுள்ளது.

# பேரெழில் கொஞ்சும் பிச்சாவரம்



பிச்சாவரம் பேரெழில் கொஞ்சி விளையாடும் ஈடு இணையற்ற ஓர் இடமாகும்.

ஆடும் அம்பலவாணனின் பொன்னம்பலமான சிதம்பரத்திலிருந்து சுமார் 8 மைல் தொலைவில் கிழக்குக் கடற்கரைப் பகுதியில் பிச்சாவரம் அமைந்துள்ளது.

தென்னார்க்காடு மாவட்டம் பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த கிள்ளை என்னும் கிராமத்தின் அருகே பிச்சாவரம் காடுகள் அமைந்துள்ளன.

இங்கே கடல் போன்ற நீர்ப் பரப்பு உள்ளது. அந்த நீர்ப் பரப்பின் வனப்பில் வனப்பகுதியும் உள்ளது. அந்த வனப்பகுதி தான் பிச்சாவரம் காடுகள் என்று சொல்லப்படுகிறது. படகின் துணை கொண்டுதான் அங்கே செல்ல முடியும்.

இந்தக் காடுகளில் சுரபுன்னை என்ற மரங்கள் இருக்கின்றன. இதே போன்ற மரங்கள் உலகத்திலேயே ஆறு இடங்களில்தான் உள்ளனவாம். இந்தியாவில் தண்டகாரண்யத்தில் உள்ளது. இந்த மரத்திலுள்ள காய்கள் வெடித்து விதைகள் தண்ணீருக்குள் விழுகின்றன. அவை தாமாகவே முளைத்து மரங்களாகி விடுகின்றன இந்தக் காடுகளில்!

காடுகளும் நீர்ப்பரப்பும் கண்களுக்கு விருந்தாக அமைந்துள்ளன. சில பகுதிகளில் ஐந்து பக்கங்களில் வாய்க்கால்கள் பிரிகின்றன. நடுப்பகுதியில் படகில் இருந்து பார்த்தால் கால்வாய்கள் பிரியும் பகுதிகளும் மையப் பகுதியும் பார்ப்போரைப் பரவசப்படுத்தும்.

சின்ன வாய்க்கால், பெரிய வாய்க்கால், நண்டு வாய்க்கால், நரிவாய்க்கால் என்று பல வாய்க்கால்கள் உள்ளன. இவற்றை இங்குள்ள மீனவர்கள் தங்களது நாட்டுப் பாடல்களில் குறிப்பிடுகிறார்கள்.

இங்கே சின்ன வாய்க்கால், பில்லுமோடை, முழுக்குத்துறை. முடச ஓடை என்று பல கிராமங்களும் உள்ளன. இவை தீவுபோல் காட்சி தருகின்றன.

ஏறத்தாழ 3,000 ஏக்கர் பரப்பளவில் வனப்புமிக்க காடுகளை அரணாகக் கொண்டு கடலின் புறநீர்ப்பகுதி எழில்மிகு சிறுசிறு தீவுகளாகக் காட்சியளிக்கும் பிச்சாவரம் காடுகள் பகுதி படகு விடுதல், மீன்பிடித்தல் போன்ற விளையாட்டுக்கு உகந்த இடமாகும்.

இந்தப் பகுதி—ஏறக்குறைய காஷ்மீர் போன்ற நீர்நிலையை உடையதாகும். ஸ்ரீநகர் ஏரியில் படகு வீடுகள் இருப்பது போலவே, இங்குள்ள நீர்ப்பரப்



பிலும் படகு வீடுகளை அமைக்கலாம்.

மேற்குக் கடற்கரைப் பகுதியில் மூன்று திங்களுக்கு மேலாகக் கடுமையான மழை பெய்யும். ஆனால், கிழக்குக் கடற்கரைப் பகுதி அதுபோன்றதல்ல. இங்கு மழை பெய்யும் நாட்கள் ஒரு திங்களுக்கு குறைவே. எனவே, இங்கு சுற்றுலாப் பயணிகளைக் கவருவதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

பல ஆண்டுகளுக்கு முன்னர், முன்னாள் குடியரசுத் தலைவர் ஜாகீர் உசேன் அவர்கள் இங்கு வந்து இயற்கை எழில் சிந்துமிடங்களைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். பேரறிஞர் அண்ணா அவர்களும் பிச்சாவரம் காடுகள்





பகுதியைக் கண்டு மகிழ்ந்திருக்கிறார். காண்போரைக் கவர்ந்திழுக்கும் கண்ணுக்கினிய காட்சிகள் கொண்ட பிச்சாவரம் காடுகள் சுற்றுலாத் தலமாக வளரும் வாய்ப்புகள் உள்ளன.

இயற்கையெழில் மிகுந்த பிச்சாவரத்தின் சிறப்புப் பற்றி நமது சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் 31-8-1977—ல் புதுடில்லியில் நடைபெற்ற சுற்றுலாத்துறை அமைச்சர்கள் மாநாட்டில் எடுத்துரைத்தார்கள்.

எனவே, பிச்சாவரத்தில் சுற்றுலாப் பயணிகளுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.



மேலும், படகு வீடுகள் கட்டி தோணித்துறையமைத்து நீரடிக் கழிப்பிட வசதிகளை உருவாக்கிட சுற்றுலாத்துறை திட்டங்களை வகுத்துள்ளது.

இதனால், பேரெழில் கொஞ்சும் பிச்சாவரம் காடுகள் சுற்றுலாத் தலமாக வளர அடிப்படையான முயற்சிகள் உருவாகி வருகின்றன.

இயற்கையெழில் கொஞ்சும் பிச்சாவரம் இன்னொரு தேக்கடியாக — எழில் கொஞ்சும் காஷ்மீரம் படகு வீடுகள் போல சுற்றுலாப் பயணிகளைக் கவரும் நாள் தொலைவில் இல்லை!



# ஒருமைப்பாட்டை வளர்க்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

கண்ணைக் கவரும் கவின்மிகு காட்சிகள் தமிழ்நாட்டில் ஏராள மாக இருக்கின்றன.

வண்ணப் பூங்காக்கள், வள மான நீரருவிகள், எண்ண இன்ப மூட்டும் எழில்மிகு இயற்கைக் காட்சிகள் எத்தனை எத்தனை இங்கே!

அத்தனையும் பார்க்க நமக்கு ஆவல் எழுவது இயல்புதானே? பரபரப்பான சென்னை நகர வாழ்க்கையை விட்டு, அமைதி யான — அழகுக்கு அழகூட்டும் அந்த இடங்களுக்குச் சென்று வர யாருக்குத்தான் ஆசை வராது?

இந்த ஆசையை நிறைவேற்றி வைக்கிறது, 'தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்' (Tamil Nadu Tourism Development Corporation).

**இனிய பயணம் தொடர...**

இதன் நோக்கமென்ன? பணி என்ன?

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகம், 1971-ல் ரூ. 2 கோடி மூலதனத்துடன் நிறுவப்பட்டது.

வணிக ரீதியில் சுற்றுலாவை வளர்க்கவும், சுற்றுலாப் பயணி களுக்கு வேண்டிய அடிப்படை வசதிகளை அதாவது, சுகமாகத் தங்குவதற்கு வேண்டிய வசதிக ளைச் செய்வதும், இனிய பயணத் துக்கான போக்குவரத்து வசதி களைச் செய்து தருவதும் தமிழ் நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத் தின் முக்கிய நோக்கமாகும்.

இது, கடந்த ஏழு ஆண்டு களாகப் பல அரிய பணிகளை ஆற்றி வருகின்றது.

**சுற்றுலா மாளிகைகள் :**

தமிழ்நாட்டிலுள்ள சுற்றுலாத் தலங்களில் பல சுற்றுலா மாளி கைகள் உள்ளன. 6 சுற்றுலா மாளிகைகளுடன் ஆரம்பித்த இக்கழகம், இன்று 13 சுற்றுலா மாளிகைகளுடன் மிகச் சிறப் பாக இயங்கி வருகிறது. இவை தவிர, மேலும் பல புதிய சுற்றுலா மாளிகைகளைக் கட்டுவதற்கு இக் கழகம் திட்டமிட்டு வருகிறது. அதன்படி கோவை, நாகப்பட்டி னம் ஆகிய இடங்களில் இம் மாளிகைகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இவையன்றி, பெருவழிச் சாலைகளில் சுற்றுலாப் பயணி களுக்கென சிறு விடுதிகள் (Motels) இரண்டு கட்டப் பட்டு வருகின்றன. இராணிப் பேட்டையிலும், உளுந்தூர்ப் பேட்டையிலும் இந்தச் சிறு விடுதிகள் அமையும்.

**சிக்கனச் சுற்றுலாக்கள் :**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச் சிக் கழகத்தின் சார்பில், 'சிக் கனச் சுற்றுலாக்கள்' (Package Tours) மிகச் செம்மையாக நடந்து வருகின்றன.

தனிப்பட்ட முறையில் ஓர் இடத்தைப் போய்ப் பார்க்க முடியவில்லையே என ஏங்குவோ ருக்கும், குடும்பத்தோடு, நண் பர்கள் குழாமோடு உல்லாச மாகச் சென்றுவர எண்ணுவோ ருக்கும் இந்தச் 'சிக்கனச் சுற்றுலா'வைக் கொடுக்கிறது.

சிக்கனச் சுற்றுலா எங்கெங்கே செல்கின்றது.

சிங்காரச் சென்னையைச் சுற்றிப்பார்க்க வரும் பயணிகள் ரூ. 15 கட்டணத்தில், நகரின் முக்கிய இடங்களான கோட்டை, அருங்காட்சியகம், தேசிய கலைக் கூடம், வள்ளுவர் கோட்டம், கிண்டி பூங்கா (பாம்புப் பண்ணை), அருள்மிகு கபாலீசுவரர் கோயில், சாந்தோம் கதீட்ரல், மெரீனு கடற்கரை முதலான இடங் களைக் கண்டு மகிழ அழைத்துச் செல்லப்படுகின்றனர்.

இதேபோல சென்னையிலிருந்து மாமல்லபுரத்துக்கும், சென்னை

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சொகுசுப் பேருந்து





மதுரை சித்திரைத் திருவிழாப் பொருட்காட்சி நுழைவாயில்

யிலிருந்து காஞ்சிபுரம், திருக்கழுக்குன்றம் (பட்சி தீர்த்தம்), மாமல்லபுரத்திற்கும் இந்தச் சுற்றுலாக்கள் குறைந்த கட்டணத்தில் நிறைவான மனத்துடன் திரும்பிவர வகை செய்கின்றன.

**மெய்மறந்திட...**

பத்து நாட்கள் சுற்றுலா சென்று வருவதற்கும், இக்கழகம் தக்க வசதி செய்துள்ளது. இந்தச் சுற்றுலாவில் ஒவ்வொரு முதல், மூன்றாவது சனிக்கிழமைகளில் நாம் கலந்து கொள்ளலாம்.

சென்னையிலிருந்து புறப்பட்டு, பாண்டிச்சேரி, சிதம்பரம், பூம்புகார், நாகூர், வேளாங்கண்ணி, தஞ்சாவூர், இராமேசுவரம், திருச்செந்தூர், கன்னியாகுமரி, திருவனந்தபுரம், கோவளம், குற்றாலம், திருவில்லிபுத்தூர், மதுரை, கொடைக்கானல், பழனி, திருச்சி ஆகிய இடங்களையெல்லாம் கண்டு மகிழப பத்து நாட்கள் பறந்து போகுமே! மெய்மறந்து போகுமே!

இதேபோல 7 நாட்கள், 11 நாட்கள் சுற்றுலாக்களும் உள்ளன. எல்லாவற்றுக்கும் சென்னை அண்ணாசாலையிலுள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்திடம் தொடர்பு கொண்டால், மனத்துக்குத் தெம்பூட்டும் இனிய பயணத்துக்கு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.

**சொகுசுப் பேருந்து :**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் வணிக மேலாளர் (Commercial Manager) திரு டி. எஸ். தீனதயாள் அவர்கள் கூறுகிறார்:—

''இந்தச் சிக்கனச் சுற்றுலாக்கள் நம் நாட்டவரை மட்டுமின்றி, மேலைநாட்டினரையும் வெகுவாகக் கவர்கின்றன. குறிப்பாக மலேசியா, சிங்கப்பூர், தென்னாப்பிரிக்கா ஆகிய இடங்களிலிருந்து வரும் தமிழர்கள் இந்தச் சுற்றுலாவில் பெருவாரியாகக் கலந்து கொண்டு மன நிறைவு பெறுகிறார்கள்.

''சிக்கனச் சுற்றுலாக்கள் தவிர சொகுசுப் பேருந்துகளை இக்கழகம், 'டிராவல் ஏஜெண்டுகளுக்கும், பொதுமக்களுக்கும் வாடகைக்குத் தருகின்றது. தற்போது 10 சொகுசுப் பேருந்துகள் உள்ளன. சுமார் மதிப்பு ரூ. 25 இலட்சமாகும்.

**கண்கவர் பொருட்காட்சி :**

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், இதுவரை ஆறு சுற்றுலா வர்த்தகப் பொருட்காட்சிகளை நடத்தியிருக்கிறது. கடந்த ஆண்டு தீவுத் திடலில் நடந்த பொருட்காட்சியைச் சுமார் 20 இலட்சம் மக்கள் கண்டு களித்தனர். ரூ. 6 இலட்சம் இலாபம் கிடைத்தது. இவ்வாண்டு மதுரையில் சித்திரைத் திருவிழாவிலும் பொருட்காட்சி ஒன்று மிகச் சிறப்பாக நடந்தது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், பலதிறப்பட்ட மக்களை ஒன்று சேர்த்துச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்வதன் மூலம், தேசிய ஒருமைப்பாட்டையும் வளர்க்கிறது என்று நாம் மகிழ்ச்சியோடு சொல்லலாம்.

## சென்னை விமான நிலையம்!

"நமது நாட்டின் வர்த்தக, அரசியல், கலாச்சார, சமூக வாழ்வில் சென்னை நகரம் சிறப்பான இடம் பெற்றிருக்கிறது. மிக அழகான இயற்கைக் கடற்கரை கிழக்குப் பகுதியில் உள்ளது. சர்வதேச விமான நிலையம் நல்ல இடத்தில் அமைந்திருக்கிறது. சென்னைத் துறைமுகத்தின் மூலம், இந்தியா, தெற்கு, தென் கிழக்கு, ஆசிய நாடுகளுடன் வெளிநாட்டு வர்த்தகத்தை நடத்தி வருகிறது. அதற்கு மையமாக விளங்குவது சென்னைத் துறைமுகம். சென்னை நகரத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு சென்னை விமான நிலையத்தில் நவீன-சிறப்பாகத் திட்டமிடப்பட்ட சர்வதேச விமான சரக்குப் போக்குவரத்து நிலையம் ஒன்றினை அமைத்துள்ளது.

மத்திய சிவில்-விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு. புருஷோத்தம்லால் கௌசிக்.

# கனி தந்த தீஞ்சாறே! பிணி தீர்க்கும் பேரமுதே!



உணவுப் பொருட்களின் பயன்களை முழுமையாகப் பெற, உணவுப் பொருட்களைப் பசுமையாக இருக்கும்போதே சமைத்தல், அதிகப்படியான பொருட்களைப் பல நாட்களுக்குக் கெடாமல் பாதுகாப்பு முறையில் சேமித்து வைத்தல்; மிக அதிக அளவில் உணவுப் பொருட்கள் கிடைக்கும் போது பிற்காலத் தேவைக்காகச் சரியான முறையில், பக்குவப் படுத்திப் பதப்படுத்துதல் (Preservation) ஆகிய மூன்று நிலைகளிலும் சரியான வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். உணவை உடலுக்கு ஏற்ப மாற்றும் முயற்சிகளில் சமையல் முதல் நிலை. ஆனால், சமைக்கும்போது ஒருசில உணவுப் பொருட்கள் தம் ஊட்டச் சக்தியை இழந்துவிடுகின்றன. காய்கறிகளைத் தோல் சீவுதல், நறுக்குதல், ஊறவைத்தல் போன்ற முறைகளினாலும் உயிர்ச்சத்துக்களும், ஊட்டச் சத்துக்களும் குறைந்து விடுகின்றன. ஆகவே, உணவு தயாரிக்கும்போது சத்துக்கள் சேதமாகாமலிருக்கும்படிப் பார்த்துக் கொள்ள வேண்டும்.

**காய்கறிகளைப் பசுமையாகவே சமைத்தல் :**

காய்கறிகளைப் பறித்தவுடன் உபயோகிப்பது நல்லது. காய்கறிகள் வாடும்போது, அவற்றிலுள்ள 'சி' உயிர்ச்சத்து அழிந்து விடுகின்றன.

காய்கறிகளைக் கழுவும்போது அதிக நேரம் நீரில் ஊற வைப்பதால் தாது உப்புக்களும், உயிர்ச் சத்துக்களும் அழிந்துவிடுகின்றன. அதனால் முழுக் காய்கறிகளை நறுக்கும் முன்னரே விரைவாகக் கழுவி எடுக்க வேண்டும்.

*காய்கறிகளைச் சமைப்பதற்கு அல்லது பரிமாறுவதற்குச் சற்று முன்பாகத்தான் நறுக்க வேண்டும். கூடுமானவரை பெரிய துண்டுகளாக நறுக்குதல் நல்லது.

*பழங்களிலும், காய்கறிகளிலும், அவற்றின் தோலை ஒட்டியே பெருமளவில் உயிர்ச்சத்துக்களும் தாது உப்புக்களும் அடங்கியிருப்பதால் அவற்றைத் தோலுடன் சமைப்பதே நல்லது.

*கூடியவரையில் பிரஷர் குக்கர் உபயோகித்து ஆவியில் அவிப்பது நல்லது. குறைந்த நேரம் வேகவைப்பதால் ஊட்டச்சத்துக்களை ஓரளவு பாதுகாக்கலாம். நூல்கோல், முள்ளங்கி ஆகியவற்றின் கீரைகளையும் உபயோகிக்கலாம்.

*பிரஷர் குக்கர் கைவசம் இல்லாதவர்கள், மூடிய பாத்திரத்தில், குறைந்த அளவு தண்ணீர் உபயோகித்துக் காய்கறிகளை வேகவைத்து, வேகவைத்த தண்ணீரையும் கீழே கொட்டாமல் உபயோகிக்க வேண்டும்.

*சமைக்கும்போது சோடா மாவைச் சேர்ப்பது உணவிலுள்ள 'பி' வைட்டமின்களை அழித்து விடும். ஆகவே சமைக்கும்போது சோடா மாவைச் சேர்க்கக் கூடாது.

*உணவிலுள்ள புரதச்சத்துக்கள், அதிக வெப்ப நிலையில் கெட்டியாகி, இறுகி, தன்மை கெடக்கூடியவை. எனவே மாமிசம், முட்டை போன்ற புரதச் சத்துள்ள பொருட்களை மிதமான வெப்பநிலையில் வேகவைத்தல் நல்லது.

**உணவுப் பொருட்களைச் சேமித்துப் பக்குவப்படுத்தும் முறைகள் :**

காய்கறிகளும், பழங்களும் சில குறிப்பிட்ட மாதங்களில் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. நம் நாட்டில் ஆண்டொன்றிற்குச் சுமார் 32 மில்லியன் டன் காய்கறிகளும், பழங்களும் உற்பத்தியாகின்றன. இவற்றில் சுமார் 25 சதம் உபயோகிக்கப்படும் முன்னரே அழுகிவிடுகின்றன. ஆனால் குறைந்த விலையில் எளிதில் கிடைக்கும்போது அவற்றைச் சேமித்துப்பக்குவப்படுத்தி வைத்து ஆண்டு முழுவதும் பயன்படுத்தலாம். அலுவலகங்களில் பணிபுரியும் நகர்ப்புற மக்களுக்கும் பிறருக்கும் மிகவும் வசதியாக, நேரத்தை வீணாக்காமல், அவ்வப்போது தேவைக்கேற்ப உபயோகிக்கச் செய்யலாம்.

இவ்வாறு உணவுப் பொருட்களைச் சேமித்து வைப்பதற்கும் பக்குவப்படுத்துவதற்கும் பல முறைகள் உள்ளன. அவையாவன:

**குறைந்த உஷ்ணநிலையில் சேமித்தல் :**

குறைந்த உஷ்ண நிலையில் காய்கறிகளைச் சேமித்து வைப்பதால், அவற்றில் ஏற்படும் இரசாயன மாறுதல்கள் தடைப்பட்டு நீண்ட நாட்கள் அவை கெடாமல் இருக்க ஏதுவாகிறது.

நமது வீடுகளில் ரெப்ரிஜிரேட்டர் மூலம் காய்கறி, பழங்களைச் சேமித்து வைத்தல் சிறந்த உதாரணமாகும். குளிர்சாதனப் பெட்டி கைவசம் இல்லாதவர்கள் களிமண்ணால் செய்யப்பட்ட ஜனதா குளிர்சாதனப் பெட்டியை உபயோகித்துக் காய்கறிகள் வாடாமல், பாதுகாக்கலாம்.

**திருமதி சுசிலா திருமாறன்**
**வேளாண்மைப் பல்கலைக் கழகம்**
**கோவை**

### ஐஸில் உறைய விடுதல் :

0° க்கும் குறைந்த உஷ்ணநிலையில் காய்கறி, பழங்களைப் பதப்படுத்திச் சேமிக்கும் முறை இது. இம்முறை, தமிழ்நாட்டில், மாமிச உணவு வகைகளுக்கு மட்டுமே கையாளப்பட்டு வருகிறது.

### உலரவிடுதல் :

இம்முறை பழங்காலத்திலிருந்தே கையாளப்பட்டு வருகிறது. வற்றல் வகைகள் சிறந்த உதாரணங்கள் ஆகும். இம்முறையில் காய்கறிகளிலுள்ள ஈரப்பசை குறைக்கப்பட்டு, நுண்கிருமிகளும் அழிக்கப்பட்டுப் பாதுகாத்து வைக்கப்படுகிறது.

வெயிலில் உணவுப் பொருட்களை உலர்த்தும் முறையே பெரும்பாலும் மக்களால் கையாளப்படுகிறது. ஆனால் மின்சார உலர்த்திகள் மூலம் உலரவிடும்போது, ஒவ்வொரு வகை உணவுப் பொருளுக்கும் தகுந்தவாறு உஷ்ணநிலையை மாற்றி அமைத்துச் சிறந்த பயனைப் பெறலாம். வியாபார நோக்குடன் உணவுப் பொருட்களை உலர்த்துவதற்கு மின்சார உலர்த்திகள் மிகவும் உதவியாக இருக்கும்.

### உப்புநீரில் பக்குவப்படுத்துதல் :

காய்கறிகளுடன் இரண்டு சதம் உப்புநீர் சேர்த்து கேன்களில் அடைத்துப் பக்குவப்படுத்தலாம். இம்முறையில் கேன்களை சீல் செய்வது போன்ற காரியங்களுக்கு இயந்திரங்கள் தேவைப்படுவதால் வீட்டளவில் தயாரிக்க ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் காய்கறிகளைப் பக்குவப்படுத்தி வைத்தலே போதுமானது.

### சர்க்கரை சேர்த்துப் பக்குவப்படுத்திச் சேமித்தல் :

பழ வகைகளை 70 சதம் சர்க்கரை சேர்த்துப் பல நாட்கள் கெடாமல் பாதுகாக்கலாம். ஸ்குவாஷ் வகைகள் (Squashes) தெளிந்த பழரச பானங்கள், ஜாம், ஜெல்லி, கெட்சப் முதலியன சிறந்த உதாரணங்களாகும்.



### பழரச பானங்கள் (Squashes) :

பழங்களில் இயற்கையிலேயே சிட்ரிக் அமிலம் உள்ளது. இந்த அமிலமே பழங்களின் புளிப்புத் தன்மைக்குக் காரணமாகும். பழங்களிலிருந்து தயாரிக்கும் பானங்கள் கெடாமல் இருக்க, பொட்டாசியம் மெட்டா பைசல்பைட் (Pottassium Metabisulphite) சோடியம் பென்சாயேட் ( Sodium Benzodte ) என்ற இரண்டு வித இரசாயனப் பொருட்களில் ஒன்றைப் பழங்களுக்குத் தகுந்தவாறு உபயோகிக்க வேண்டும். அதிக நிறம் கொண்ட திராட்சை, மாதுளைப் பழரசத் தயாரிப்புகளுக்கு மட்டும் சோடியம் பென்ஸாயேட் என்ற இரசாயனப் பொருளையும் மற்ற எல்லாவிதப் பழங்களுக்கும் பொட்டாசியம் மெட்டா பைசல்பைட்டையும் உபயோகிக்கலாம்.

இந்த இரசாயனப் பொருட்கள், பழத்திலுள்ள சிட்ரிக் அமிலத்துடன் சேர்வதால் இவற்றிலிருந்து ஸல்பர் டை ஆக்ஸைடும் ( Sulphur Dioxide ) பென்சாயிக் அமிலமும் (Benzoic acid) உண்டாகின்றன. இவ்விரண்டும் புளிப்புள்ள உணவுப் பண்டங்களில் நுண்கிருமிகள் வளராமல் தடுத்துக் காப்பாற்றக் கூடிய சக்திவாய்ந்தவை. இந்த இரண்டு பாதுகாப்பு இரசாயனப் பொருட்களும் இந்திய அரசினரால் அனுமதிக்கப்பட்டவைகளாகும். இவற்றைக் குறிப்பிட்ட அளவுகளிலேயேதான் உபயோகிக்க வேண்டும்.



### பழரசம் தயாரித்தல் :

எந்தவித ஸ்குவாஷ் அல்லது பழரச பானம் தயாரிப்பதற்கும் முதலில் பழரசம் தயாரித்துக் கொள்ள வேண்டும். நன்கு முதிர்ந்து, பழுத்த, அழுகல் இல்லாத பழங்களை நீரில் கழுவி எடுத்துக் கொள்ள வேண்டும். எலுமிச்சை, ஆரஞ்சு போன்ற பழங்களை இரண்டாக வெட்டிச் சாறுபிழிந்தால் போதும். பிழிந்த சாற்றை மெல்லிய மஸ்லின் துணியில் வடிகட்டி எடுக்க வேண்டும். மாம்பழத்தின் கொட்டையை நீக்கி விட்டு சதைப் பாகத்தை ஸ்பூனில் எடுத்துச் சேர்த்து, மின்சார மிக்ஸி அல்லது கையினால் சுற்றக்கூடிய பழரசம் தயாரிக்கும் கருவி. (Hand Pulper)யினால் கூழாக்கி எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு எடுத்த பழக்கூழை நைலான் வலைத்துணியினால் வடிகட்டினால் போதும். அன்னாசிப் பழத்தில் சாறு தயாரிக்க, மேல் தோலைக் கத்தியினால் நீக்கி விட்டு, பழத்தைத் துண்டங்களாக நறுக்கி மிக்ஸியில் அல்லது Pulper இயந்திரத்தில் போட்டுச் சாறு எடுத்து மெல்லிய மஸ்லின் துணியில் வடிகட்டி எடுக்க வேண்டும். திராட்சைப் பழத்தை மிக்ஸியில் போட்டு, அதன் சாற்றை நைலான் வலைத் துணியினால் வடிகட்டி எடுத்தால் போதுமானது.

இவ்வாறு தயாரித்த பழச்சாற்றைக் கொண்டு ஸ்குவாஷ் தயாரிக்கலாம்.

### திராட்சைப் பழரசம் தயாரித்தல் :

தேவையான பொருட்கள்:

பழச்சாறு—1 கிலோ

சர்க்கரை—2 கிலோ

தண்ணீர்—1 கிலோ

சிட்ரிக் அமிலம்—20 முதல் 25 கிராம் வரை

சோடியம் பென்ஸாயேட்—5 சிட்டிகை

டோனோவின் எஸ்ஸென்ஸ்—2 மேசைக்கரண்டி.

செய்முறை:

சர்க்கரையுடன், சிட்ரிக் அமிலத்தையும் தண்ணீரையும் கலந்து, சர்க்கரைப்பாகு கொதிக்க ஆரம்பித்தவுடன், 2 நிமிடம் விட்டு, இறக்கி, வடிகட்டி ஆறவிடவும், ஆறிய பாகில் பழச்சாற்றைக் கலக்கி, சிறிதளவு சாற்றில் சோடியம் பென்ஸாயேட்டைக் கரைத்துப் பழக்கலவையில் கலக்கி விடவும். இக்கலவையில் டோனோவின் எஸ்ஸென்ஸையும் சேர்க்கவும். தயாரித்த ஸ்குவாஷை ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் ஓர் அங்குல இடம் விட்டு நிரப்பவும். பாட்டில்களை இறுக்கமாக மூடி, கழுவி, துடைத்து லேபிள்போட்டு எடுத்து வைக்கவும்.



## பாட்டில்களை ஸ்டெரிலைஸ் செய்ய :

பாட்டில்களை நன்றாக சோப்பு நீர் அல்லது சோப்புத்தூள் போட்டு பிரஷ் கொண்டு மிகவும் சுத்தமாகக் கழுவி எடுக்க வேண்டும். ஒரு பாத்திரத்தில் குளிர் நீர் விட்டு, அதில் பாட்டில்களைக் கவிழ்த்து வைத்துக் கொதிக்க விடவும். நீராவி, பாட்டில்களின் உள் இருக்கும் கண்ணிற்குத் தெரியாத நுண்கிருமிகளை அழித்து விடும். பாட்டில்களின் அடிப் பாகத்தில் நீராவி பட்டுச் சூடானவுடன் அடுப்பிலிருந்து இறக்கி விடவும். நீராவி சற்று அடங்கிய பின்பு, பாட்டில்களை நீரிலிருந்து எடுத்து விடலாம்.

பாட்டில்களைச் சரியாகச் சுத்தம் செய்யாவிடினும், நீராவியில் சூடாக்காமலும் உபயோகித்தால் அதனுள் பாதுகாப்பாக வைக்கும் உணவுப் பொருட்களில் பூஞ்சக் காளான் படிந்து கெட ஏதுவாகிறது.

## தெளிந்த பழரசங்கள்(Clear Juices);

கொய்யா, மா, பலா, வாழை போன்ற பழங்களிலிருந்து தெளிந்த பழரசங்கள் தயாரிக்கலாம். இதற்கு முன்பு கூறியவாறே பழத்திலிருந்து பழக் கூழைத் தயாரித்துக் கொள்ள வேண்டும். இவ்வாறு தயாரித்த பழக்கூழுடன் பெக்டிக் என்ஸைம் என்ற நொதிப் பொருளைக் கலந்து 24 மணி நேரம் வைத்திருந்தால் பழக்கூழிலிருந்து சாறு தெளிந்து விடும். இவ்வாறு தெளிந்த பழரசத்தை மெல்லிய துணியினால் வடிகட்டி, மேலும் Filter Press என்னும் இயந்திர வடிப்பானால் வடிகட்ட வேண்டும். இவ்வாறு வடிகட்டி எடுத்த, தெளிந்த பழரசத்தை, ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் நிரப்பி, 85 டிகிரி சூட்டில் பாட்டில்களை வைத்திருந்து எடுத்து உடனே குளிர விட்டால் பழரசம் பலமாதங்கள் வரை சுவையாகவும், இயற்கையான மணத்துடனும் இருக்கும்.





## ஜாம், ஜெல்லி, மர்மலேட், கெட்சப் வகைகள் :

இவை மிகவும் சுவையாக இருப்பதால் மக்களால் மிகவும் விரும்பப்படுகின்றன. இவற்றை ரொட்டி, சப்பாத்தி முதலியவற்றில் தடவி உபயோகிக்கிறோம்.

ஜாம் என்பது பழக்கூழையும், சர்க்கரையையும் உபயோகித்துத் தயாரிப்பது.

ஜெல்லி என்பது தெளிந்த பழச்சாற்றிலிருந்து தயாரிக்கப்படுகிறது. பழங்களில் இருக்கும் பெக்டின் என்ற பொருளே இத் தயாரிப்புகளுக்குக் கெட்டித் தன்மையை அளிக்கிறது. சாதாரணமாக மாம்பழம், தக்காளி, அன்னாசி, ப்ளம், பேரிக்காய், திராட்சை, கொய்யா போன்ற பழங்களிலிருந்து தனித்தனியாகவும், பலவகைப் பழங்களைக் கலந்தும் ஜாம் வகைகள் தயாரிக்கப்படுகின்றன.

## மாம்பழ ஜாம் தயாரித்தல் :

தேவையான பொருட்கள்:

மாம்பழக் கூழ்—1 கிலோ

சர்க்கரை— முக்கால் கிலோ

சிட்ரிக் அமிலம்—20 கிராம்

செய்முறை:

மாம்பழக் கூழையும், சர்க்கரையையும் ஒரு ஸ்டெயின்லெஸ் பாத்திரத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். நன்கு கலக்கிவிட்டு இக்கலவையை அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். அடியில் பிடிக்காமலிருக்க, கிளறி விட்டுக் கொண்டே இருக்க வேண்டும். சிட்ரிக் அமிலத்தையும் அத்துடன் கலந்து, ஜாம், பதம் வந்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கிவிட வேண்டும்.



வீட்டு உபயோகத்திற்குத் தயாரிக்க ஒரு சிறிய தட்டு அல்லது சாஸரில் சிறிது தண்ணீர் விட்டு, ஜாமை ஒரு ஸ்பூனில் எடுத்து அந்நீரில் விட்டுப் பார்க்க வேண்டும். அவ்வாறு விடும் போது அது நீரில் பரவி விடாமல் மென்மையான சிறு உருண்டையாக நிற்க வேண்டும். தயாரித்த ஜாமை, ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் நிரப்பி மூடி விட வேண்டும்.

## தக்காளி கெட்சப் :

தேவையான பொருட்கள் :

தக்காளிச் சாறு—கிலோ ½

நறுக்கிய வெங்காயம்—2 மேசைக் கரண்டி.

வெள்ளைப்பூண்டு பிரித்தெடுத்தது—3

மிளகாய்ப் பொடி—1. தேக்கரண்டி

கிராம்பு—3

ஏலக்காய், மிளகு, சீரகம், பட்டை —பொடி செய்த கலவை—2 தேக்கரண்டி.

உப்பு—ருசிக்குத் தேவையான அளவு.

சர்க்கரை—2 மேசைக்கரண்டி

வினிகர் அல்லது காடி—2 மேசைக்கரண்டி.

செய்முறை:

முன் கூறியது போலவே தக்காளியிலிருந்தும் பழச்சாறு தயாரித்துக் கொள்ள வேண்டும்.

தயார் செய்து கொண்ட பழச்சாற்றுடன் உப்பும், சர்க்கரையும் கலந்து அடுப்பில் வைத்துக் கிளறிவிட வேண்டும். நறுக்கிய வெங்காயம், பூண்டு, கிராம்பு, பொடி செய்த மிளகு, ஏலக்காய், பட்டை, சீரகம், கிராம்பு, மிளகாய்ப்பொடி இவற்றை ஒன்றிரண்டாக நசுக்கி ஒரு மெல்லிய, சுத்தமான வெள்ளைத் துணியில் கட்டி, கொதித்துக் கொண்டிருக்கும் பழச்சாற்றில் மூழ்கி இருக்கும்படி வைக்கவும். பழச்சாறு சற்றுக் கெட்டியாக சட்டினி போன்று வந்தவுடன் அடுப்பிலிருந்து இறக்கி, வினிகரைக் கலக்கவும், ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் ஓர் அங்குல இடைவெளி விட்டு, நிரப்பி, மூடி வைக்கவும். இப்பொழுது தக்காளி கெட்சப் தயார்!

உணவுப்பொருள்களை உபயோகிப்பதில் சில நடைமுறைகளைக் கடைப்பிடித்தால், வாய்க்கும் ருசி; உடல் நலத்துக்கும் நல்லது!





# அகதிகள் அவலம் போக்கிட...

ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வந்த இந்திய மக்களின் வழி வந்தவர்களில் நாடற்றவர்களாக விளங்கிய 9.75 இலட்சம் பேரின் எதிர்கால வாழ்விடம் பற்றிய பிரச்சினையைக் குறித்து, இந்தியப் பிரதமருக்கும் ஸ்ரீலங்காவின் பிரதமருக்கும் இடையே 1964-ஆம் ஆண்டு அக்டோபரில் ஓர் உடன்பாடு கையெழுத்தாயிற்று. அதன்படி, இந்தியா, அவர்களில், 5.25 இலட்சம் பேரையும், அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளையும் வரவேற்றுக் குடியுரிமையளிக்கும் ஸ்ரீலங்காவில் அவர்களில் மூன்று இலட்சம் பேரையும் அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு குடி உரிமை வழங்கும். இவ் உடன்பாட்டின்படி, அன்று நாடற்றவர்களாய் எஞ்சியிருந்த 1.5 இலட்சம் பேர்களின் எதிர்கால வாழ்விடம் பின்னர் முடிவு செய்யப்பட வேண்டும் எனவும் வகை செய்யப்பட்டிருந்தது.

1974-ஆம் ஆண்டு சனவரியில் இப்பிரச்சினை குறித்து இரண்டாவது ஒப்பந்தம் கையெழுத்தாகியது. அதன்படி, குடியுரிமை வழங்குவது பற்றிப் பின்னால் முடிவு செய்வதாக இருந்த 1.5 இலட்சம் பேர்களில் ஒரு பாதிப் பேருக்கு இந்தியாவும், மறுபாதிப் பேருக்கு ஸ்ரீலங்காவும் குடியுரிமை வழங்குவதென ஒப்புக் கொண்டு வகை செய்யப்பட்டது; அதாவது இந்தியா 75,000 பேருக்கும், ஸ்ரீலங்கா 75,000 பேருக்கும் குடியுரிமை வழங்கும். மேலும், 1964-ஆம் ஆண்டு உடன்பாட்டில் ஆண்டுதோறும் 35,000 பேரை ஸ்ரீலங்காவிலிருந்து தாயகத்துக்கு (இந்தியாவுக்குத்) திருப்பி அனுப்புவதென ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. திருப்பியனுப்பப்படுபவர்களை விரைவாகத் திருப்பியனுப்பி வைக்கும் பொருட்டு அந்த எண்ணிக்கையை ஆண்டுதோறும் 10 சதவிதத்தில் படிப்படியாக உயர்த்துவதென்றும் இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தின்படி, அவர்களைத் தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் பணி, 1981ல் முடிவுற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறாகக் கணக்கிடப்பட்டவர்கள் மொத்தம் ஆறு இலட்சம் பேர் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். ஆனால், இந்த ஆறு இலட்சம் பேரும், அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளும், சேர்ந்த தொகையில், இறந்தவர்கள் போக மீதம் உள்ளவர்கள் அனைவரும் தாயகம் திரும்ப வகை செய்துள்ளதைக் கணக்கில் கொண்டு பார்த்தால், இறுதியாகத் தாயகம் திரும்பி வர இருப்பவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ ஏழு இலட்சம் ஆக இருக்கலாம். 31—1—1978-ஆம் நாள் வரையில் 2,77,993 பேர் அடங்கிய 67,039 குடும்பங்கள் இந்தியாவிற்குத் திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

அவர்களில் மூன்றில் இரண்டு பங்கினர் அதாவது 44,692 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நிலையான புது வாழ்வு உதவி அளிக்கப்படுவதற்குத் தகுதியுடையவர்கள் என்று கருதப்படுகிறது. இதுவரையிலும், மொத்தம் 40,110 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு, கேரளம், ஆந்திரப் பிரதேசம், கருநாடகம், அந்தமான்—நிகோபார் தீவுகள் ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டுப் புது வாழ்வு அளிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் தமிழ்நாட்டில் 38,109 குடும்பங்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது. பர்மா, வியட்நாம் முதலிய நாடுகளிலிருந்து தாயகம் திரும்புவோர் சிறு சிறு அளவில் வருகின்றனர். அவர்கள் வியட்நாமை விட்டு 1974-ஆம் ஆண்டு ஜூலையிலிருந்து இந்தியா திரும்பத் தொடங்கினர். பர்மாவிலிருந்து இது வரை 1,43,892 பேர் இந்தியாவிற்குத் திரும்பி வந்துள்ளனர்.

இந்தியா திரும்பும் குடும்பங்களுக்கு, அவை வந்து சேர்ந்தவுடன், தங்குவதற்காகும் செலவு, போக்குவரத்துச் செலவு ரொக்க உதவி, குறைந்த விலையில் உணவுப் பங்கீட்டுப் பொருள்கள் வழங்கல், குடும்பங்களைப் பேணுவதற்கான வாழ்க்கைச் செலவு, படிகள் ஆகிய வழிகளில் அவர்களுக்கு நிவாரணமளிப்பதற்காக நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

**வாணிகக் கடன் :**

பர்மா, வியட்நாம் முதலிய நாடுகளில் இருந்து இந்தியா திரும்புவோர் பெரும்பாலும் வணிகர்களாகவும், இலங்கையிலிருந்து இங்கு திரும்புவோரில் பெரும்பான்மையினர் மலைத் தோட்டத்தொழிலாளிகளாகவும்



இருக்கின்றனர். பர்மா, ஸ்ரீ லங்கா, வியட்நாம் நாடுகளில் இருந்து இந்தியா திரும்புவோர் தங்களுடைய வாழ்க்கைக்குத் தேவையான வருவாயைத் தேடிக் கொள்ள சிறு அளவில் வாணிகத்தை மேற்கொள்ளவும் நடத்தவும் அவர்களில் தகுதி வாய்ந்தவர்களுக்கு, ரூ. 5,000 அல்லது அதற்குக் குறைவாகக் கடனாக வழங்கப்படுகிறது. இது இரண்டு தவணைகளில் அதாவது முதல் தவணையில் ரூ. 3,000மும், இரண்டாவது தவணையில் ரூ. 2,000மும் வழங்கப்படுகிறது.



**வீட்டு வசதி அளிப்பதற்கான திட்டம் :**

இந்தியா திரும்புபவர்களுக்குச் சொந்தமாக வீடு இல்லையெனில், அவர்களுக்கு வாணிகக் கடன் கொடுக்கப்பட்டிருப்பினும், விவசாயக் கடன் கொடுக்கப்பட்டிருப்பினும், வேலை வாய்ப்பளிக்கப் பட்டிருப்பினும், அவர்களுக்கு வீட்டு வசதி அளிக்கப்பட்டு வருகிறது. வீடுகளைக் கட்டிக்கொள்ள எங்கெங்கு அரசு நிலங்கள் காலியாக உள்ளனவோ அங்கு அவை இலவசமாக வழங்கப்படுகின்றன. அத்தகைய குடும்பங்களுக்கு 1-4-1975 முதல் அவர்களுக்கு நகர்ப்புறப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ரூ. 6,000 கடனும் கிராமப் பகுதிகளில் வீடுகள் கட்டுவதற்கு ரூ. 3,000 கடனும் வழங்கப்படுகிறது. கிராமப் பகுதிகளுக்காக வழங்கப்பட்ட ரூ. 3,000-ல் ரூ. 700 மானியமாக அளிக்கப்படுகிறது.

வியாசர்பாடி ஏரிப் பகுதியில் குடிசையில் வசித்து வரும் பர்மாவிலிருந்து இந்தியா திரும்பியவர்களுக்காக 3,132 வீடுகள் கட்டும் திட்டம் அரசின் முனைப்பான பரிசீலனையிலுள்ளது.

**வேளாண்மை நிலக் குடியேற்றத் திட்டம் :**

பர்மா, இலங்கையிலிருந்து இந்தியா திரும்பும் குடும்பங்களில் உரிய வயது வந்த உடல் வன்மையுள்ள இரண்டு பேர் இருந்து அவர்கள் வேளாண்மைத் தொழிலில் அனுபவம் உடையவர்களாகவும் இருப்பின், அவர்களுக்குச் சொந்தமாக நிலங்கள் இல்லாமலிருந்தால், அக்குடும்பங்கள் வேளாண்மை நிலக் குடியிருப்புகளில் குடியமர்த்தப்படுகின்றனர். ஒவ்வொரு குடும்பத்திற்கும் 3 ஏக்கர் புன்செய்நிலம் கொடுக்கப்படுகிறது. அரசு நிலங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. நிலங்களைப் பண்படுத்தவும், பாசனக் கிணறுகள் கட்டவும், எருதுகள் விதைகள், கருவிகள் முதலியன வாங்கவும், பயிரிடவும் ஒவ்வொரு குடும்பத்திற்கும், விவசாயக் கடன் ரூ. 6,850 வரை வழங்கப்படுகிறது.

பயிர்கள் வளர்ந்து அறுவடை செய்யப்படும் வரையில், ஒவ்வொரு குடும்பத்திற்கும் அந்தக் குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து மாதம் ஒன்றுக்கு 40 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரை 21 மாத கால அளவிற்குப் பராமரிப்புப் படி கொடுக்கப்படுகிறது. முதல் 9 மாதங்களுக்கு முழு வீதங்களில் உதவித் தொகையாகவும், அடுத்த ஓராண்டுக்குப் பாதி வீதத்தில் கடனாகவும் கொடுக்கப்படுகிறது. மேற்சொன்ன ஒவ்வொரு குடும்பமும் வீட்டு வசதிக் கடனும், மாட்டு வண்டி வைத்து வாடகைக்கு ஓட்டுதல், கோழி இன வளர்ப்பு, காய்கறித் தோட்டம் வைத்தல் போன்ற துணைத்தொழிலுக்காகக் கடனும் பெறத் தகுதியுடையதாகும். கோழி இன வளர்ப்பு, காய்கறித் தோட்டம் வைத்தல் போன்ற துணைத் தொழிலுக்காக கடனும் பெறத் தகுதியுடையதாகும்.

தவிர, ஸ்ரீலங்கா அகதிகள் குடும்பங்கள் அவர்கள் எடுத்து வந்த சொத்தின் மதிப்பு 5,000 ரூபாய்க்கு மேற்படாமல் இருந்து, அவர்களுக்கென்று சொந்தமாக நிலங்கள் இல்லாமலிருந்து ஆனால் வேளாண்மைத் தொழிலை அவர்கள் மேற்கொள்ள விரும்பினால், 3 ஏக்கர் வரை நிலங்களை வாங்குவதற்காக ஏக்கர் ஒன்றுக்கு 2,000 ரூபாய்க்கு மேற்படாத வீதத்தில் தனியார் வேளாண்மை நிலங்களை வாங்குவதற்குக் கடன் பெறவும் தகுதியுடையவர் ஆவார்கள்.

**வேலை வாய்ப்பு வசதிகள் :**

வேலை வாய்ப்பு அலுவலகங்கள் மூலமாக மாநில அரசுப் பணியில் நியமனம் பெறுவதற்காக அகதிகளுக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்படுகின்றது. அவசியம் ஏற்படும்போதுமுறையாகப்பதவிகளில் நியமிக்கப்படுவதற்காகக் கல்வித் தகுதிகள் குறித்த விதிகள் தளர்த்தப்பட்டு வருகின்றன. மாநிலப் பணி, சார்நிலைப் பணிகளுக்கு ஆள் தெரிந்தெடுப்பதற்கான தேர்வுக் கட்டணங்கள், விண்ணப்பக் கட்டணங்கள் ஆகியவற்றைச்செலுத்துவதினின்றும் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

அகதிகளின் சிறுவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. மாணவர் இல்லங்களில் தங்கியுள்ளவர்களுக்கு 60 ரூபாயிலிருந்து 90 ரூபாய் வரையில் மாதாந்தர உதவித் தொகை வழங்கப்படுகிறது. படிக்கும் வகுப்புக்கேற்ப 15 ரூபாயிலிருந்து 150 ரூபாய் வரையில் ஆண்டுப் புத்தக மானியம் வழங்கப்படுகிறது. அரசு நடத்தும் தொழிற் பயிற்சிப் பள்ளிகளில் உள்ள இடங்களில் 5 சதவீதம் அகதிகளுக்காக ஒதுக்கப்படுகிறது. இம் மாநிலத்தில் உள்ள அரசுக் கல்லூரிகள் அனைத்திலும் புகுமுக வகுப்பு, பட்டப் படிப்பு வகுப்புகளில் அகதிகளுக்காக இரண்டு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இம் மாநிலத்தில் உள்ள மருத்துவ, பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவக் கல்லூரிகளில் கீழே குறிப்பிட்டவாறு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன :



| | ஸ்ரீலங்கா அகதி களுக்கு | பர்மா அகதி களுக்கு |
|---|---|---|
| மருத்துவம் | 4 | 2 |
| பொறியியல் | 1 | 2 |
| வேளாண்மை | 2 | 2 |
| கால்நடை மருத்துவம் | 2 | 1 |

## பயிற்சியும் வேலைவாய்ப்பும்

வேலை வாய்ப்பிற்குத் தகுந்தவர்களாகச் செய்யும் வகையில், பல்வேறு வணிகத்திலும்தொழில்களிலும் அகதிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1,633 அகதிகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, விரிவாக்கத் திட்டம் குறித்து மாநிலத்தின் கூட்டுறவு நூற்பாலைகளிடம் வட்டியில்லா சமப் பங்குகளாக வைப்பீடு செய்வதற்காக, இந்திய அரசு மாநில அரசுக்கு ரூ. 207.52 இலட்சம் நேரடிக் கடனுதவி வழங்கியுள்ளது. பயிற்சியின்போது, அகதிக் குடும்பத்திற்கு 6 மாத கால அளவிற்குப் பராமரிப்புப் படியும், உதவித் தொகையும் கொடுக்கப்படுகிறது. அகதிச் சிறுவர்களும் சிறுமியர்களும் வேலை கிடைக்க இயலும் வகையிலும் அல்லது சொந்தத் தொழிலில் ஈடுபட இயலும் வகையிலும் பல்வேறு பாடமுறைகளிலும் தொழில்களிலும் அவர்களுக்குப் பயிற்சியும் கொடுக்கப்படுகிறது. பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு இலவசக் கல்வி, உதவித் தொகை, அவர்களுக்கு மாணவர் இல்லத்தில் செய்து கொடுத்தால், மாணவர் இல்லக் கட்டணம், மாணவர் இல்லத்தில் அவர்களுக்கு இட வசதி செய்து கொடுக்கப்படா விட்டால், அறை வாடகை, புத்தக மானியம், காப்பு முன்பணவைப்புத்தொகை முதலியவை கொடுக்கப்படுகின்றன. பயிற்சியை முடித்த பின்னர், பல்வேறு நிறுவனங்களில், கம்பெனிகளில் அவர்கள் வேலையிலமர்த்தப்படுகின்றனர். அல்லது சொந்தத்தில் வேலை தேடிக் கொள்கின்றனர்.



ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்ப வந்தோர்களில் பெரும்பாலோனோர் மலைத் தோட்டத் தொழிலாளர்களே ஆவர். அவர்களை மலைத் தோட்டங்களில் குடியமர்த்துவதற்காக, தனியாகத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மலைத் தோட்டங்களில் அவர்களுக்கு இலவசமாக இட வசதி அளிக்கப்பட்டு, தொழிலாளர்களாக வேலைக்கமர்த்தப்பட்டுள்ளனர். ஏனைய எல்லா வசதிகளும் அவர்களுக்குச் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு குடும்பத்திலும் இரண்டு பேர் முறையான பணியாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

தாயகம் திரும்பி வந்தோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காகப் பின்வரும் திட்டங்கள் செயல் படுத்தப்படுகின்றன :

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா திரும்பி வந்த 1,875 குடும்பங்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்காக, 612.45 இலட்ச ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் நீலகிரியில் 1,517 ஹெக்டேர்களில் தேயிலை பயிரிடுவதற்காகப் பெரும் திட்டம் ஒன்றுக்கு ஏற்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்பி வந்த 285 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக 124 இலட்சம் ரூபாய் செலவில் கன்னியாகுமரி மாவட்டத்தில் 800 ஹெக்டேர்களில் ரப்பர் பயிரிடுவதற்கான திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா திரும்பி வந்த 125 குடும்பங்களை ஆனைமலையில் தற்போதுள்ள சின்கோனா மலைத் தோட்டத்தில் 5 இலட்சம் ரூபாய் செலவில் குடியமர்த்துவதற்கான திட்டம் ஒன்றுக்கு மத்திய அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா திரும்பி வருவோரைக் குடியமர்த்துவதற்காகப் பரிசீலனையில் உள்ள ஏனைய மலைத்தோட்டத் திட்டங்கள் பின்வருமாறு :





இம் மாநிலத்தில் தகுதி வாய்ந்த பகுதிகளில் தென்னை பயிரிடுவதற்கான திட்டம்.

மேல் பழனி மலையில் 323.74 ஹெக்டேர்களில் ஜெரானியம், பயிரிடுவதற்கான திட்டம்.

கூடலூர் ஜென்மம் நிலங்களில் 1,500 ஹெக்டேர்களில் தேயிலை பயிரிடுவதற்கான திட்டம்.

தாயகம் திரும்பி வந்தோர் வியாபாரம் செய்வதற்கும், வேலை வாய்ப்புக்கள் ஏற்படுத்திக்கொள்வதற்கும் இயலும் வண்ணம் அவர்களுக்குக் கடன் வழங்குவதற்காக மத்திய அரசும், தென் மாநில அரசுகள் நான்கும் பங்குத் தொகை செலுத்தியதன் மூலம் சென்னையில் இந்தியா திரும்பி வந்தோர் கூட்டுறவு நிதி உதவி—வளர்ச்சி வங்கி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வங்கித் திட்டங்களின் கீழ், தாயகம் திரும்பி வந்தோருக்குப் பல்வேறு தொழில் நிறுவனங்களில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது.

**மாநிலப் பண்ணைக் கழகங்களில் வேலைவாய்ப்பு !**

மாநிலப் பண்ணைக் கழகங்களில் வட்டியில்லாப் பங்குத் தொகையில் முதலீடு செய்வதற்காக, மாநில அரசுக்கு மத்திய அரசு நேரடியாக 77,95,600 ரூபாய் கடன் வழங்கியுள்ளது. 1977-78ஆம் ஆண்டில் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியா திரும்பி வந்த 1,300 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க மாநிலப் பண்ணைக்கழகம் சம்மதித்துள்ளது. இது வரையில், 834 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள குடும்பங்களுக்கு 1978 மார்ச் இறுதிக்குள் வேலை வாய்ப்பு அளிக்கப்படும். மாநிலப் பண்ணைக் கழகம் 1978-79ல் இந்தியா திரும்பி வந்த மேலும் 1,400 குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கத் திட்டமிட்டு உள்ளது.

நம்மோடு ஒன்றிப் போனவர்கள்—நம் வழி வந்தவர்கள்—அவர்களிடையே தாங்கள் அகதிகள் என்ற உணர்வு எழாமலிருக்க, அரசு அனைத்தையும் செய்து வருகிறது. நம்பிக்கை ஒன்றையே ஊன்றுகோலாகக் கொண்டு, தாயகம் நோக்கித் திரும்பி வந்துள்ள, திரும்பி வருகின்ற அவர்களைத் தமிழ்ச் சமுதாயம் நேசக் கரம் நீட்டி வரவேற்கும் என்பது உறுதி.

—தமிழ்நாடு சட்டப் பேரவையில் வைக்கப்பட்ட கொள்கைக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பெற்றது.



ஒகேனக்கல் காட்சிகள்



# சுற்றுலாக் காட்சிகள்



திருச்சி மலைக் கோட்டை



இராமேசுவரம் ஆலயம்
உட்பிரகாரம்



திருமலை நாயக்கர் மஹால், மதுரை



நாகூர் தர்கா



திருத்தணி திருக்கோயில்



ஸ்ரீரங்கம் ஆலயத்தில்...



வேளாங்கண்ணி மாதா கோயில்



கொடைக்கானல் ஏரி



கன்னியா குமரி



இராமேசுவரக் கடலில்
நீராடும் காட்சி

# ஆபாச வெளியீடுகளுக்குத் தண்டனை

அண்மைக் காலமாகச் சில பத்திரிகைகள் கீழ்த் தரமான இச்சைகளை ஈர்க்கும் வகையில் படங்களையும், கதைகளையும் வெளியிடுகின்றன. இவ்விதம் வெளியிடுவது இந்திய தண்டனைச் சட்டம் (Indian Penal Code) 292, 293 பிரிவுகளின் கீழ், தண்டனைக்குரிய குற்றமாகும்.

'' 292-வது பிரிவு என்றால் என்ன? இப்பிரிவு என்ன சொல்கின்றது? தெரிந்து கொள்வோமா? ஆபாசப் புத்தகங்கள் முதலியனவற்றை விற்பனை செய்தல் முதலியன. (1) உட்பிரிவு 2-ன் நோக்கங்களைப் பொறுத்த மட்டில், ஒரு புத்தகம், துண்டு வெளியீடு, தாள், எழுத்து, சித்திரம், ஓவியம், உருவமைப்பு அல்லது உருவம், அல்லது வேறு பொருள் எதுவும், அது காமத்தைத் தூண்டுவதாக அல்லது கீழ்த்தரமான இச்சைகளை ஈர்ப்பதாக அல்லது அதன் விளைவு (அல்லது இரண்டு அல்லது மேற்பட்ட தனித்த இனங்களை அது கொண்டிருக்கும்போது) அந்த இனங்களில் ஏதேனும் ஒன்றின் விளைவு, முழுமையாகப் பார்க்கும்போது, அதில் அடங்கியுள்ள அல்லது அமைந்துள்ள பொருளை அநேகமாகப் படிக்க, பார்க்க அல்லது கேட்கக்கூடிய ஆட்களைக் கெடுக்கவும் மற்றும் நெறிகெட்டச் செய்யவும் கூடிய அளவில் தொடர்புடைய எல்லாச் சூழ்நிலைகளையும் கருதுமிடத்து, அத்தகைய விளைவாக இருக்குமானால், ஆபாசமானதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(2) (அ) ஆபாசப்புத்தகம், துண்டு வெளியீடு, தாள், சித்திரம், ஓவியம், உருவமைப்பு, அல்லது உருவம் அல்லது வேறு ஆபாசப் பொருள் எதையாகிலும் விற்கிற, வாடகைக்குத் தருகிற, விநியோகம் செய்கிற, பொதுமக்களுக்குக் காட்சியாக வைக்கிற, அல்லது வேறெந்த முறையிலேனும் புழக்கத்திற்கு விடுகிற, அல்லது விற்பனை, வாடகை, விநியோகம் பொதுக் காட்சி அல்லது புழக்கத்தின் பொருட்டுச் செய்கிற, உண்டாக்குகிற அல்லது தம் வசம் வைத்திருக்கிற, அல்லது

(ஆ) ஏதேனும் ஆபாசப் பொருளை மேற்சொன்ன நோக்கங்களில் எதற்காகவேனும் அல்லது அத்தகைய பொருள் விற்கப்படும், வாடகைக்குத் தரப்படும், விநியோகம் செய்யப்படும் அல்லது பொதுமக்களுக்குக் காட்சியாக வைக்கப்படும். அல்லது ஏதேனுமொரு முறையில் புழக்கத்தில் விடப்படுமென்று அறிந்து அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து, இறக்குமதி செய்கிற அல்லது ஏற்றுமதி செய்கிற அல்லது அனுப்புகிற, அல்லது

(இ) தொழில் ஏதொன்றினின்றும் அது நடைபெறும்போது மேற்சொன்ன நோக்கங்களில் எதற்காகவேனும், அத்தகைய ஆபாசப் பொருள்கள் எவையேனும் செய்யப்படுகின்றன, உண்டாக்கப்படுகின்றன. விலைக்கு வாங்கப்படுகின்றன, வைத்திருக்கப்படுகின்றன, இறக்குமதி செய்யப்படுகின்றன, ஏற்றுமதி செய்யப்படுகின்றன, அனுப்பப்படுகின்றன, பொதுமக்களுக்குக் காட்சியாக வைக்கப்படுகின்றன அல்லது ஏதேனுமொரு முறையில் புழக்கத்தில் விடப்படுகின்றன என்று அறிந்து, அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து, பங்கு கொள்கிற அல்லது இலாபம் பெறுகிற, அல்லது,

(ஈ) இந்தப் பிரிவின்படி குற்றமாகிற செய்கை எதிலும் எவரேனும் ஈடுபட்டிருப்பதாக, அல்லது ஈடுபடத் தயாராக இருப்பதாக, அல்லது அத்தகைய ஆபாசப் பொருள் எதுவும் எவர் ஒருவரிடமிருந்து அல்லது அவர் மூலமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று விளம்பரம் செய்கிற, அல்லது எந்த வழியிலாகிலும் தெரியப்படுத்துகிற, அல்லது

(உ) இப்பிரிவின்படி குற்றமாகின்ற எந்தச் செய்கையையும் செய்ய முனைகிற அல்லது செய்ய முயல்கிற, எவராயினும் முதலாவது தண்டனைத் தீர்ப்பில், இரண்டு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றும், இரண்டாயிரம் ரூபாய் வரை நீடிக்கக் கூடிய அபராதமும், மற்றும் இரண்டாவது அல்லது பிந்திய தண்டனைத் தீர்ப்பு ஏற்படுமானால், ஐந்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒருகால அளவுக்குச் சிறைத்தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றும், ஐயாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்



சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடங்கள்

# அலைபாடும் கடலோரம் அமைந்த திருக்கோயில்கள்



இராமேசுவரம்



திருச்செந்தூர்

சில விலக்குகள் உண்டு;
அவையாவன:

(இ) புத்தகம், துண்டு வெளியீடு, காகிதம், எழுத்து, சித்திரம், ஓவியம், உருவமைப்பு, அல்லது உருவம் எதற்கும்,

(i) அத்தகைய புத்தகம், துண்டு வெளியீடு, தாள், எழுத்து அல்லது சித்திரம், ஓவியம் உருவமைப்பு அல்லது உருவமானது, விஞ்ஞானம், இலக்கியம், கலை அல்லது கல்வி அல்லது பொதுவாக அக்கறை கொள்ளக்கூடிய வேறு பொருள்களின் நலனுக்காக என்னும் காரணத்தின் பேரில், பொது நன்மைக்கானதென்று நியாயமென நிரூபிக்கப்பட்டிருக்கிற அத்தகைய வெளியீடானபோது, அல்லது

(ii) உண்மையான மத சம்பந்தமான நோக்கங்களுக்காக வைக்கப்படுகிற அல்லது பயன்படுத்தப்படுகிறதானபோது,

(ஆ) (i) 1958 ஆம் ஆண்டின் பழைமையான நினைவுச் சின்னங்கள் மற்றும் தொல்பொருள் ஆய்வு மனைகள் மற்றும் எஞ்சிய பகுதிகள் சட்டத்தின் (1958-ன் 24) பொருளுக்கு உட்பட்ட ஒரு பழைமையான நினைவுச் சின்னம் எதிலும், அல்லது

(ii) கோவில் எதிலும், அல்லது விக்கிரகங்களைத் தூக்கிச் செல்வதற்குப் பயன்படுத்தப்படும் அல்லது மத சம்பந்தமான நோக்கமெதற்கும் வைத்திருக்கப்படும் அல்லது பயன்படுத்தப்படும் தேர் எதிலும்,

இவைகளின் மீது அல்லது இவைகளினுள் சிற்பமாக்கப்பட்ட, செதுக்கப்பட்ட ஓவியமாக்கப்பட்ட ஓர் உருவமைப்பு அல்லது வேறுவிதமாக உருவமைப்புச் செய்யப்பட்ட எதற்கும் இப்பிரிவிலிருந்து விலக்கு உண்டு.

293-வது பிரிவு கூறுவதாவது:

'இளைஞர்களுக்கு ஆபாசப் பொருள்களை விற்பனை செய்தல் முதலியன:

இருபது வயதிற்கு உட்பட்ட எவருக்கும் முந்திய கடைசிப் பிரிவில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் போன்ற அத்தகைய ஆபாசப் பொருள் எதையும் விற்கிற, வாடகைக்குத் தருகிற, விநியோகம் செய்கிற, காண்பிக்கிற அல்லது புழக்கத்தில் விடுகிற, அல்லது அவ்வாறு செய்ய முனைகிற, அல்லது முயல்கிற எவராயினும் முதலாவது தண்டனைத் தீர்ப்பில் மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றும், இரண்டாயிரம் ரூபாய் வரை அபராதமும், மற்றும் இரண்டாவது அல்லது பிந்திய தண்டனைத் தீர்ப்பு ஏற்படுமானால் ஏழாண்டு வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றும் ஐயாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்''.

மேற்கூறிய இந்திய தண்டனைச் சட்டம் 292, 293 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ள குற்றங்கள் காவல்துறையினரால் பிடிக்கட்டளையின்றிக் கைது செய்வதற்குரிய குற்றங்களாகும்.

### நிகர் ஏது ?

"யார் பேசுவதில் எவ்வளவு இன்பம் இருந்தாலும், தாய் நம்மை "வாடா மகனே!" என்று கூறும்போது ஏற்படும் இன்பத்திற்கு நிகரில்லை. அதுபோல் தாய்மொழியின் இன்பத்திற்கு நிகர் ஏதுமில்லை."

—பேரறிஞர் அண்ணா


காற்று நிகர் மென்மை
வண்ணத்துப் பூச்சியின்
எழில் வண்ணம்
கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட நூல் சேலைகள்
உண்மைதான்! மென்மையான
அச்சிட்ட நூல் சேலைகள்—நவீன
டிசைன்கள்—யமுனா, அஜந்தா,
சாமுண்டி-உள்ளங்கவர்
வகைகள்—பரவசமூட்டும்
வண்ணங்கள். கோ-ஆப்டெக்ஸ்
அச்சிட்ட சேலைகள் இன்றைய
நாகரீகமாகத் திகழ்பவை!
கைத்தறியே
வண்ணத்துப்பூச்சி

# மன நலம்


டாக்டர் ஓ. சோமசுந்தரம்
டாக்டர் டி. ஜெயராமகிருஷ்ணன்
டாக்டர் எம். திருநாவுக்கரசு
மனநல மருத்துவமனை


மனிதன் தோன்றிய நாள் முதற்கொண்டே இன்பத்தைத் தேடி அலையும் மனப்போக்கு இருந்து வந்திருக்கிறது. பொதுவாக எல்லா உயிர்களும் விரும்புவது இன்பமே! இந்த இன்பம் எங்கே இருக்கிறது? நாம் எல்லோரும் அது புறஉலகில் இருப்பதாக எண்ணுகிறோம்; எண்ணி அதை அடையப் பலவழிகளில் முயலுகிறோம். ஆனால், உண்மையில் பார்க்கப்போனால் இன்பம் என்பது புறஉலகில் இல்லை; அது அகஉலகில்தான் இருக்கிறது. அதாவது, மனத்தில்தான் நிறைந்து நிற்கிறது.

மனம் என்றால் என்ன? ஐம்பொறிகளுக்கும், ஐம்புலன்களுக்கும் ஆதாரமாய் நின்று உயிரையும் உடலையும் இணைக்கும் கருவியே மனம். நம் செயல்கள் யாவற்றிற்கும் மூல காரணம் மனமே. இம் மனம் இல்லையென்றால் உலகின்கண் அடையும் எந்த இன்பமும் நாம் அடைவது அரிது. ஆக, இன்பத்தின் இருப்பிடமாக அமைகிறது. மனம். மனத்தின் நலத்தைப் பொறுத்துத்தான் நமக்கு இன்பமும், துன்பமும் ஏற்படுகிறது.

மனத்தின் நலம் குறையும்போது மனிதனுக்குப் பலவிதமான நிலைகுலைவுகள் ஏற்படுகின்றன. நலக்குறைவின் அளவிற்கேற்ப மன நோய்கள் உண்டாகின்றன. ஓர் அளவிற்குமேல் மனநலன் குறையும்போது மனிதன் தன் நிலையை இழந்து பெரிதும் பொருந்தாத செயல்களில் ஈடுபடுகிறான். அத்தகைய மனிதனுக்கு நாம் 'பைத்தியக்காரன்' என்ற பெயரைச் சூட்டி, அவனை மனித சமுதாயத்திலிருந்து ஒதுக்குகிறோம்.

ஆக, மனநலத்தை இழந்த ஒருவனை, உடல் எவ்வளவு திடமாக இருப்பினும், உருவ அமைப்பு மற்றவர்களைப் போல அப்படியே இருந்தாலும் சமூகம் அவனை மனிதனாகக் கருதுவதில்லை. இதன் மூலம் மனநலத்தின் முக்கியம் எவ்வளவு இன்றியமையாதது என்பது புலனாகும்.

ஆரம்ப காலத்திலிருந்தே மன நோயாளிகளை, உடல் நோயால் அவதிப்படும் நோயாளிகளைப் போல் கருதி சிகிச்சை அளிக்காமல் அவர்களுக்குப் பேய், பிசாசு பிடித்திருப்பதாகக் கருதி சமூகத்திலிருந்து ஒதுக்கி வைத்திருந்தனர்.



மந்திரவாதிகள், கோயில் பூசாரிகள் முதலியோர் பேய் விரட்டுவதாகச் சொல்லி மன நோயாளிகளை விலங்காலும், சங்கிலியாலும் பிணைத்து, பலவிதங்களில் அடித்துத் துன்புறுத்தினார்கள். இருட்டறையில் பூட்டி வைத்தார்கள். மண்டை ஓட்டில் துளையிட்டு அதன் மூலம் பேய் வெளியேறிவிடும் என்று நம்பினார்கள். நம் நாட்டில் இத்தகைய கொடுமைகள் நடக்காவிட்டாலும், இன்றும் பேய்விரட்டுவதையும், கோயில்களுக்குச் சென்று வருவதையும் நாம் காணலாம்.

பத்தாம், நூற்றாண்டிற்கு முன்னர், மருத்துவத்தின் தந்தை என்று அழைக்கப்படும் ஹிப்போகிரேட்டஸ் (Hippocrates) மனநோயாளிகளுக்கு மனிதாபிமான அடிப்படையில் சிகிச்சை முறைகளை வகுத்தார். ஆனால், சிறிது காலத்தில் திரும்பவும் பழைய முறைகளுக்கே சென்றன. மீண்டும் கொடுஞ் செயல்கள் தாண்டவமாடின. மனநோயாளிகள் வேதனை அனுபவித்தனர். ஆனால், சிறிது சிறிதாகப் பேரறிஞர்களாலும், அரசாங்கத்தாலும் மனநோய்களுக்குத் தகுந்த, சீரிய சிகிச்சைகள் செய்யும் காலம் ஏற்பட்டது. 1908-ல் திரு. கிளிபோர்டு பீர்ஸ் (Clifford Peers) என்பவர் தான் மனநோயால் பீடிக்கப்பட்டிருந்தபொழுது அதற்காகச் சிகிச்சை பெற்ற மூன்று வேறுபட்ட மருத்துவமனைகளில் அவர் பெற்ற கசப்பான அனுபவங்களைச் சுயசரிதமாக எழுதி வெளியிட்டார். அதில் அவர் பட்ட துன்பங்களையும் நீக்கி முன்னேற்றம் காண வேண்டும் என்பதைக் குறிப்பிட்டிருந்தார். இப்புத்தகம் மனித சமுதாயத்தில், ஒரு மாபெரும் எழுச்சியை, மன நோயாளிகளுக்காகச் சமூகம் ஆற்றவேண்டிய கடமை உணர்வுகளைத் தூண்டிவிட்டது. இதன் அடிப்படையில் மருத்துவமனைகளையும் சிகிச்சை முறைகளையும் நல்லமுறையில் சீர்திருத்தி அமைக்கக் காரணமாய் இருந்தவர் மிகவும் பிரச்சித்தி பெற்ற அமெரிக்க டாக்டர் அடால்ப் மேயர் அவர்களே. அதோடு சமூக மனநல எண்ணத்தை மக்கள் மனத்தில் உருவாக்கி தனி மனிதன் நலத்தைப் போல சமூக மனநலத்தையும் பாதுகாக்க வேண்டும் என்று எண்ணி அதற்கான நிலையத்தை முதலில் நிறுவியர் திரு. பீர்ஸ். அதன் வளர்ச்சியே இன்று நாம் காணும் பல்வகை மனநல மருத்துவ மனைகளும், சமூக மனநல நிலையங்களும் ஆகும்.

**இன்றைய மனநல மருத்துவமனைகள்:**

இன்றைய மருத்துவமனைகள் மிகத் திறமையான நிர்வாகத்தோடு நல்ல மருத்துவ வசதிகளைக் கொண்டு விஞ்ஞான முறைப்படி மனிதாபிமான உணர்வோடு செவ்வனே இயங்கி வருகிறது. நம் சென்னை மாநகரிலே அமைந்துள்ள அரசாங்க ''மனநல மருத்துவமனை''

> ''மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
> எல்லாப் புகழும் தரும்'' —குறள்

இதற்கு உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம்.

இங்கே, நோயாளிகளுக்கு இருபத்து நான்கு மணி நேரமும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதற்கான வாய்ப்பும் வசதிகளும், தமிழக அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. நோய்க்குப் பலவகை சிகிச்சை செய்வதோடு மட்டுமல்லாமல் நோயாளிகளுக்கு நல்லதொரு சூழ்நிலை உருவாக்கித் தரப்பட்டுள்ளது. அவர்கள் நோய் குணம் பெற்று வெளியே செல்லுங்காலை மீண்டும் அவர்கள் செய்துவந்த பணியைத் தொடரவோ, அல்லது, புதுப்பணிகளில் ஈடுபட்டுத் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவோ, வேண்டிய பயிற்சியை அளித்து, அதற்கான ஆற்றலையும் ஆர்வத்தையும் உண்டுபண்ணி, அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அதுமட்டுமன்றி நாள்பட்ட காரணத்தால், தேவையான அளவு குணப்படாமல் இருப்போரையும் ஓரளவு குணமடைந்தும், வெளியுலகில் ஆதரவற்ற நிலையில் அதாவது அனாதையாக உள்ளவர்களையும் அவர்கள் வாழ்நாள் முழுவதும் மருத்துவமனையே கண்காணித்து வருகிறது.

மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள், வந்தவுடன் முறைப்படிப் பதிவு செய்யப்பட்டு மருத்துவரால் பரிசோதனை செய்யப்படுகிறார். அவரது உடலும் உள்ளமும் பரிசோதிக்கப்படுகிறது. இதுதவிர, இரத்தப் பரிசோதனை, எக்ஸ்ரே, மூளை அலைகள் (EEG) போன்ற பரிசோதனைகளும் செய்யப்படுகின்றன. அத்தோடு நோயாளியைப் பற்றிய முழு விவரமும் சேகரிக்கப்பட்டுப் பதிவு செய்யப்படுகிறது. அது முறைப்படி இரகசியமாகப் பாதுகாக்கப்படுகிறது. பின்பு நோயாளியின் நிலைமையைப் பொறுத்தும் நோயின் தன்மையைப் பொறுத்தும் அவரை மருத்துவமனையில் சேர்த்தோ, அல்லது புறநிலை நோயாளியாகவோ வைத்து முறையான சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மருத்துவமனையில் ஆண்கள், பெண்கள், சிறுவர், சிறுமியர் எனப் பிரிவு செய்யப்பட்டு, சிகிச்சை அளிக்கப்படுகிறது. சிகிச்சையில் முக்கியமாக நோய்க்கேற்ற சிறந்த மருந்துகள் மாத்திரையாகவும், ஊசி மூலமாகவும் அளிக்கப்படுகிறது. தேவைப்படும் சிலருக்கு மின் அலை மருத்துவம் (E. C. T.) என்று சொல்லப்படும் மென்மையான மின் அதிர்ச்சி சிகிச்சையும் கொடுக்கப்படுகிறது. இது தவிர, **Psychotherapy** என்று சொல்லப்படும் உளவியல் மருத்துவம்


மனநல மருத்துவ மனை-புற நோயாளிகள் பிரிவு

அதாவது, நேரடிப் பேச்சு மூலமாகப் பல வழிகளில் ஆலோசனைகள் கூறி; தவறுகளைச் சுட்டிக்காட்டி, சிறுகச் சிறுக நோயாளியின் மனநிலையை உணரச் செய்கிறார்கள். உடல் நோயாளியைப் போலவே மன நோயாளியும் அன்புடனும், பரிவு பாசத்துடனும் கவனிக்கப்படுகிறார்கள்.

மேலே கூறிய சிகிச்சை முறைகள் மட்டுமின்றி நோயாளி சோம்பேறியாகிவிடாமல் தடுப்பதற்கு வேண்டி 'தொழில் வழி மருத்துவம்' என்ற பகுதியும் செயல்படுகின்றது. அப்பகுதியில் இருக்கும் பல்வேறுவிதமான தொழிற் பிரிவுகளில் அவர்களை ஈடுபடுத்தி, கற்றுத் தந்து ஊக்கப்படுத்துகிறார்கள். இதனால் அவர்களது மனம் வேலையில் ஒருமுகப்பட்டு ஒழுங்குபட ஏதுவாகிறது. குணமடைந்து வெளியே செல்லும்போது தங்களைக் காத்துக் கொள்ளவும் அத்தொழில்கள் உதவுகின்றன.

இதுதவிர நோயாளிகளுக்குப் பொழுதுபோக்கு வசதிகள், விளையாட்டுப் பொருள்கள், நூலகம் முதலியனவும் காலை மாலை கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு சமூக நிறுவனங்கள் நோயாளிகளுக்காகப் பல்சுவை நிகழ்ச்சிகளை அவ்வப்போது ஏற்பாடு செய்கின்றன.

இத்தோடு மருத்துவத்தில் நம் முன்னோர்கள் பெரிதும் மதித்து கையாண்ட யோகாசன முறைகளும் சிலருக்கு அளிக்கப்படுகிறது. இதன் பெருமையை உணர்த்தும் வகையில்

''புறப்பட்டு புக்குத்திரிகின்ற
வாயுவை
நெறிப்பட வுள்ளே நின்மல
மாக்கில்
உறுப்பு சிவக்கும், உரோமம்
கருக்கும்
புறப்பட்டுப் போகான் புரிசடை
யோனே''

என்று யோகாசனத்தில் முக்கியமான பிராணாயாமத்தைத் திருமூலர் குறிப்பிடுகிறார். நரை திரை விழுந்து, உடல் கருத்து முதிர்ந்த நிலையில் உள்ளவன்கூட யோகாசனமான பிராணாயாமம் செய்து வந்தால் உடல் வலிவுற்று, கருமைமாறி செந்நிறம் பெற்று, நரை மாறி கருநிறம் பெறும் என்று கூறியதோடு மட்டுமல்லாமல், நாம் விரும்பினால் ஒழிய, உயிர் நம்மை விட்டுப் பிரியாது என்று சொல்லுகிறார். காலன் நம்மிடம் வர அஞ்சுவான் என்கிறார். தற்போது இவைகள் எல்லாம் விஞ்ஞான ரீதியில் மேலை நாட்டவர் பரிசோதனைகள் மூலம் நிரூபித்து வருகிறார்கள். எனவே, நம் மருத்துவமனையிலும் யோகாசனத்துக்கு முக்கியம் அளித்து அவ்வகையிலும் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

நல்ல உணவு மூன்று வேளைக்கும் அளிக்கப்படுகிறது. நல்ல உடைகளோடு நல்ல காற்றோட்டமும், வெளிச்சம் நிறைந்த அறைகளில் நோயாளிகள் தனி படுக்கை வசதிகளோடு கவனிக்கப்படுகிறார்கள். உளநோயோடு உடல் நோயும் கவனிக்கப்படுகிறது. பகல் நேரங்களில், சிறிது குணமடைந்த நோயாளிகள் மருத்துவமனைக்குள் உலாவி வர அனுமதிக்கப்படுகிறார்கள். இது தவிர புறநிலைப்பகுதியில் சிறப்புப் பகுதிகளாகக் குழந்தைகள் மனநலம், இளைஞர்கள் மனநலம், கால்கை (Epilepsy) வலிப்பு நோய்க்கும், நரம்பு சம்பந்தப்பட்ட நோய்க்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதோடு **Day Hospital** என்று, நோயாளிகளை காலை 8 மணி

முதல் மாலை 4 மணி வரை வைத்தியம் பார்க்கும் பகுதியும், 4 மணிக்கு மேல் இரவு முழுவதும் அவசர நோயாளி பகுதியும் உள்ளது. நம் தமிழ் நாட்டில் இவ்வளவு வசதிகள் படைத்த மருத்துவ மனைகள் மற்ற பகுதிகளில் இல்லாவிட்டாலும், முடிந்தளவு கவனிக்கப் பல்வேறு இடங்களில் அமைந்துள்ள எட்டு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும், மாவட்டத் தலைமை மருத்துவமனைகளிலும், மனநோய்ப் பிரிவு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது.

**நோயின் அறிகுறிகள் :**

நாம் இதுவரை நோய் வந்தவர்களுக்குச் செய்யப்படும் மருத்துவ முறையைப் பற்றி அறிந்தோம். இனி மனநோய் வருதற்குரிய அறிகுறிகள் யாவை என்பதைப் பார்ப்போம். அவைகளில் முக்கியமானது தொடர்ச்சியான தூக்கமின்மை, சோர்வுற்று, தனிமையில் இருத்தல், பொருத்தமற்ற வார்த்தைகளை, விஷயங்களைத் தனியாகவோ, அல்லது மற்றவர் முன்னிலையோ தொடர்ச்சியாகவும் அதிகமாகவும் பேசுதல், அல்லது மௌனம் சாதித்தல், தன்னிலையிழந்து வீட்டைவிட்டு வெளியே கண்ட இடங்களில் அலைதல், அடுத்தவர் மேல் இல்லாத குறைகளைக் கூறி சந்தேகப்படுதல், யாருமே இல்லாதபோது இருப்பதாகச் சொல்லுதல், அல்லது இன்னொருவர் அவரோடு பேசிக் கொண்டிருப்பதாகச் சொல்லுவது, தற்கொலை உணர்வு, சில சமயங்களில் திடீரென்று அழுவது, அல்லது சிரிப்பது போன்ற செய்கைகளும், கோபங்கொண்டு ஒருவரைத் தாக்குவதும் போன்ற செய்கைகள் மனநோயின் சில அறிகுறிகள் ஆகும்.

இதுதவிர சில சமயங்களில் தன்னைப் பற்றி மிகவும் உயர்வாக எண்ணிப் பேசுவதும், சாப்பிடாமல் இருப்பது, பார்த்த வேலைக்குப் போகாமலும், தன்னைப் பற்றிய சுகாதாரத்தைச் சிறிதும் பொருட்படுத்தாமலும் இருப்பர். அறிவு தெளிவு குறைந்தும், ஞாபக மறதியும், எதிலும் அக்கறையில்லாமலும், நன்மை தீமை அறியா மனப்பான்மையும் இருக்கும். எல்லாவற்றையும்விட தனக்கு மனநோய் இருப்பதாக ஒத்துக் கொள்ளும் உள்நோக்கு அற்றுப்போய் இருக்கும். இதுதான் மிகவும் முக்கியமானது, உடல் நோயாளிக்கும், மனநோயாளிக்கும் உள்ள முக்கியமான வேறுபாடு. மேலே கூறிய அனைத்தும் ஒரு நோயாளிக்கு இருக்க வேண்டும் என்பதில்லை.

**நோய் வரக் காரணங்கள் :**

மனநோய் வர மனநூலார் பல்வகைக் காரணங்களைக் கூறுகின்றார்கள். அவைகளில் முக்கியமானவை பாரம்பரியம், உடற்கூறு அமைப்பு, சுற்றுப்புறச் சூழ்நிலைகள், சமூக கலாச்சார பழக்க வழக்கங்கள், மூளைக்கு ஏற்படும் பல்வகை நோய்கள் எல்லாவற்றுக்கும் மேலாக மனத்திலே தோன்றும் அளவுக்கு அதிகமான பல்வகை உணர்ச்சி மாற்றங்களாகும். இவ்வுண்மைகளை நம் பைந்தமிழ் இலக்கியங்களும், சித்தம், ஆயுர்வேதம் போன்ற நம்நாட்டு மருத்துவப் பிரிவுகளும் நன்கு எடுத்துரைக்கின்றன. தொல்காப்பியத்தில் 'மெய்ப்பாட்டியல்' என்ற பகுதியும் திருக்குறளில் காமத்துப்பாலிலும், மற்ற அதிகாரங்களிலும், திருமூலரின் திருமந்திரத்திலும் மற்ற காப்பியங்களிலும் காணலாம்.

தாய்தந்தையரில் ஒருவர் மனநோய் உடையவராக இருந்தால் அவர்களது மக்களில் ஒருவருக்கோ அல்லது பேரக் குழந்தைகளுக்கோ மனநோய் வரலாம். இதைத்தான் பாரம்பரியம் என்கிறோம். மணமாகுமுன்பே திருமண ஆலோசனைகள் மூலம் நாம் இதைத் தடுக்கலாம். சுற்றுப்புறச் சூழ்நிலைக் காரணங்களில் குடும்பம் மிகவும் முக்கியமானது. சிறு பருவத்தில் பெற்றோரை இழத்தல் அல்லது பெற்றோரின் மணமுறிவு, அல்லது பெற்றோர் இருந்தும் அவர்களது முழு அன்பையும் பெற இயலாத நிலை, பெற்றோரின் அளவுக்கு அதிகமான கண்டிப்பு, நிராகரிப்பு, செல்லம் கொடுப்பது முதலியவைகள் இளம் மனத்தில் ஒரு பிளவை உண்டுபண்ணுகிறது. பிற்காலத்தில் அது மனநோயாக மாறுகிறது. இத்தோடு மட்டுமின்றி தாழ்வு மனப்பான்மை, ஆதரவற்றநிலை, பய, பாவ உணர்ச்சிகள் திடீரென தனக்கு மிகவும் நெருங்கியவர்களை இழத்தல், தோல்விகள், கருத்துப் போராட்டங்கள் போன்றவையும் மனநோய் ஏற்படக் காரணமாகின்றன.

மன நிலை பாதிக்கப்பட்ட சிறுவர் பயிற்சிப் பள்ளிச் சாதனங்கள்



இதுதவிர உடலில், முக்கியமாக மூளையில் ஏற்படும் நோய்களும், தலையில் ஏற்படும் காயங்களும், கால்கை வலிப்பு, சில உலோகப்பொருள்கள், நச்சுக் காற்று முதலியவைகளாலும் மனநோய் ஏற்படுகின்றன. அடுத்து, சாராயம், கஞ்சா, அபின் மாத்திரைகள் முதலிய போதைப் பொருள்களைத் தொடர்ச்சியாக உபயோகப்படுத்துவதாலும் மனநோய் உண்டாகிறது. இவை யாவும் ஒருசில காரணங்களே.

**நோய் தடுப்பு முறைகள் :**

மேற்கூறிய பல்வகைக் காரணங்களை முடிந்த அளவு தவிர்த்தோமானால் மனநோய் வராமல் தடுக்க முடியும். நோய்த் தடுப்பு முறைக்காக முக்கியமாக ஏற்பட்டதுதான் சமூக மனநல நிலையங்கள். நம்நாட்டில் சரிவர அமையவில்லை என்றாலும், மேலை நாடுகளில் அவை சிறந்த பயனைக் கொடுக்கின்றன. தடுப்பு முறைகள் மூன்று நிலைகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன.

முதல்நிலை என்பது, நாம் அறிந்த நோயின் காரணங்களை வரவிடாமல் தடுப்பது. அதாவது அவைகளை முடிந்த அளவு ஆரம்பத்திலேயே ஒதுக்குவது. இது பயிற்சி பெற்றவர்களால் ஆலோசனை அளிக்கப்பட்டு நிறைவேற்றப்படுகிறது. ஆசிரியர்கள், அறிஞர்கள், மதத்தலைவர்கள், சமுதாயத் தொண்டர்கள், சமூகநல ஊழியர்கள் முதலியோர் இதில் முக்கிய அங்கம் வகிக்கின்றனர். இவர்களின் ஆலோசனை வாழ்க்கைச் சிக்கல்களைத் தக்க சமயத்தில் தீர்த்து வைத்து மனநலத்தைப் பாதுகாக்கிறது.

இரண்டாம் நிலையில், நோய் வந்தால் அதை ஆரம்பத்திலேயே கண்டு அதற்குரிய சிகிச்சை அளிப்பது. இதன் பொறுப்பை

மனநல மருத்துவநிலையங்கள் ஏற்கின்றன.

மூன்றாம் நிலையில், நோய் குணமான பின்பு, நோயாளிக்கு ஏற்படும் மற்ற குறைபாடுகளைக் கவனித்து அதை முடிந்த அளவு நிவர்த்தி செய்வதாகும். அவர்கள் ஒரு வேலையில் ஈடுபடுத்தி, வாழ்வைச் சீரமைத்து புனர்வாழ்வு வாழச் செய்வதாகும். இப்பணியை சமூக மனநல நிலையங்கள் ஏற்கின்றன.

மேற்கூறியவை எல்லாவற்றையும்விட ஒவ்வொரு கற்றறிந்த மனிதனும் முதலில் தன்னைத் தானே அறிந்துகொண்டு இத்தகைய தடுப்பு முறைகளைக் கையாளவேண்டும். முதலில் நாம் உடல் நலத்தைப் பேண வேண்டும். ஏனெனில், உடல் நலம் கெட்டால், மனநலமும் கெட்டு உயிர் பிரிந்து விடும். இதனையே, ''உடம்பால் அழிவார் உயிரால் அழிவர்; திடம்பட மெஞ்ஞானம் சேரவும் மாட்டார்'' என்று பெரியோர் சொல்லி வைத்தனர்.

''உடம்பினை முன்னம் இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே உருபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன் கோவில் கொண்டானென்று
உடம்பினை யானிருந்து ஓம்புகின்றேனே''—

என்று திருமூலர் உடம்பின் மகத்துவம் குறித்துக் கூறுகிறார்.

ஆக, இதையெல்லாம் நோக்கும்போது உடலும் மனமும் பொருந்தி அமைந்தால்தான் நமக்கு நல்வாழ்வு உண்டு என்று புலனாகிறது. ஆசை கவலையை உண்டாக்கி மனிதனைத் தின்று விடுகிறது.

''கவலையில்லாமல் வாழ்ந்ததால்தான் எனக்கு முதிர்ந்த பருவத்திலும் நரை திரையில்லை' என்று பெரும்புலவர் பிசிராந்தையார் கூறுவது மிகவும் உணரத்தக்கது.

பொறாமை, பேராசை தவிர்த்து அன்பையே துணையாக்கி அறவாழ்வு வாழ்வதுதான் மனிதவாழ்க்கை என்று நம்முன்னோர் பல வழிகளில் காட்டிச் சென்றனர். எனவே, உடற்பயிற்சி மூலம் உடலையும், நல்ல எண்ணங்கள், அன்பு, இறையுணர்வு முதலியவற்றால் உள்ளத்தையும் ஒழுங்குபடுத்தினால் நமக்குச் சிந்தனைத் தெளிவும், மனஅமைதியும் கிடைக்கும். அதனால் விளைவதுதான் பேரின்பம்!



மயிலாப்பூர் தேர்த்திருவிழா

மாமல்லபுரக் கடற்கரை





# சுற்றுலாவும் வேலைவாய்ப்பும்

வியாபார அடிப்படையில் நோக்குமிடத்து, எண்ணெய்த் தொழிலுக்கு அடுத்தபடியாக உலகில் சுற்றுலாதான் மிகப்பெரிய தொழில். உலக சுற்றுலா நிறுவனத்தின் கணக்குப்படி 1977-ஆம் ஆண்டில், சுமார் 24 கோடியே 5 இலட்சம் பேர்கள் உலக நாடுகளிடையே சுற்றுப் பயணம் செய்துள்ளனர். இதற்கு அவர்கள் செலவழித்த தொகை 500 கோடி டாலர். அமெரிக்கா போன்ற முன்னேற்றமடைந்த நாடுகளில் மொத்த தேசிய உற்பத்தியில் கணிசமான சதவிகிதம் சுற்றுலாவினால் ஏற்படுகிறது.

இந்தச் சுற்றுலாத்துறை அமெரிக்காவில் சுமார் 40 இலட்ச மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கிறது. ஓட்டல்கள், விமான நிலையங்கள், சுற்றுலாப் பயண நிறுவனங்கள், அரசுச் சுற்றுலா அலுவலகங்கள் ஆகியவற்றில் இவர்களுக்கு வேலை கிடைக்கிறது.

இந்தியாவில் சுற்றுலா எந்த அளவுக்கு வேலை வாய்ப்பு அளித்திருக்கிறது என்பது பற்றி புள்ளி விவரம் எதுவும் எடுக்கப்படவில்லை. எனினும், 1973-ல் தேசிய பொருளாதார ஆராய்ச்சிக் கழகம் மேற்கொண்ட ஆய்வுப்படி சுற்றுலாவினால் ஏற்பட்ட வேலைவாய்ப்பு 1965-66இல் 3.89 இலட்சம் என்ற அளவுக்கு இருந்தது. 1968-69இல் அது 5.19 இலட்சத்திற்கு உயர்ந்தது. 1972 73-இல் இது 9.34 இலட்சத்திற்கு மேலும் அதிகரித்தது. சுற்றுலாச் செலவினால் உள்நாட்டிலும், சர்வதேச அளவிலும் கிடைத்த வருமானம் நாட்டின் மொத்த வருமானத்தில் ஏறத்தாழ 9 முதல் 10 சதவிகிதமாகும்.

1970-71-ஆம் ஆண்டில் சுற்றுலாத் துறையில் இந்நாட்டில் சுமார் 1,57,000 - லிருந்து 1,76,000 பேர் நேரடி வேலை பெற்றனர். இதே கால அளவில் சுற்றுலா மூலம் கிடைத்த வருமானம் நாட்டின் மொத்த வருமானத்தில் 12.5 சதவிகிதத்திலிருந்து 14.1 சதவிகிதம் வரை இருந்தது. 1977-ஆம் ஆண்டில் இந்தியாவிற்கு 6.40 இலட்சம் அயல் நாட்டுச் சுற்றுப் பயணிகள் வந்தனர். 1972-இல் வந்தவர்கள் தொகை 3.4 இலட்சம். சுற்றுலா மூலம் அந்த ஆண்டில் கிடைத்த அந்நியச் செலாவணியின் மதிப்பு ரூபாய் 48.32 கோடி. ஆனால், தற்போது அது 280 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது.

நாட்டின் ஆறு பெரிய ஏற்றுமதித் தொழில்களில் சுற்றுலா ஒன்றாக உள்ளது. ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டிற்கு வந்து ஓட்டல்களில் தங்குவதற்கும், போக்குவரத்துக்கும், உணவு, பொழுதுபோக்குக்கும் ஏராளமான பணம் செலவழிக்கின்றனர்.

சுற்றுலாத் தொழில் மேம்பாட்டிற்காக வகுக்கப்படும் மூலதனச் செலவு மிகக் குறைவு. சுற்றுலாப் பயணிகளைக் கவரக் கூடிய இயற்கை எழில்மிக்க இடங்கள் பல இந்தியாவில் இருக்கின்றன. கஜுராவோ, கோனார்க், மாமல்லபுரம், தாஜ்மகால் ஆகிய இடங்களும், கோயில்களும் நமது நாட்டின் அரிய கலைச் செல்வங்கள்; உள்ளத்தை அள்ளும் கலைக் கூடங்கள்.

சுற்றுப் பயணிகளுக்குத் தங்கும் வசதிகளையும், போக்குவரத்து வசதிகளையும் செய்து கொடுப்பது தான் நமது முக்கியமான பணி. சுற்றுலாத் தொழிலுக்குத் தேவையான பொருட்கள் பெரும்பாலும் நம் நாட்டிலே உற்பத்தியாகின்றன. இந்தியாவில் சுற்றுலாவை வளர்ப்பதற்காகச் செலவு; நாட்டின் மொத்த அந்நியச் செலாவணி சம்பாதிப்பதில் சுமார் ஐந்து சதவிகிதமே ஆகும். அதாவது 100 டாலர் நாம் அந்நியச் செலாவணி சேமித்தால், அதில் ஐந்து டாலர் தான் சுற்றுலா வளர்ச்சிக்குச் செலவழிக்கிறோம்.

உள்நாட்டுச் சுற்றுலா பற்றிய புள்ளி விவரங்கள் முறைப்படி தயாரிக்கப்படுகின்றன. தொழில்மயமான பகுதிகள், மலைவாச இடங்கள் ஆகியவற்றில் மக்கள் நெரிசலைப் பார்க்கும்போது நடுத்தர வருமானமுள்ள பலர் தற்போது அதிகமாகச் சுற்றுப் பயணம் செய்கிறார்கள் என்பது புலனாகிறது.

1971-வது ஆண்டு மக்கட் தொகைக் கணக்கைப் பார்க்கும் போது மொத்தமுள்ள 11.4 கோடி குடியிருப்பு இல்லங்களில் சுமார் ஆறரை இலட்சம் இல்லங்கள் ஓட்டல்களாகவும், சிற்றுண்டி விடுதிகளாகவும் இருக்கின்றன. இவை 15.3 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு அளித்துள்ளன. இதில் 6.5 இலட்சம் பேர் (42.5 சதவிகிதம்) கிராமப்பகுதிகளிலும் 8.8 இலட்சம் பேர் (57.7 சதவிகிதம்) நகர்ப்புறங்களிலும் வேலை செய்கின்றனர். உள்நாட்டுச் சுற்றுலா மேம்பாடு காண்பதற்குத் தனி முக்கியத்துவமும் முன்னுரிமையும் தரப்பட்டுள்ளது. நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஜனதா ஓட்டங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் படுக்கை வசதிகள் 100-லிருந்து 1000 வரை இருக்கும். பயணிகளுக்காக அதிகப்படியான சத்திரங்களைக் கட்டுவதற்கும், இந்நிலையங்களை ஊக்குவிக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு மாநிலமும் குறைந்த பட்சம் ஒரு ஜனதா ஓட்டலையாவது ஏற்படுத்த வேண்டும் என்றும், அதைப் போக்குவரத்து வசதிகளுடன் கூடிய - நகரின் மத்திய இடங்களில் வைக்க வேண்டுமென்றும் மாநில அரசுகள் மத்திய அரசினால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளன. சுற்றுலா அந்நியச் செலாவணியை நமக்கு ஈட்டித் தரும் அரிய தொழிலாகும். ஆகவே, அதன் வளர்ச்சியில் நாம் அதிக அளவில் ஈடுபாடு கொள்வோமேயானால் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகள் அதிகரிப்பதுமின்றி, மக்களுக்கும் வேலை வாய்ப்பும் அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை!








பாராட்டி வந்த பழமைக் கருத்துக்களை
வேரோட்டம் காணவைத்தாய்! வெடிமருந்துப் பாடல்களால்

வெண்சா மரத்தாடி வேந்தர்தம் பாதையிலே
அஞ்சாமல் நடைபோட்ட அறிவுலகச் சிங்கம்நீ!

கோத்திரத்தின் பெருமை கூறிவந்தோர் எலும்பைத்
பாத்திறத்தால் நொறுக்கிப் பண்பாட்டைக் காத்தவன்நீ

சாவேந்தி நின்ற தங்கத் தமிழ்மொழியைப்
பாவேந்தே நின்தொண்டால் பாதுகாப் பாற்றிவைத்தாய்

பாட்டுவளர் கோட்டையினில் படர்ந்திருந்த ஒட்டடையைக்
காட்டித் துடைத்தவன்நீ! காலக் கணக்கன்நீ!

பக்திச் சுவைப்பாட்டும் பாவைச் சுவைப்பாட்டும்
கத்திக் கொண்டேயிருந்த கவிஞர்கள் மத்தியிலே

அறிவுக் கவிஞனென ஆர்ப்பரித்து நின்றவன்நீ!
குறிவைத்துப் பொய்யைக் குப்புறவே வீழ்த்தியவன்!

எங்களது வாழ்வுக்கோர் இடிதாங்கி போன்றவன்நீ
பங்கமுற நம்மினத்தோர் பண்பா டழிப்போர்பல்

உடைத்தாய்! தமிழர்களின் உறக்கம் கலைத்தாய் நீ!
தடைகட்டும் அஞ்சாத தண்டமிழர் தேன்கவிநீ!

இருண்டு கிடந்த எங்கள் மனங்களிலே
பெருக்கினாய் நல்லொளியை, மின்சாரப் பாடல்களால்!





தமிழ்வாழ்வே தன்வாழ்வு! தமிழ்தாழ்வே தன்தாழ்வு
தமிழ்தான் அமிழ்தமெனச் சாகும்வரை சொன்னவன்நீ!

புரட்சியெனும் சொல்லுக்குப் புகழ்தன்னைச் சேர்த்தவன்நீ!
வறட்டுவே தாந்தத்தின் வைரியென வாழ்ந்தவன்நீ!

விதவைகளின் வாழ்க்கை விளக்கமுறச் செய்வதற்கு
நிதமும் உழைத்தவன்நீ! உன்னால்தான் இந்நாட்டில்

கணவனை இழந்தவர்கள் கண்ணீரே நின்றதிங்கு!
பணக்கவலை கொள்ளாமல் பரந்தமனத் தால்நீதான்

இனக்கவலை கொண்டிருந்தாய்! ஏக்கமுற்ற எங்களது
மனக்கவலை தீர்க்க மார்க்கம் உரைத்திட்டாய் நீ!

இதயச் சுவரினிலே எழுதிவைத்த புறப்பாட்டு;
முதலாளி வர்க்கத்தின் முடிசாய்க்கும் மதயானை!

உங்கள் தரிசனத்தால் உயர்ந்தார் தமிழ்மக்கள்!
எங்களது ஏக்கம் தவிர்த்தவனே! ஆமாம்நீ

தொட்டு எழுதாத துறையில்லை பாட்டுலகில்!
கட்டுப் படாத கவிஞனே! உன்கவிதை

வாழ்விக்கும் நன்மருந்து! வாழுகின்ற எம்மோரின்
தாழ்வினைப் போக்குகின்ற தாரக மந்திரமாம்!

கவிதைமா லுமிகட்குக் கலங்கரை விளக்கம்நீ!
புவிவானில் கவிநிலவு: புன்மையிலே வீழ்ந்த

செத்த மொழிக்குச் செவிசாய்த்துத் தேரோற்றி
இத்தரையோர் விழாவெடுத்த இழிசெயலைப் போக்கினைநீ!

எங்களது இதய வீணையைநீ மீட்டியதால்
பொங்கும் குருதியில் புதுச்சுருதி தோன்றியது

எங்கிருக் கின்றாய்நீ? இ(ல்)லையென்ற போதிலும்உன்
தங்கத் தமிழ்வாழும் பார்!

இரண்டாம் பரிசுக் கவிதை

# பகுத்தறிவுப் பாவலன்



சாதிகளை வெறுத்திட்ட பார திக்கும்,
சாத்திரத்தைக் கண்டித்த பெரியா ருக்கும்,
வீதிகளில் தமிழ்விரித்த அண்ணா வுக்கும்,
விரிகின்ற தமிழ்மொழிக்கும் தோழ ராக :
ஆதிமுதல் பணிசெய்த பாட்டு மன்னர்,
அடிதோறும் அழகுதமிழ் இலக்க ணத்தை
மோதாமல் முத்தமிழை வளர்த்த மன்னர் ;
மொத்தத்தில் இவர்வரவு மொழியின் ஆக்கம்!

கோட்டுப்பூ கொடிப்பூக்கள் சூடிக் கொண்டால்
கொடியிடைக்கு வருத்தங்கள் நேரு மென்று,
பாட்டுப்பூ தனைச்சூடும் பெண்கள் வாழும்
பாட்டூராம் புதுவையிலே பிறந்த தாலே,
காட்டுப்பூ நீட்டுப்பூ எல்லாம் சேர்த்து,
கடவுட்கே பூமாலை யாத்தி டாமல்,
நாட்டுப்பா கொள்கைப்பா எல்லாம் சேர்த்து
நலமாக்கும் பாமாலை ஆக்கித் தந்தார்!

நாக்கினிலே காளிவரம் பெற்றி டாமல்,
நர்த்தகியின் முலைப்பாலைக் குடித்தி டாமல்,
வாக்கினிலே வரகவியாய்ப் பிறந்தி டாமல்,
வழிமுறையாய்த் தமிழ்கற்றுக் கவிதை யாத்த,
தேக்குமரத் துடலழகர், சங்கச் சான்றோர்
திறம்பெற்ற தமிழ்க்கவிஞர்; தமிழர் வாழ்வில்
தூக்கத்தைக் கலைத்திட்ட காலைச் சேவல்,
தொடரிந்திப் பாம்புதனை எதிர்த்த கீரி!

வெடிக்காத உடைக்காத பலாப்ப ழத்தில்
வேடிக்கை பார்க்கின்ற ஈக்க ளைப்போல்,
படிக்காத முடிக்காத நூல்கள் கண்டே
பழம்பெருமை அளக்கின்ற புலவ ரைப்போல்,
படிக்காமல் புகழ்ந்தாரா? தமிழ கத்தின்
பழங்கொள்கை தந்தாரா? மூடக் கொள்கை
வடிக்காமல் வழங்காமல் பாட்ட ளிக்கும்
வழிவந்த பாவேந்தர்! புரட்சி வேந்தர்!

வானத்தில் நிழலென்றும் படிவ தில்லை
வாய்மையிலே பொய்யென்றும் படுப்ப தில்லை,
தானத்தில் நிதானம்போற் சிறந்த தில்லை,
தமிழ்க்கவியுள் பாவேந்தர் கவிபோல் இல்லை!
ஏனென்றால்,—தமிழ்ப்பாவில் புதிய நோக்கை
எடுத்தாண்ட புலமையினால் புறநா னூற்றின்
மானத்தில் வீரத்தில் விளைந்த பாட்டை
மாத்தமிழில் வடித்ததனால் அகர மானார்!

தொழுதுதினம் பாடியவர் சித்தர், பெண்கள்
தொல்லையெனப் பாடியவர் பட்டி னத்தார்!
உழுதுழுது பாடியவர் ஆமூர் காந்தி!
உய்விக்கப் பாடியவர் முப்பால் வேந்தர்!
அழுதழுது பாடியவர் வடலூர் வள்ளல்!
அடித்தணைத்துப் பாடியவர், மடமை நோயால்
பழுதுபடாத் தமிழகத்தைச் சமைப்ப தற்குப்
பகுத்தறிவைப் பாடியவர் புதுவை வேந்தர்!

பனப்பாக்கம் சீத்தா







மூன்றாம் பரிசுக் கவிதை

# புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

திரு. கே. அறிவுமதி (மதியழகன்)

இலக்கிய வானில் இரண்டு சூரியன்
விலக்கிட முடியா 'விழியிணை' போலே
நாட்டின் இருட்டை; நற்றமிழ்ப் பழியைப்
பாட்டுக் கதிர்களால் பாய்ந்து அழித்தன!
பாரதிச் சூரியன் பாரதப் பார்வையன்!
பாரதி தாசனே பகுத்தறி வாளன்!
சுவடுகள் பார்த்துச் சுவடுகள் பதிக்கும்
தவறுகள் புரியாச் சரித்திரச் சிற்பியன்!
தாடிச் சூரியன் தமிழினப் பெரியார்
தேடி யெடுத்த சிந்தனைப் போர்வாள்!
புதுவைத் தொட்டிலின் புரட்சிக் குழந்தை!
உதய வாசலில் உரிமைக் கோலம்
போட்டிட வந்த புதுமைக் கவிஞன்!
பாட்டுக் குளத்தில் பாவலன் இவனோர்
நெருப்புத் தாமரை! நெஞ்சினிற் பட்டதைச்
சிரிப்புகள் சேர்த்த சிந்தனைச் சொற்களால்
எடுத்துச் சொல்லிய எண்ண மறவன்!
படுத்துக் கிடந்த பைந்தமிழ்த் தாயைப்
பிழைக்கச் செய்த பெரும்புகழ் மருத்துவன்!










மழைக்குத் தவித்த மாநில வயலில்
உயிர்த்துளி போலே உவமைகள் சேர்த்துப்
பயிர்த்தொழில் செய்த பாட்டுக் காரன்!
தமிழினப் பகைவரைத் தமிழால் அறைந்தவன்!
குமிழ்களாந் தெய்வக் கொள்கைகள் உடைத்தவன்!
நாத்திகத் தமிழால் நற்கவி படைத்தும்
சாத்திரப் பொய்களைச் சலவை செய்தவன்!
சாதிப் பேயின் சாவுக் கான
தேதி குறித்த திராவகச் சொல்லன்!
வயல்வெளி மனிதர்தம் வாழ்க்கைக் காகப்
புயல்மண மலர்களைப் பூக்கச் செய்தவன்!
வேரினில் பழுத்த விதவைப் பலாக்களின்
கோரிக்கை தேடிக குரல்கொ டுத்தவன்!
சங்கத் தோணிகள் தமிழ்மொழிக் கடலில்
திங்கட் பிறைகளாய்த் திரும்பவும் மிதக்க
தாகப் பட்ட ‘தண்ணீர்ச் சாலையன்’!
வேகப் பட்ட வெள்ளச் சிந்தையன்!
இருட்டறை உலகின் இழிகறை நீக்கத்
திருடரால் கூடத் திருத்தம் சொன்னவன்!
இலக்கணச் சிறையில் சொற்களைப் பூட்டி
இலக்கியப் பெண்களை விடுதலை செய்தவன்!
வேற்று மொழியின் வரவினை யிங்கே
கூற்று மொழியால் குமுறியெ திர்த்தவன்!
தமிழ்தமி ழெனவே சாகும் வரையிலும்
உமிழ்நீ ராக உண்டு களித்தவன்!
மரபினை மீறிடா மாண்புறு கவிஞனும்!
யாரிதை ஒப்புவார்? யாம்தாம் கேட்கிறோம்!
“தாயின் மீதே தணியாக் காதல்
சேயவன் கொண்டது செந்தமிழ் மரபோ”?




# சோழனின் சாதனை!

திருச்சியை அடுத்த சுப்பிரமணியபுரம் 11-4-78 அன்று மாலையில் விழாக்கோலம் பூண்டு நின்றது. பூச்சரங்களால் அலங்கரிக்கப்பட்ட விழாமேடை! வாண வேடிக்கைகள் பின்னணியில் முழங்க விழா மேடையின் இருமருங்கும் அணிவகுத்து நின்றன சோழன் போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான புத்தம் புதிய 20 பேருந்துகள்!

அவற்றின் சிறப்பு என்னவென்றால் இந்தப் புதிய பேருந்துகள் அனைத்தும் சோழன் போக்குவரத்திற்காகப் பொறையாறில் உள்ள அவர்களது தொழில் கூடத்திலேயே (பாடி பில்டிங்) கட்டப்பட்டவையாகும்!

திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு சி. இராமச்சந்திரன் ஐ.ஏ.எஸ்., அவர்கள், ஒவ்வொரு ஓட்டுநரிடமும் சாவியினை வழங்க இந்தப் பேருந்துகளின் வெள்ளோட்டம் ஆரம்பமாயிற்று. இப்பேருந்துகளில் 14 திருச்சி மாவட்டத்தில் உள்ள வழித்தடங்களிலும், 6 தஞ்சை மாவட்ட வழித்தடங்களிலும் ஓடும்.

இந்த வெள்ளோட்ட விழாவில், சோழன் போக்குவரத்துக் கழக நிர்வாக இயக்குநர் திரு மாதவ நாயர் அவர்கள் தெரிவித்த செய்திகள் வருமாறு:

'' 1972-ல் தனியார் நிறுவனங்களிடமிருந்து நாட்டுடைமையாகப்பட்டபோது இக்கழகம் 175 பேருந்துகளையும் 1,500 தொழிலாளர்களையும் கொண்டிருந்தது. படிப்படியாக வளர்ச்சி பெற்று இன்றைய தினம் 500-க்கும் மேற்பட்ட பேருந்துகளையும், 3,700-க்கும் மேற்பட்ட தொழிலாளர்களை உடையதாகவும் திருச்சி, தஞ்சை, தென்னார்க்காடு மாவட்டங்களில் 18 கிளைகளைக் கொண்டதாகவும் வளர்ச்சி பெற்றுள்ளது.

ஆரம்ப காலத்தில் வாடகைக் கட்டடங்களில் பணியைத் துவக்கிய இக்கிளைகள் படிப்படியாக சொந்தக் கட்டடங்களுக்கு மாற்றப்பட்டு வருகின்றன.

**டயர் புதுப்பித்தல்-கூடு கட்டுதல் :**

சோழன் பொறியியற் கழகத்தைச் சார்ந்த டயர் புதுப்பிக்கும் பிரிவில் (ரீடிரிடிங்) மாதம் ஒன்றுக்கு 1,000 முதல் 1,500 டயர்கள் புதுப்பிக்கப்படுகின்றன. மேலும் விரிவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

இக்கழகத்தைச் சேர்ந்த பொறையாற்றிலுள்ள பேருந்துகள் கூடு கட்டும் பிரிவு (பாடி பில்டிங் யூனிட்) 1976-ல் துவக்கப்பட்டது. இது 1977-78-ல் 75 புதிய பேருந்துக் கூடுகளைக் கட்டியுள்ளது. சோழன் போக்குவரத்துக் கழகத்திற்கும், சேரன், பல்லவன், தந்தை பெரியார் போக்குவரத்துக் கழகங்களுக்கும் மாதம் 8 முதல் 10 வரை கட்டித் தருகிறது. விரைவில் தனியார் துறைக்கும் கூடுகள் கட்டித்தர இருக்கின்ற அளவிற்கு வளர்ச்சி பெற்றுள்ளது.

**மகிழ்வான செய்தி :**

1975-76-ஆம் ஆண்டில் ஒரு கோடி ரூபாய் இழப்பில் இயங்கி வந்த இக்கழகம் 1977-78-ஆம் ஆண்டில் ரூ. 25 இலட்சம் இலாபம் ஈட்டியுள்ளது என்பது மகிழ்ச்சியான செய்தியாகும். ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இது வரையில் இல்லாத அளவில் இந்தப் போக்குவரத்துக் கழகத்தின் மார்ச் மாத வருவாய் ஒரு கோடி ரூபாயையும் தாண்டிவிட்டது.

இதற்குக் காரணம் இன்றைய அரசு அறிவித்த தொழிலாளர் நலத் திட்டங்களும், அதனை மகிழ்ந்து ஏற்ற தொழிலாளர் காட்டிய ஆர்வமும் ஆகும். தொழிலாளர்கள் காட்டுகின்ற ஒத்துழைப்பு, அயரா உழைப்பு, ஆர்வம் ஆகிய காரணத்தினால் இந்தப் போக்குவரத்துக் கழகம் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறது.



**வருங்காலத் திட்டம் :**

வரும் ஆண்டில் 100 கிராமப் புறங்களை இணைக்கின்ற அளவிற்கு 35 புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்கத் திட்டமிட்டுள்ளது. எதிர்காலத்தில் பேருந்து வசதி பெறாத கிராமங்களே இல்லை என்ற நிலையில் உருவாக்கிட சோழன் போக்குவரத்துக் கழகம் அயராது உழைக்கும்.''



# அமுதத் தமிழ்க் கவிஞருக்கு அரசு எடுத்த விழா!

தென்னாட்டுப் பெர்னாட்ஷா என்றால் பேரறிஞர் அண்ணா அவர்கள் நம் மனத் திரையில் தெரிகிறார்!

தென்னாட்டு வால்டேர், ஷெல்லி என்றால் பாவேந்தர் நம் கண் முன்னே காட்சி தருகிறார்!

புதுவை தந்த புத்தொளியாம் அந்தப் பாவேந்தருக்கு—நாவேந்தருக்கு விழா எடுத்து மகிழ்ந்தது தமிழக அரசு. அதுவும் புரட்சிக் கவிக்குத் தமிழக அரசு எடுக்கின்ற முதல் விழா! முத்தான விழா! சத்தான பல கருத்து விருந்து படைத்த பெரு விழா! திருவிழா!

**திருவிழாக்கோலம்!**

தமிழக அரசின் செய்தி—மக்கள் தொடர்புத் துறை ஏற்பாடு செய்திருந்த பாவேந்தர் பாரதிதாசன் பிறந்த நாள் விழா சென்னைக் கலைவாணர் அரங்கில், ஏப்ரல் 29,30 ஆகிய இரு நாட்கள் மிகச் சீரும் சிறப்போடும் நடந்தது. நகரே திருவிழாக் கோலம் பூணும் வகையில் கலைவாணர் அரங்கே நிரம்பி வழிந்தது!

பாவேந்தர் பாரதிதாசன் நினைவாகக் கவிதைப் போட்டியும், ஓவியப் போட்டியும் அரசு நடத்தியதில் ஏராளமான கவிஞர்கள்; ஓவியர்கள் கலந்து கொண்டு தத்தம் திறமைகளை வெளிப்படுத்தினர்.

விழாவினையொட்டி கலைவாணர் அரங்கில் இந்த ஓவியங்களெல்லாம் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. அவற்றுள் பரிசு பெற்ற ஓவியங்களும், போட்டிக்கு வந்திருந்த ஏனைய ஓவியங்களும் கலைவாணர் அரங்கில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன.

**பாவேந்தரின் படங்கள் :**

இந்தக் கண்காட்சியில், பாவேந்தரை ஆசிரியராகக் கொண்ட கவிதை இதழின் தோற்றம், அவரது கையெழுத்துப் படி, 1946ல் எடுக்கப்பட்ட அறிஞர் அண்ணாவுடன் பாவேந்தர், 1958ல் புதுவையில் நடந்த பொதுக் கூட்டத்தில் தந்தை பெரியாருடன் பாவேந்தர், 1954ல் மதுரையில் 'தினத்தந்தி' நாளேட்டின் ஊழியர்களுடன் பாவேந்தர், 1946ல் அறிஞர் அண்ணா பொற்கிழி வழங்குதல், 1944ல் 'முத்தமிழ் அரங்கு' பற்றிய பாவேந்தர் கடிதம், அவருக்கு எழுப்பிய நினைவு மண்டபம், பாவேந்தரின் குடும்பம் முதலான புகைப்படங்களும், பாவேந்தர் தீட்டிய 'மயிலும் மங்கையும்' ஓவியம் ஆகியவையும் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளித்தன.

முதல் நாள் மாலை விழா கோலாகலமாகத் தொடங்கியது.

**உலக அரங்கிலே!**

**மாண்புமிகு நிதியமைச்சர் திரு கி. மனோகரன் அவர்கள்** விழாவினைத் தொடங்கி வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்:

"புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் கவிதைகள் ஆங்கிலத்திலே மொழி பெயர்க்கப்பட்டு, உலக அரங்கிலே பவனி வருமானால், ஆகில உலகப் பெருங் கவிஞர்கள் வரிசையிலே அவர் முதலிடம் பெறுவார் என்பதில் சந்தேகம் இல்லை.

"தமிழ்ப் பண்பாட்டை, கலாச்சாரத்தை, நெறிமுறைகளைத் தமிழைக் காக்க வேண்டும் என்ற அளவுக்கு இன்று நிலைமை உருவாகியிருக்கிறது என்பதை நீங்கள் நன்கறிவீர்கள்.

அப்போதே பாரதிதாசன் தமிழைக் காக்கும் உணர்வோடு எழுச்சிமிக்க கவிதைகளை எழுதியிருக்கிறார்.''



**மக்கள் கவிஞர்:**

**மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. செ. அரங்கநாயகம் அவர்கள்** விழாவுக்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ''தமிழ்ச் சமுதாயத்தின் ஏற்றத்துக்கும், எழுச்சிக்கும் தம்முடைய ஆற்றலைப் பயன்படுத்தி, மக்கள் கவிஞராக விளங்கியவர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்'' என்று பெருமிதத்தோடு குறிப்பிட்டார்.

''பாவேந்தர், கவிஞர்களுக்குள்ளே பேரரசராக, இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற கவிஞராக விளங்கினார்கள். தமிழ்ச் சமுதாயத்துக்காக அவர் பாடுபட்டார். அப்படிப்பட்டவருக்கு விழா எடுப்பதோடு நின்றுவிடாமல், அவரது கொள்கையை நமது வாழ்க்கையில் கடைப்பிடித்து நடக்க வேண்டும். அன்று படித்த இளைஞர்களெல்லாம் இவரது கவிதை வரிகளைப் படித்து ஆற்றல் மிக்கவர்களாக விளங்கினார்கள். இன்றைய இளைஞர்களும் அவ்வாறு படிப்பார்களேயானால் ஆற்றல் மிக்கவர்களாகத் திகழ்வார்கள்.''

**புதிய சமுதாயம் படைத்தவர் :**

**மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து அவர்கள்,** பூம்புகார் பதிப்பகத்தாரின் பாரதிதாசன் நூல்களை வெளியிட்டார். அதன் முதல் நூலை, **மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் திரு. எஸ். இராகவானந்தம் அவர்கள்** பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர், தமது உரையில் குறிப்பிட்டார்:

''பழைய சம்பிரதாயங்களை பாவேந்தர் உடைத்தெறிந்தார் ; புதிய சமுதாயம் படைத்தார். பாரதிதாசனின் கவிதைகள் வாழும் வரை, தமிழ்ச் சமுதாயம் தனித்தன்மையுடன் வாழும்.

'' பெண் முன்னேற்றத்திற்கு அவர் கவிதை பாடினார்; மடமையை, கொடுமையைச் சாய்க்க அவர் கவிதை பாடினார்'' என்ற அவர், கி. பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் இருபதாம் நூற்றாண்டு வரை வெளிவந்த பழம் பெரும் இலக்கியங்களையெல்லாம் வரிசையாக 'மட மட' வெனச் சொல்லி இறுதியாகப் பாரதியையும், பாரதிதாசனையும் கோடிட்டு காட்டியபோது அரங்கில் கரவொலி அடங்கச் சில நிமிடங்கள் ஆயின.

**புரட்சிக் கவிஞருக்குப் பிறகு....**

**அரசவைக் கவிஞர் திரு. கண்ணதாசன் அவர்கள்** சிறப்புரையாற்றினார். அவர், தமக்குக் கிடைத்த அரசவைக் கவிஞர் பதவி பற்றிக் குறிப்பிட்டு, ''புரட்சிக் கவிஞருக்கு இந்தப் பதவி கிடைத்து எனக்குப் பின்னால் கிடைத்திருந்தால் எனது மனம் முழு நிறைவாக இருந்திருக்கும்'' என்று தம் உள்ளத்திலே ஊறிக் கிடந்த ஆவலை உருக்கமாக வெளியிட்டார்.

''புரட்சிக் கவிஞருக்கும் எனக்கும் நீண்ட காலமாகத் தொடர்புண்டு. பாவேந்தரின் பாடல்களில் என்னைக் கவர்ந்த பாடல் ஒன்றுண்டு. அதுதான் ஒரு சினிமாவின் 'ட்ரீட்மெண்ட்'டையே (திரைக்கதை அமைப்பு) கொடுத்த பாடல்'' என்ற அரசவைக் கவிஞர், ''அதோ பாரடி'' என்ற பாவேந்தரின் பாடலை, இராகத்துடன் பாடிக் காட்டினார்.

பின்னர் திரு பி. ஆர். வசந்தகுமாரின் பாவேந்தர் தீட்டிய ''புரட்சிக் கவி'' என்னும் நாடகம் அனைவரையும் கவர்ந்தது.

**தமிழ் அரசு—தமிழர் அரசு!**

இரண்டாம் நாள் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் விழா துவங்கியது.

கருத்தரங்கினைத் தொடங்கி வைத்த முன்னாள் உயர்நீதிமன்ற நீதிபதி திரு எஸ். மகராஜன் அவர்கள் குறிப்பிட்டார்:

''பாரதிதாசனுக்கு விழா எடுப்பதன் மூலம் தமிழக அரசு, ஒரு தமிழ் அரசு, தமிழர் அரசு என்பதை நிலைநாட்டுகிறது. அவர்களைப் பாராட்டுகிறேன்''

**சொல்லின் அபிநயம்!**

''இசையை அடிப்படையாகக் கொண்டு பாடியவர்கள் மூன்று பேர்தான். அருணகிரிநாதர், காவடிச் சிந்து பாடிய அண்ணாமலை ரெட்டியார், பாரதிதாசனார் ஆகியோரே அவர்கள்.

''பாரதிதாசனாரின் கவிதைகளிலே சொற்கள் அபிநயம் புரிவதை நாம் பார்க்கலாம். காதல் வரும்போது சொல் கண்ணடிக்கும்; பொறாமை வரும்போது சொல் உதட்டைப் பிதுக்கும்!'' என்ற அவர் ''திரும்பிப் பார்த்தால் என்ன?'' என்ற பாவேந்தரின் பாட்டை ரசித்து ரசித்துப் பாடியதுமே விழா களை கட்டத் தொடங்கிவிட்டது.

**தமிழில் முடியும்!**

இறுதியாக நீதிபதி அவர்கள் வீராவேசத்துடன் ''தமிழகத்தில் வாழ்கிறவர்களே சட்ட விஷயங்கள் எல்லாம் தமிழில் முடியாது'' என்கிறார்கள். நான் அவர்களுக்கெல்லாம் சொல்லிக் கொள்வேன். 'தமிழில் முடியும்' என்று'' என்ற அவர், ''அவர்களெல்லாம் பாரதிதாசன் கவிதைகளைப் படிக்க வேண்டும்'' என்றும் கூறினார்.

**குடும்ப விளக்கு ஏற்றியவர் !**

கருத்தரங்கிற்குத் தலைமை வகித்த மதுரைப் பல்கலைக் கழகத்துணை வேந்தர் டாக்டர் வி. சி. குழந்தைசாமி அவர்கள் பேசுகையில், ''இதுபோன்ற

விழாக்கள் தொடர்ந்து கட்சியைக் கடந்து, அரசியலுக்கு அப்பால் நின்று தமிழ் விழாவாக நடக்க வேண்டும்'' என்ற தம் ஆவலை வெளியிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

''தமிழை உயிராய், உணர்வாய், மூச்சாய்க் கொண்டு வாழ்ந்த பாரதிதாசன் ஒரு மலை போன்றவர். அவரை ஒரு சிலர் குறுகிய நோக்கத்தோடு பார்க்கிறார்கள். அது, யானை கண்ட குருடர்கள் கதையாக இருக்கிறது. இந்தக் குருடர்கள் எங்கும், எப்போதும், எதிலும் இருப்பார்கள்.

''எல்லார் வீட்டிலும் குடும்ப விளக்கை ஏற்றிய பாவேந்தர் பைந்தமிழைப் புதுப்பித்தார்; அவரது எண்ணத்தை எழுச்சியைக் கவிதைகளாக வடித்துத் தந்தார். அவர் கண்ட கனவை நிறைவேற்றுவதே அவருக்கு நாம் செய்யும் கைம்மாறு.''

**கருத்து மழை பொழிந்தது!**

பிறகு நடந்த கருத்தரங்கில் கருத்து மழை பொழிந்தது. 'பாரதிதாசன் கண்ட சமுதாயச் சீர்திருத்தம்' என்னும் தலைப்பில் முன்னாள் சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு நெ. து. சுந்தரவடிவேலு அவர்கள் பேசுகையில், ''சுயமரியாதை இயக்கத்தின் முதல் கவிஞனாக, முதல் தரக் கவிஞனாக விளங்கியவர் பாரதிதாசன். அவர் ஒரு பெரும் புலவர்; அரசியலுக்கு, கட்சிக்கு அப்பாற்பட்டவர்'' என்றார்.

'நாடு' என்பது பற்றி, முன்னாள் மதுரைப் பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு எஸ். வி. சிட்டிபாபு அவர்கள் பேசுகையில், ''நல்ல சமுதாயம் உருவாக மடமை ஒழியவேண்டும், அதோடு பொது வுடைமையும் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல, பெண்ணடிமைக்கு விடுதலை தந்திட வேண்டும் என்று முழங்கியவர் பாரதிதாசன். அவர் குடும்பத்தோடு நிற்கவில்லை; சமுதாயத்தோடு, நாட்டோடு, நிற்கவில்லை; அவர் உலக ஒற்றுமைக்கே குரல் கொடுத்தார்'' என்றார்.

**போர் மறவன்!**

'இலக்கியப் பண்பு' என்பதைப் பற்றி டாக்டர் அவ்வை நடராசன் அவர்கள் பேசுகையில், ''ஷெல்லி, பைரன் போன்ற கவிஞர்கள் பெண்ணைப் போல் அழகாக இருப்பார்கள்; அவர்களிடம் மென்மை உண்டு என்று சொல்வார்கள். ஆனால், பாரதிதாசனாரோ ஒரு சிங்கம் போலக் காட்சி தந்தார்.

''எந்தப் புரட்சிக்கும் அடிப்படை தமிழ் என்பதை நிலை நிறுத்தியவர் அவர். தமிழ் என்பதை வாளாக, வேலாகப் பாடியவர். அஞ்சாமையும், தமிழ்த் தூய்மையும் கொண்ட போர் மறவன் அவர்'' என்றார்.

**பட்டத்துப் போர் யானை!**

'பாரதி' என்னும் தலைப்பில் கவிஞர் எஸ். டி. சுந்தரம் அவர்கள் பேசுகையில், ''பாரதிதாசன் சிங்கக் கவிஞன். சால்வையைப் போட்டுக் கொண்டு நேரில் வந்தால், ஒரு பட்டத்துப் போர் யானை போல் இருக்கும் அவரது தோற்றம்; பாரதிதாசனின் கடைசி விருப்பம் பாரதியைப் பற்றித் திரைப்படமொன்றை எடுப்பது. அதை நிறைவேற்ற வேண்டும்'' என்றார்.

**அவர் ஒரு குழந்தை:**

'பெண்மை' என்பது பற்றி திருமதி இந்திரா சோமசுந்தரம் அவர்கள் பேசுகையில், ''அவரை நேரில் பார்க்கும்போது ஒரு வீர மறவனைப் போல் தோன்றினாலும், அவர் குழந்தை மனத்தோடு அன்போடு பழகுவார்'' என்றார்.

**நலம் பயக்கும் பாடல்!**

'பொதுவுடைமை' என்பது பற்றிப் பேராசிரியர் நா. பாண்டுரங்கன் அவர்கள் பேசுகையில், ''பாவேந்தரின் பல பாடல்களிலே பொதுவுடைமைக் கருத்துக்களைக் காணலாம். அவரது பாடல்கள் நாட்டு மக்களுக்கு நலம் பயக்கின்றது'' என்றார்.

**முதியவர்கள் காதல்!**

'குடும்பம்' என்பது பற்றிச் சிலம்பொலி திரு சு. செல்லப்பன் அவர்கள் பேசுகையில், ''நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் என்பதுதான் பாவேந்தரின் குறிக்கோள். யாரும் பாடாத ஒரு பாடலைப் பாடியவர் பாவேந்தர். அவர் பாடிய 'முதியவர்கள் காதல்' பாடலை யார்தான் மறக்க இயலும்? 'ஆடிய பம்பரங்கள் அல்லவோ அந்த மூத்தோர்கள்?' என்று எவ்வளவு அழகாக் கூறுகிறார். படுக்கையறையில்கூட நாட்டைப் பற்றிப் பாடிய கவிஞன் பாரதிதாசன்'' என்றார்.

**பா விருந்து!**

அன்று மாலை 3 மணியளவில் கவியரங்கத்துடன் விழா தொடங்கியது.

சென்னை வானொலி நிலைய இயக்குநர் திரு எஸ். கந்தசாமி (துறைவன்) அவர்கள் கவியரங்கைத் தொடங்கி வைத்தார்.

**செந்தமிழ் மாலுமி:**

சட்டமன்ற மேலவை உறுப்பினர் கவிஞர் புலமைப்பித்தன் அவர்கள் தலைமை வகித்துப் பாவேந்தரைப் பற்றிக் குறிப்பிடுகையில், ''தந்தை பெரியாரின் தத்துவக் கப்பலைச் செந்தமிழ்ப் பாட்டால் செலுத்திய மாலுமி'' என்று அழகாகக் குறிப்பிட்டார்.

**அருமையும் பெருமையும்!**

கவியரங்கில் பங்கு கொண்ட கவிஞர் பெருமக்கள் பல்வேறு தலைப்புகளில் பாவேந்தரின் அருமை பெருமைகளையெல்லாம் எடுத்துரைத்தார்கள்.

கவிஞர் திருமதி பொன்மணி வைரமுத்து (குடும்ப விளக்கு), கவிஞர் நாரா. நாச்சியப்பன் (இளைஞர் இலக்கியம்), கவிஞர் பொன்னடியான் (பாண்டியன் பரிசு), கவிஞர் ஈரோடு தமிழன்பன் (கண்ணகி புரட்சிக் காப்பியம்), கவிஞர் நா. அறிவொளி (பாரதிதாசன் கவிதைகள்), கவிஞர் கே. மதியழகன் (தமிழியக்கம்), கவிஞர் தமிழ்ப்பித்தன் (எதிர்பாராத முத்தம்), கவிஞர் சாமி பழனியப்பன் (அழகின் சிரிப்பு) ஆகிய கவிஞர்கள் பாவேந்தருக்குப் பாட்டால் அஞ்சலி செலுத்தி, பாட்டைக் கேட்க வந்த நெஞ்சங்களிலெல்லாம் நிலையாக நின்றார்கள்.

கவியரங்கிற்குப் பின்னர் 'இசை மாமணி' குடந்தை சீனிவாசன் அவர்களின் பாரதிதாசன் பாடல்கள் இசை நிகழ்ச்சி மிகச் சிறப்பாக நடந்தது.

**இலக்கணம் வகுத்த மொழி:**

அன்று மாலை நடந்த நிறைவு விழாச் சிறப்புக் கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் **மாண்புமிகு செய்தி-அறநிலைய அமைச்சர் திரு இராம. வீரப்பன் அவர்கள்** வரவேற்றார். அவர் பேசுகையில் குறிப்பிட்டார்:

''தமிழக அரசு பாவேந்தர் பாரதிதாசனுக்கோ, மகாகவி பாரதிக்கோ விழா எடுப்பதோடு மாத்திரம் கடமை முடிந்து விடவில்லை.

''மத்திய அரசைப் பார்த்து நாங்கள் வேண்டுகோளாக வைக்கிறோம். 14 தேசிய மொழி என்கிறீர்கள். அதிலே தமிழும் ஒன்று என்று சொல்கிறீர்கள்.

நாங்கள் அதற்கு ஒரு படி மேலே யும் சொல்லுகின்றோம்.

''இந்தியாவிலே இருக்கின்ற தேசிய மொழிகள் 1978ல் ஒன்ருக இருக்கலாம். ஆனுல், சில நூற்ருண்டுகளுக்கு முன்னுலே இந்தியாவிலே இருந்த இரண்டு மூன்று மொழிகளிலே ஒன்று தமிழ் என்பதை, இன்னும் உலகத்தின் முன்னுலே போய்ச் சொல்ல வேண்டுமாஞல் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னுலே இலக்கணம் வகுத்த மொழி — இந்தியாவிலே உள்ள மொழி — அது தமிழ் மொழி என்ற பெருமையை இந்தியத் திருநாட்டிற்கு உலகத்தின் முன்னுலே தந்து கொண்டிருக்கின்ற மொழி தமிழ் மொழி.

**இந்திய மொழிகளில்....**

''பிச்சை கேட்பதாக எண்ணிக் கொள்ளாதீர்கள். பெருமை வைத்துக் கொண்டு —பாரம்பரியத்தை வைத்துக் கொண்டு— பெற்ற அன்னைக்குத் தக்க உரிமை வேண்டும் என்று கேட்கிருேம்.

''பாவேந்தர் பாரதிதாசனுடைய நூல்கள் இந்தியாவினுடைய எல்லா மொழிகளிலேயும் மொழிபெயர்க்கப்பட வேண்டும் என்பது இந்த அரசினுடைய வேண்டுகோள். அந்த முயற்சியை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும் என்பது மாநில அரசின் வேண்டுகோள்.

**பாரதிதாசன் விருது :**

''முதல்வர் அனுமதியுடன் சில அறிவிப்புகளை அவரது சார்பில், அவருடைய ஆணைப்படி வெளியிடுகிறேன்'' என்ற அமைச்சர் அவர்கள் பலத்தக் கரவொலிகளுக்கிடையே கீழ்க்காணும் திட்டங்களை வெளியிட்டார்:

''பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த நாள் விழாவில் ஒவ்வொரு ஆண்டும் ஒரு தமிழ்க் கவிஞரைத் தேர்ந்தெடுத்து அந்தத் தமிழ்க் கவிஞருக்குப் 'பாவேந்தர் பாரதிதாசன் விருது' வழங்குவதற்கு அரசு தீர்மானித்திருக்கிறது.

''பாவேந்தர் பாரதிதாசன் விருது என்பது அந்தத் தமிழ்க் கவிஞருடைய கழுத்திலே அணிகின்ற ஒரு தங்கப் பதக்கமாகவும், 10 ஆயிரம் வெண் பொற்காசுகளும் என்பதை நான் தமிழக முதல்வரின் சார்பிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

**நினைவுச் சொற்பொழிவு :**

'இரண்டாவதாக, சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டுதோறும் பேரறிஞர்களைக் கொண்டு பாவேந்தர் நினைவுச் சொற்பொழிவு' நடத்துவதற்காக ஒரு நிரந்தர நிதியைத் தமிழக அரசின் சார்பிலே சென்னைப் பல்கலைக் கழகத்திற்கு வழங்குவது என்று முடிவெடுத்திருக்கிறது.

''அதையொட்டி ஆண்டுதோறும் பேரறிஞர்களைக் கொண்டு 'பாரதிதாசன் நினைவுச் சொற்பொழிவு' நடத்தப்படும் என்ற இரண்டு அறிவிப்புகளை மாத்திரம் முதல்வர் அவர்கள் அறிவிக்கச் சொல்லியிருக்கிருர்கள்.

**உவமைக் கவிஞர் சுரதா :**

''இந்த ஆண்டு பாவேந்தர் பாரதிதாசன் விருதைப் பெறுகிற கவிஞர் உவமைக் கவிஞர் சுரதா என்பதைப் பெரு மகிழ்வோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

''பாரதியார் கவிதா மண்டலத்திலே வந்தவர் பாரதிதாசன். பாரதிதாசனுடைய பரம்பரையிலே வந்த தலைசிறந்த கவிஞர்— உவமைக் கவிஞர் சுரதா என்று சுருக்கமாகச் சொல்லி முடிக்கிறேன்''.

**தேசிய சொத்தாக :**

நிறைவு விழாச் சிறப்புக் கூட்டத்திற்கு டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமை வகித்தார்.

அவர் பேசுகையில், ''பாரதியார் 'விடிவெள்ளி' என்று சொன்னுல், புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் விரிகதிர் ஞாயிறு ஆவார். ஞாயிறு வருவதற்கு முன்னுல் விடிவெள்ளி வந்து தான் ஞாயிறு வரும். இருளை நீக்க விடிவெள்ளிதான் வரும். விடிவெள்ளி வழியில் நின்று விளங்கினுர் பாரதி'' என்ற அவர், ''பாரதிதாசன் படைப்புக்களைத் தேசிய சொத்தாக்க வேண்டும்'' என்றும் குறிப்பிட்டார்.

**பாரதியார் வாரிசு :**

திரு தா. பாண்டியன் அவர்கள் பேசுகையில், ''பாரதிதாசன் அவர்களின் பகுத்தறிவுக் கொள்கைகள், மூட நம்பிக்கைகளைச் சாடிய கருத்துக்கள் முதலான வற்றை இந்தி மொழியில் மொழி பெயர்க்கப்பட்டு பிற மாநிலங்களில் வழங்கப்பட வேண்டும்'' என்று கருத்துத் தெரிவித்தார்.

சட்டமன்ற மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் பேசுகையில், ''பாரதியார் வாரிசாகப் பாரதிதாசன் இருப்பதைப் பார்க்கிருேம். இந்த ஆட்சி எந்தச் சீர்திருத்தத்தைச் செய்ய வேண்டும் என்று நினைத்தாலும் அந்தச் சீர்திருத்தத்திற்குப் பாரதியும்- பாரதிதாசனும் கை கொடுக்கிருர்கள்'' என்ருர் அவர்.

**முதன்மைக் கவிஞன் :**

மாண்புமிகு கிராமத் தொழில் அமைச்சர் திரு. கா. இராஜா முகமது அவர்கள் பேசுகையில், ''பாரதியார் விடுதலைக் கவிஞன்; பாரதிதாசன் தமிழியக்கக் கவிஞன். தமிழகக் கவிஞர்களிலே முதன்மைக் கவிஞன் பாரதிதாசன்'' என்று குறிப்பிட்டார்.

**முகாமும் முகமும் :**

நாடாளுமன்ற உறுப்பினர் திரு குமரி அனந்தன் அவர்கள் பேசுகையில், ''எளிய இனிய கொய்யாப்பழம் போன்றவை பாரதிதாசனின் கவிதைகள். அவர் ஒரு அற்புதக் கவிஞர்'' என்ற அவர், ''நாம் எந்த முகாமில் இருந்தாலும், தமிழைக் காப்பதில் ஒரு முகமாக இருக்க வேண்டும்'' என்ருர்.

**மானத்தைக் காத்தவர் :**

திரு திருவாரூர் கே. தங்கராசு அவர்கள் பேசுகையில், ''தமிழ்க் குலத்தின் மானத்தைக் காத்தவர் பாவேந்தர்'' என்ருர்.

பாவலர் திரு மா. முத்துசாமி அவர்கள் பேசுகையில், ''எடுத்த எடுப்பிலேயே கவிதை பாடக் கூடிய ஆற்றல் பெற்றவர் பாரதிதாசன். அவரது படைப்புகளைத் தேசிய சொத்தாக்க வேண்டும்'' என்ருர்.

திரு கே. ஏ. கிருஷ்ணசாமி அவர்கள் (மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்) பேசுகையில், ''சமுதாய சீர்திருத்தப் பணிகளில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் பங்கு மிகப் பெரியது. அவரது எழுத்துக்கள் மதிமிக்கவர்களுக்குக் குளிர் தருவதாகவும், மடமையாளர்களுக்குக் குத்தீட்டியாகவும் இருந்தது. பாமர மக்களை அறியாமையிலிருந்து அவருடைய ஒவ்வொரு எழுத்துக்களும் தட்டி எழுப்பின. சமுதாயத்தின் எல்லாத் தரப்பினரைப் பற்றியும் அவருடைய கவிதைகள் விமரிசித்துள்ளன. சிந்தனையாளர்களுக்கு விழா எடுக்கும் தமிழக அரசு பாவேந்தர் பாரதிதாசனுக்கு எடுக்கும் இந்த விழா வேறுபாடின்றி போற்றுதற்குரியது''.

**கவிஞர் சுரதாவுக்கு விருது :**

பாவேந்தரின் பரம்பரைக் கவிஞராகத் தேர்ந்தெடுக்கப்



கவிஞர் சுரதா அவர்களுக்கு முதல்வர் பாவேந்தர் பாரதிதாசன் விருது வழங்கி பொன்னாடை போர்த்தினார்கள்.

பெற்ற சுரதா அவர்களுக்குப் பாவேந்தர் பாரதிதாசன் விருது தங்கப் பதக்கமும், ரூபாய் பத்தாயிரம் ரொக்கமும் வழங்கப்பட்டன. இதனை அரசின் சார்பில் **மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்** வழங்கி, கவிஞர் சுரதா அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள்.

**டாக்டர் இளங்கோ :**

பாரதிதாசன் அவர்களின் நூல்களை ஆராய்ச்சி செய்து, 'டாக்டர்' பட்டம் பெற்ற திரு சு. இளங்கோ அவர்களுக்கு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்கள்.

**போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு :**

பாவேந்தர் பற்றிய கவிதைப் போட்டி, ஓவியப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல்வர் அவர்கள் பரிசுக் கேடயங்களை வழங்கினார்கள்.

கவிதைப் போட்டியில் திரு நற்றமிழன் (கீரனூர்) அவர்கள் முதற் பரிசும், பனப்பாக்கம் திரு கு. சீத்தா அவர்கள், (தியாகதுர்க்கம்) இரண்டாம் பரிசும், திரு கே. அறிவுமதி அவர்கள் (சென்னை) மூன்றாம் பரிசும் பெற்றனர்.

ஓவியப் போட்டியில் திரு எம். கங்காதரன், (கும்பகோணம்) முதற் பரிசும்,

திரு வி. கணேசன், (சேத்துப்பட்டு) இரண்டாம் பரிசும்,

திரு. ஆர். ரங்கநாதன், (நங்கநல்லூர்) மூன்றாம் பரிசும்,

செல்வி நளினி சந்தான கோபாலன், (மயிலாப்பூர்), ஆறுதல் பரிசும் பெற்றனர்.

நிறைவு விழாச் சொற்பொழிவு நிகழ்த்திட்ட **மாண்புமிகு முதலமைச்சர் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள்** தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது :

**மனநிறைவு :**

''எந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இந்த நிகழ்ச்சியை நாங்கள் தொடங்க வேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோமோ அது நாங்கள் எண்ணியதைவிட மிகச் சிறந்ததாக-அதுவும் இந்த நேரத்தில் இப்படிக் கருத்தோவியங்களை மக்களுக்குத் தந்து தீரவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்ற சூழ்நிலையில் நாட்டுமக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து தமிழைக் காக்க-தமிழ்ப் பண்பாட்டைக் காக்க-ஒருமுகத்தோடு செயல்பட வேண்டிய நிர்ப்பந்த நிலையில் நல்ல பலனைத் தந்த ஒரு நிகழ்ச்சியாக அமைந்ததை எண்ணி உண்மையிலேயே நான் மன நிறைவு பெறுகின்றேன்.

**மறக்க முடியாத தினம்**

''தமிழைப் பாதுகாக்க வேண்டும் என்பதோடு மட்டுமல்லாமல், தமிழுக்குரிய இடத்தை இந்தியத் துணைக் கண்டத்திலே பெற்றாக வேண்டும் என்ற நிலையிலும் நாம் இங்கே பணியைச் செய்ய வேண்டிய அவசியம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதையும் இன்று நாம் தெளிவாக—குறிப்பாகத் தமிழகத்திற்கல்ல, மற்ற மாநில அரசுகளும், மைய அரசும் தெரிந்து கொள்ள வேண்டிய அளவுக்கு இந்தக் கருத்தை நான் இங்கே சொல்ல வேண்டி டியவனாக இருக்கிறேன்.

''பாவேந்தர் பாரதிதாசன் அவர்களுடைய பிறந்த தின விழா மறக்க முடியாத தினம். மறந்து விட்டதாக மக்களால் கருதப்படுகின்ற நிலைமையை மாற்றி நினைவு கூர வேண்டிய நாள். இதற்கு என்ன பெயர் வைத்தாலும் பொருத்தமாக இருக்கும் அளவுக்கு அவருடைய கவித்திறனை மட்டுமல்லாமல், கொள்கைப் பிடிப்பையும் தேவையான முன்னேற்றக் கருத்துக்களையும், அவர்கள் எப்படிச் சொல்லித் தந்தார்கள், சொல்லி வைத்திருக்கிறார்கள், எதிர்காலத்தில் எந்த நாட்டிற்கும் பொருத்தமாக அமையக்கூடிய வகையில் எழுதி வைத்திருக்கிறார்கள் என்பதை நாம் நினைவுகூர்வதற்கு வாய்ப்பாக உள்ளது என்று நான் மிகவும் மகிழ்ச்சியுறுகின்றேன்.

**தமிழுக்கு மரியாதை :**

''கவிஞர்களை—தமிழ் படித்த பெரியவர்களை—தமிழாய்ந்த நல்லோர்களைப் பாராட்டுவதன் மூலம் தமிழுக்கு மரியாதையும் தமிழ் படித்தவர்களுக்கு நாட்டிலே உரிய இடத்தையும் மக்கள் கவனத்தை ஈர்க்கக் கூடிய நிலையையும் ஏற்படுத்துவதற்காக நாங்கள் ஒவ்வொரு செயலில் ஈடுபடும்பொழுதும், அதிலே அக்கறை காட்டுகின்றோம்.

**மாற்றான் தோட்டத்து மல்லிகை :**

'' நாட்டில் உள்ள நிலைமைகளை எண்ணிப் பார்த்து எந்த எந்தத் திறமை எங்கெங்கே இருக்கிறதோ—அமரர் பேரறிஞர் அண்ணா சொன்னது போல 'மாற்றான் தோட்டத்து மல்லிகையும் மணக்கும்' என்பது போல எங்கே எந்தத் திறமை இருந்தாலும் அதிலே தமிழாய்ந்தவர்கள் இருந்

தால், அவர்களைப் போற்றிப் பாராட்ட வேண்டும். அதற்குரிய இடத்தைத் தர வேண்டும் என்பதுதான் என்னுடைய—எங்களுடைய நோக்கம் என்பதை நான் இங்கே குறிப்பிட்டுக் காட்ட விரும்புகின்றேன்.

''என்னுடைய கவலை இதுதான். தமிழை ஆய்ந்து பார்க்கத் தெரிந்தவர்கள், அதை நன்கு உணர்ந்தவர்கள் இந்த நாட்டிற்குத் தன் அறிவைப் பயன்படுத்தாமல்—ஆற்றலைப் பயன்படுத்தாமல் இருந்தால், அது எவ்வளவுதான் படித்திருந்தாலும் — உன்னத நிலைமையில் இருந்தாலும்—இந்தத் தமிழகத்திற்கு—தமிழருக்குச் செய்கின்ற துரோகம் என்றுதான் இங்கே நான் குறிப்பிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

''ஆனால், இன்றைய தினம் கவிஞர்கள் தங்கப் பதக்கத்தினையும் பெற்று, 10 ஆயிரம் ரூபாய் பரிசையும் பெறுகிறார்கள் என்ற நிலைமையினை எண்ணிப் பார்க்கின்றபொழுது தமிழுக்காக அவர் தொண்டு செய்கின்ற நாள் தொடர்கின்றது என்பதை எண்ணி நான் மனமார வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். அவரைப் போற்றிப் பாராட்டுவதில் பெருமையுறுகின்றேன்.

பாரதிதாசன் எந்தப் பிரிவையும் விட்டு வைக்கவில்லை. தொழிலாளர்களைக் கூட விட்டு வைக்கவில்லை. ஒரு தொழிலாளி எப்பொழுது வேலையை விட்டு ஓய்ந்த நிலைமையிலிருந்தாலும் வீட்டுக்குத் திரும்பிவிருவார் என்று அவரது வாழ்க்கைத் துணைவி வீட்டின் வாயிற்படியிலே நின்று ஆலையின் சங்கு ஊதாதோ என்று கேட்பதற்காகக் காத்து நிற்கின்ற ஒரு பெண், தனது கணவனுடைய உழைப்பிற்குப் பின் அவரைக் காணுவதில் எவ்வளவு அக்கறையாக நிற்கிறாள் என்பதும் அந்த ஆலையின் சங்கு ஊத வேண்டும் என்று எண்ணும் பொழுது அந்தத் தொழிலாளி எவ்வளவு நாள், எவ்வளவு மணி நேரம் உழைத்துக் கொண்டிருப்பார் என்பதனையும், பலன் என்ன என்பதனையும், அந்தப் பாடல்களை எண்ணிப்பார்க்கும் பொழுது அந்த மங்கையினுடைய மன நுட்பத்தை—மன வேகத்தை—அந்த மனத்தில் இருக்கின்ற வேதனையை எண்ணிப் பார்க்கும்பொழுது நாம் நன்கு புரிந்து கொள்ள முடியும். ஒரு தொழிலாளியுடைய வேதனையை—உழைப்பை—எவ்வளவு மணி நேரம் அந்தத் தொழிலாளி வேலை செய்ய வேண்டும் என்கிற கட்டளையைப் பிறப்பிக்கக் கூடிய நாள் நெருங்க வேண்டும் என்கிறது அவரது ஆசை.

''இதுபோல் ஒவ்வொன்றையும் அவர் தொட்டுப் பார்த்திருக்கிறார் என்பது மட்டுமல்ல, நம் இதயத்திலே பதிய வைக்கிறார் என்பதை எண்ணிப் பார்க்கும் பொழுது அப்படிப்பட்ட கவிதைகள்—கருத்துக்கள்—வெறும் பாடல் புத்தகங்களாக மட்டும் இருந்துவிடாமல் ஒவ்வொரு தமிழனும் ஒவ்வொரு தமிழ் மகனும் ஒவ்வொரு மனித உள்ளம் படைத்தவனும் அவைகளைத் தன் உள்ளத்திலே ஏற்றி வைத்துக் கொள்ளக் கூடிய அளவிற்கு அவை நாட்டிலே பரப்பப்பட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன்.

**கவிஞர்களுக்குப் பரிசு :**

''அந்த வகையில்தான் பல்கலைக் கழகத்திலே அந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தரவும் அது போலவே இந்தப் பாரதிதாசன் விழாவில்—மகிழ்ச்சிநாளில்—நாம் மன நிறைவு கொள்ளுகின்ற நாளில்—அந்தப் பிறந்த நாளில் கவிஞர்களுக்குப் பரிசு கொடுப்பது என்ற நிலைமையினை உருவாக்கி இருக்கின்றோம்.

**எப்படி மறைக்கப்பட்டார்?**

''பாரதிதாசன் அவர்கள் தியாகத்தைப் பற்றி இந்த நாட்டுக்குச் சொல்லிச் சென்றதை இங்குக் குறிப்பிடுவது எனது கடமை என்று கருதுகின்றேன்.

''அமைதி என்ற ஒரு நாடகத்தை—மௌன நாடகத்தை எழுதி வைத்துச் சென்றிருக்கிறார். அந்த நாடகத்தில் பேச்சுக் கிடையாது. இவ்வளவு கவி நயத்தோடு — இவ்வளவு திறமையாகக் கொள்கைகளைச் சொல்கின்றவர் அதிலே உரையாடல் இல்லாமல் கதையைச் சொல்லிச்சென்றிருக்கிறார்.

''பெரும் கொள்கைகளுக்கு, முன்னேற்றக் கருத்துக்களுக்குச் சொந்தமான அவர் எப்படி மறைக்கப்பட்டார் என்பதும், மறைக்கப்படுகிற நிலைமையில் இருந்தார் என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம்.

**தேசிய சொத்து :**

''நான் அவருடைய மகனிடம் அவர் எழுதி வைத்த சில பாடல்களை வேண்டும் என்று கேட்ட பொழுது—உரிமையைப் பெற நான் விரும்பிய பொழுது, இன்னும் வெளிவராத சில பாடல்கள் எழுதி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டேன்.

''அவை இருக்கின்றன. உரிமை என்னிடம் இல்லை என்றாலும் அவைகளை எப்படியாவது மக்களுக்குக் கிடைக்குமாறு செய்ய வேண்டும் என்ற ஆசை எனக்கிருக்கிறது.

''இங்கே சொன்னார்கள்—எப்படியாவது அவை **தேசியச் சொத்தாக—மக்களுடைய பொதுச் சொத்தாக ஆக்கப்பட வேண்டும். பாரதியினுடைய பாடல்களைப் போல என்று சொன்னார்கள். தமிழக அரசு நிச்சயமாக அந்த முயற்சியை மேற்கொள்ளும் என்பதை நான் இங்கே சொல்லிக் கொள்ளுகிறேன்.**

**''அதுமட்டும் போதாது, அவருடைய குடும்பம் எப்படி வாழ்கின்றது என்பதைச் சித்தித்துப் பார்த்துக் கவனித்து அவருடைய குடும்பம் நல்வாழ்வைப் பெற அவர் குழந்தைகள் நல்வாழ்வு பெற—வாழ— வசதியை நிச்சயமாகப் பொறுப்பேற்றுச் செய்வோம் என்பதனையும் இங்கே நான் கூறிக்கொள்கிறேன்.**

**''அவர் வாழ்ந்த வீடு, அவர் எழுதிய எழுதுகோல், அவரால் எழுதப்பட்ட கையெழுத்துப் பிரதிகள் இவைகளை எல்லாம் சேர்க்க முடியுமானால் சேர்ப்பதற்கு நிச்சயமாக இந்த அரசு அக்கறை எடுத்துக் கொண்டு செயல்படும்.**

**பல மொழிகளில் !**

''இங்கே பாவலர் முத்துசாமியும், டாக்டர் நாவலரும் ஓர் எண்ணத்தைச் சொன்னார்கள். அதைத்தான் நான் இங்கே வெளியிடுவதாக இருந்தேன். பாரதிதாசனின் பாடல்களைப் பல மொழிகளில் மொழிபெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்து, அதை ஆங்காங்கே அரசின் செலவில் கொடுத்துப் பணத்தைப் பெறாமல் அல்ல—திரும்பப் பெற வேண்டும். ஆனால், முதலிலே அரசு செலவு செய்து அப்படிப்பட்ட மொழிபெயர்ப்புக்களை ஏற்படுத்திப் பல மாநிலங்களுக்குத் தந்து குறிப்பாக இந்தி வேண்டும் ஆட்சி மொழியாக என்று சொல்லுகிறவர்களுக்குப் புரியும்படியாக அதை அங்கே அனுப்பி வைக்க நான் விரும்புகிறேன்—என்பதையும் அதை இந்தியிலேயே அவர்கள் படிக்குமாறு வாய்ப்பளிக்க வேண்டும் என்றும் நான் கருதுகிறேன் என்பதையும் இங்கே சொல்லிக் கொள்ளுகிறேன்.

''இது இந்தியை வளர்ப்பது ஆகாதா என்று ஏதாவது காரணம் கிடைக்காதா என்று காத்திருப்பவர்கள் குறை கூறக்கூடும். ஆனால், அதைப் பற்றி எனக்குக் கவலை இல்லை.


(தொடர்ச்சி 48-ஆம் பக்கம் பார்க்க)



(8)

# அண்ணா எனும் இலக்கியவாதி

**—பி.சி.கணேசன்**

கருத்து, நடை ஆகிய இரண்டிலும் அண்ணா பெருமளவுக்கு இங்கர்சாலைப் பின்பற்றியதாகச் சொல்லலாம். பகுத்தறிவுக் கருத்துக்களை ஆங்கிலத்தில் அழுத்தமான சொல்லாட்சியோடு வெளியிடும் ஆற்றலை இங்கர்சால் பெற்றிருந்தார். ஆங்கிலத்தில் 'EUPHONY' என்று சொல்வார்கள். அதாவது வாக்கிய அமைப்புகள் ஓசை அளவில் இருக்க வேண்டும். இதில் இங்கர்சால் மிகவும் கவனமாக இருந்தார். நறுக்குத் தெரித்த வாக்கியம், இடையிடையே நையாண்டி, தாக்கப்படுவோரும் ரசித்து மகிழத்தக்க வகையில் எண்ணப் பிரயோகம். இத்தகைய சிறப்புக்களோடு இங்கர்சாலின் ஆங்கில நடை அமைந்ததனால்தான் அவருடைய பேச்சைக் கேட்கக் கட்டணம் கட்டிப் பல்லாயிரக் கணக்கில் மக்கள் குவிந்தனர். இங்கர்சாலின் ஆங்கில நடையினை அண்ணா வெகுவாக ரசித்தார். அண்ணாவின் ஆங்கிலப் பேச்சையும், எழுத்தையும் கவனித்தவர்கள் சில சந்தர்ப்பங்களில் இங்கர்சாலின் வாக்கிய அமைப்புகளைக் கூட அண்ணா அப்படியே எடுத்தாண்டிருப்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் என்று எனக்கு நினைவு. ஆங்கிலத்தில் உரையாற்றுவதற்காக அண்ணா அழைக்கப்பட்டிருந்தார். கல்லூரியில் படித்தபோது சொற்போர் மன்றங்களில் பல சந்தர்ப்பங்களில் அண்ணா உரை நிகழ்த்தியிருக்கிறார். அரசியலுக்கு வந்த பிறகு நீதிக் கட்சித் தலைவர்களின் ஆங்கில உரைகளை அழகுத் தமிழில் அண்ணா மொழி பெயர்த்து இருக்கிறாரே தவிர அவரே ஆங்கிலத்தில் உரையாற்றிய சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவு. இந்தச் சூழ்நிலையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அண்ணா அழைக்கப்பட்ட போது அவர் ஆங்கிலத்தில் எப்படிப் பேசப் போகிறாரோ எனத் தெரிந்து கொள்ளும் ஆர்வம் அனைத்துத் தரப்பினரிடையேயும் இருந்தது.

ஆங்கிலத்தில் பேச ஆரம்பித்த அண்ணா தன்னுடைய முதல் வாக்கியத்திலேயே எத்தகைய ஆங்கில நடையைப் பேச்சளவில் கையாளப் போகிறார் என்பதைத் தெளிவாக உணர்த்திவிட்டார். அண்ணா சொன்னார்: 'I rarely speak in English, but my English is not rare'. அவர் இப்படிப் பேசத் தொடங்கியவுடனே மண்டபமே அதிரும் படியாகக் கையொலி எழுந்தது. காரணம் அந்தக் காலத்தில் ஆங்கிலத்தில் அண்ணாவால் பேச முடியுமா என்று கண்சிமிட்டிக் கேட்டவர் உண்டு. தமிழில் அவர் விற்பன்னராக இருக்கலாம். ஆங்கிலத்தில் இவரால் என்ன செய்துவிட முடியும். என்று தங்களுடைய ஆசையினையும் ஆரூடமாகச் சொன்னவர்கள் உண்டு. முதல் வாக்கியத்திலேயே ஆங்கிலத்தில் பேசுவதற்குத் தனக்கு அதிகமாக வாய்ப்பு இல்லை என்பதை உணர்த்திய அண்ணா, அந்த வாய்ப்புக் குறைவே ஆங்கிலத்தில் வளமான நடையைக் கையாளத் தனக்குத் தடையாக இருக்கவில்லை என்பதை உணர்த்திவிட்டார்.

தமிழில் அண்ணா சாதித்த அனைத்துமே ஆங்கிலத்திடமிருந்து அவர் பெற்ற ஆர்வத்தால் விளைந்தவை என்ற உண்மையை அக்காலத்தில் பலரும் உணரத் தொடங்கி விட்டார்கள். ஆங்கில இலக்கியத்தில் மகோன்னத படைப்பாளிகள் என்று கருதப்பட்ட அனைவரின் நூல்களையும் அண்ணா ரசித்துப் படித்தார். வரலாற்றின் எந்தச் சம்பவத்தினையும் எளிமையாக கிரகித்துக் கொண்டு காலத்திற்குத் தேவையான அமைப்போடு அதை வழங்குவதில் அண்ணாவுக்கு நிகர் அவரேதான்!

கிறித்தவ மதத்தில் மார்ட்டின் லூதர் காண விரும்பிய மாற்றத்தை அடிப்படையாகக் கொண்டுதான் 'சொர்க்க வாசல்' என்கிற திரைக் காவியத்தை அண்ணா படைத்தார். தமிழில் நிலவிய ஆன்மீகச் சூழ்நிலைகளுக்கேற்ப அந்த வரலாற்றுச் சம்பவத்தை மாற்றி அமைத்துக் கொண்டார். எப்போதோ நடந்த ஒரு வரலாற்றுச் சம்பவம் அவர் படைக்க விரும்பிய திரைக் கதைக்கு அருமையான கருவாயிற்று.

'மாஜி கடவுள்கள்' என்று அண்ணா எழுதிய தொடர் கட்டுரை அவருடைய படைப்புக்களில் மிகச் சிறந்த ஒன்றாகும். ஒரு காலத்தில் கிரேக்க நாட்டினை ஆதிக்கம் செலுத்திய கடவுள்கள் எவ்வாறு காலப்போக்கில் செல்வாக்கு இழந்து போனார்கள் என்பதை அண்ணா இந்தத் தொடரில் சித்திரிக்கிறார். மக்களின் மனத்தில் நீக்கமற நிறைந்து ஆதிக்கம் செலுத்திய ஆன்மீகச் சக்திகளே காலப்போக்கில் மாஜி ஆகிவிடுகின்றபோது அரசியல், சமூக இயக்கங்களில் நிரந்தர சக்தியாக எதுவும் நிலைத்துவிட முடியாது என்கிற உண்மையை உணர்த்துவதற்காகவே கிரேக்கக் கடவுளர்களின் வீழ்ச்சியையே அண்ணா தன்னுடைய கட்டுரைத் தொடரின் கருப்பொருளாக வைத்துக் கொண்டார்.

இந்தத் தொடரைப் படிக்கின்ற எவரும் அண்ணா கையாண்ட ஓர் அடிப்படைப் பாணியை உணராமல் இருக்க முடியாது. தலைமையில் மாற்றம் தேவை என்று கட்டுரை எழுதுகின்ற போதுகூட அதற்கான அமைப்பாக இலக்கிய வடிவங்களையே அண்ணா தேர்ந்தெடுத்துக் கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதனால்தான் அண்ணாவின் அரசியல் பேச்சுக்கள் கூட இலக்கியச் செப்பத்தோடு அமைந்தன. பல

நாடகங்களில் ஷேக்ஸ்பியர் கையாண்ட உத்திகளை அண்ணா சிறப்பாகக் கையாண்டியிருக்கிறார்.

வரலாற்றின் ஏடுகளிலிருந்து சில பகுதிகளை எடுத்து 'ரோமாபுரி ராணிகள்' என்ற தலைப்பில் அவர் தொடர் கட்டுரையாக எழுதினார். அரசியலில் அவரைப் பிடிக்காதவர்கள் அவர் இதை ஆபாசமாக எழுதியிருக்கிறார் என்று குறைகூறியதுமுண்டு. ஓர் இலக்கியவாதி அரசியல்வாதியாகவும் வெற்றி பெறுவதென்பது அருமை. அப்படி வெற்றி பெறும்போது அவருடைய இலக்கியப் படைப்புகள் அரசியல் கண்ணோட்டத்தோடு விமர்சிக்கப்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகின்றது. இம்மாதிரி அண்ணாவின் பல படைப்புகள் அரசியல் சூழ்நிலையில் விமர்சிக்கப்பட்டுத் தவறான கண்ணோட்டத்தில் மக்களுக்கு அறிமுகப்படுத்தப் பட்டதுமுண்டு.

தமிழ் உரைநடையில் அண்ணாவின் ரோமாபுரி ராணிகள் ஒரு மைல் கல்.

—(தொடரும்)



46-ஆம் பக்கத் தொடர்ச்சி

''எப்படியாவது இந்தக் கருத்துக்கள்—முற்போக்குக் கருத்துக்கள் தீவிர சிந்தனைக்கு நம்மை உள்ளாக்கக் கூடிய கருத்துக்கள்—நாடு முழுவதிலும் பரப்பப்பட்டாக வேண்டும்.

**தமிழைக் காப்போம்!**

''தமிழ் என்றால் என்ன? தமிழர்கள் எப்படிப்பட்டவர்கள்—தமிழை எப்படிக் கருதுகிறார்கள்—தமிழுக்கு ஆபத்து வந்தால் என்னென்ன விளைவுகள் ஏற்படும் என்பதை நாம் அவர்களுக்குப் புரியும்படியாக அவர்கள் மொழியிலே குறிப்பிட்டு அவர்களுக்குக் கொடுப்பது பயனுள்ளதாக அமையும் என்று நான் கருதுகிறேன். அந்த வகையில் தமிழக அரசு தன் முயற்சிகளைத் தீவிரமாக மேற்கொள்ளும்—அந்த ஏற்பாடுகளைச் செய்யும்.

''சிலர் சில நேரங்களில் ஏதேதோ பேசுகிறார்கள் என்று கேள்விப்படுகின்ற நிலையில்தான் ஒன்றை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். யார் குறை கூறினாலும், யார் குற்றம் சுமத்தினாலும் யார் பொய் வதந்திகளைப் பரப்பினாலும்—தமிழக அரசு நிச்சயமாக தமிழர் நலன்களை—தமிழ் மொழியைக் காப்பதில் எந்தவிதத் தியாகத்தையும் செய்யத் தயங்காது.

'பாரதிதாசனுடைய இந்த விழா மனநிறைவோடு — மனமகிழ்வோடு — நல்லோர்கள் போற்றிப் பாராட்டுகின்ற வகையில் சீரும் சிறப்புமாக அமைவதற்கு ஒத்துழைப்புக் கொடுத்த அனைவருக்கும் தமிழக அரசின் சார்பாக நன்றி கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்''.

**சிந்தனைக்கு விருந்து!**

மாண்புமிகு முதல்வர் அவர்களின் உரைக்குப்பின், கலைமாமணி கே. ஜெ. சரசா அவர்களின் நாட்டிய நிகழ்ச்சி எல்லாரையும் கவர்ந்தது.

சமுதாயத்தில் புரையோடிருக்கும் மூட நம்பிக்கைகள், சாதி சமய வேறுபாடுகள் என்னும் காரிருளைப் போக்க, காலமெலாம் பாடிய பாவேந்தருக்கு முதன் முதலாகத் தமிழக அரசு எடுத்த இந்த விழா, சீரும் சிறப்புமாக நடந்தது மட்டுமின்றி, சிந்தனைக்கு விருந்து படைத்த திருவிழாவாகவும் அமைந்தது என்றால் அது உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி. வி. கிரி

# அழகின் உறைவிடம் ஆவுடையார் கோயில்!

தமிழ்நாட்டில் வானளாவிய கோபுரங்களுடன் விளங்கும் கோயில்கள் கலைக்கும், அழகுக்கும் உறைவிடமாய்த் திகழ்கின்றன; இவைகள்தான் வெளி நாடுகளிலிருந்தும், நமது நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் சுற்றுலாப் பயணிகளைத் தமிழகத்துக்கு ஈர்ப்பதில் முதன்மையாகத் திகழ்கின்றன.

தமிழ்நாட்டிற்கு வந்து கோயில்களிலுள்ள சிற்பங்களையும் அவைகளிலுள்ள கலை நுணுக்கத்தையும் கண்டு பரவசமடையும் வெளிநாட்டுப் பயணிகள் கோயிலின் கருவறை தவிர மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் சுலபமாகச் சென்று பார்க்க வகை செய்திருப்பது மிகுந்த திருப்தியளிக்கின்றது. அத்தகைய சிற்பக் கலைத் திறனுக்கோர் எடுத்துக்காட்டாய் ஆவுடையார் கோயில் விளங்குகிறது.

புதுக்கோட்டை மாவட்டத்தில், அறந்தாங்கியிலிருந்து 15 கிலோ மீட்டர் தொலைவில் ஆவுடையார் கோயில் அமைந்துள்ளது. அறந்தாங்கி இரயில் நிலையத்திலிருந்து இறங்கி இவ்வூருக்குச் செல்ல வேண்டும். நல்ல பேருந்து வசதியும் உண்டு. இங்குள்ள அருள்மிகு ஆத்மநாப சுவாமி திருக்கோயில் வரலாற்றுச் சிறப்புமிக்க கோயிலாகும். தெள்ளு தமிழ்ப் பாடல்களால் பக்திச் சுவை பரப்பிய மாணிக்கவாசகரால் இக்கோயில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இக்கோயிலில் அமைந்துள்ள உத்திரங்கள் கல்லால் வடிக்கப்பட்டிருக்கிறது; ஆனால், காண்போரின் கண்ணுக்கு இது தேக்கு மரத்தாலானதுபோல தோற்றமளிக்கும்; இந்த அளவிற்குச் சிற்பக் கலைத்திறன் பெற்றதாக உள்ளது. இக்கோயிலின் கலை வண்ணத்தைக் கண்டு களித்திட நம் நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், வெளி நாடுகளிலிருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வந்தவண்ணமிருக்கின்றனர்.

அவ்வாறு வருகின்ற சுற்றுலாப் பயணிகள் ஓய்வெடுத்துக் கொள்ளக் கூடமோ, சிறுநீர் கழித்திட தனியிடமோ இங்கில்லை. எனவே, சுற்றுலாப் பயணிகளுக்கு இந்த அடிப்படை வசதிகளைச் செய்து கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

ஆசிரியரும் வெளியிடுபவரும்: தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி: தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# தென்னகத்தின் எழிலார்ந்த இடங்களைக் காண உங்களை அழைக்கிறது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்



தென்னகத்தின் எழில் கொஞ்சும் இடங்களை நீங்கள் கண்டு களிக்க 7-நாள், 10-நாள், மற்றும் 11-நாள் சுற்றுலாத் திட்டங்களை வகுத்துள்ளது தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம். சென்னையையும் அதன் சுற்றுப்புறங்களையும் கூடச் சுற்றிப் பார்க்கத் தினமும் அழைத்துச் செல்கிறோம்.

1. சென்னை நகரச் சுற்றுலா: சென்னையில் நீங்கள் காண வேண்டிய எல்லா முக்கிய இடங்களையும் காண்பீர். வெள்ளிக் கிழமை தவிர வாரத்தின் மற்ற எல்லா நாட்களிலும். கட்டணம்: ரூ. 15
2. சென்னை — மாமல்லபுரம் — சென்னை: எல்லா நாட்களிலும். கட்டணம்: ரூ. 20

* மேற்குறிப்பிட்ட இரண்டு சுற்றுலாக் களுக்கும் சேர்த்துக் கட்டணம்: ரூ. 30

3. சென்னை — காஞ்சீபுரம் — திருக்கழுக் குன்றம் (பட்சி தீர்த்தம்) — மாமல்லபுரம்— சென்னை: எல்லா நாட்களிலும். கட்டணம்: ரூ. 30.
4. 10-நாள் சுற்றுலா: மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது சனிக்கிழமைகளில் சென்னையிலிருந்து புறப்படும். இடங்கள்: புதுச்சேரி — சிதம்பரம் — பூம்புகார்— நாகூர் — வேளாங்கண்ணி — தஞ்சாவூர் — ராமேசுவரம் — திருச்செந்தூர் — கன்னியாகுமரி — திருவனந்தபுரம் — கோவளம் — குற்றாலம் — திருவில்லிப் புத்தூர் — மதுரை — கொடைக்கானல் — பழனி — திருச்சி.

   கட்டணம்: ரூ. 375 (கூட்டாகச் சேர்ந்து தங்கும் வசதி உட்பட).
5. 7-நாள் சுற்றுலா: மாதத்தின் இரண்டாவது சனிக்கிழமைகளில் சென்னையிலிருந்து புறப்படும். இடங்கள்: திருவண்ணாமலை — ஒகனேக்கல் ஏர்க்காடு — உதகை — முதுமலை வனவிலங்கு சரணாலயம் — மைசூர் — பிருந்தாவனம் — பெங்களூர் — திருப்பதி — திருமலை — திருத்தணி — காஞ்சீபுரம்.

   கட்டணம்: ரூ. 325 (கூட்டாகச் சேர்ந்து தங்கும் வசதி, தனி வழிபாட்டுச்சலுகை உட்பட).
6. 11-நாள் சுற்றுலா: மாதத்தின் நான்காவது சனிக்கிழமைகளில் சென்னையிலிருந்து புறப்படும். இடங்கள்: பெங்களூர் — ஸ்ரீரங்கப்பட்டணம் — மைசூர் — முதுமலை வனவிலங்கு சரணாலயம் — உதகை — குருவாயூர் — கொச்சி — திருவனந்தபுரம் — கோவளம் — கன்னியாகுமரி — மதுரை — தஞ்சாவூர் — திருச்சி.

   கட்டணம்: ரூ. 400 (கூட்டாகச் சேர்ந்து தங்கும் வசதி உட்பட)

பயணிகள் சுற்றுலா வளர்ச்சிக்கழகத்தின் சுற்றுலா மாளிகைகளில் தங்குவர். தனி இடம் வேண்டுவோருக்கு 10 சதவிகித சலுகைக் கட்டணம் உண்டு.

10 அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் ஒரு குழுவாகப் பயணம் செய்வதானால், மேற்குறிப்பிட்ட கட்டணங்களில் 10 சதவிகிதம் சலுகை 7,10, 11 நாள் சுற்றுலாக் களில் தரப்படும். பயணச் சீட்டுகளை எமது அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 89581). அல்லது சென்னை உயர்நீதி மன்றத்தின் அருகில் உள்ள விரைவு வண்டி பேருந்து நிலையத்திலும் பெறலாம். (தொலைபேசி: 21835)




*கனிவு — கவனிப்பு — வசதி*

## தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

34 அண்ணா சாலை, சென்னை 600 002

தொலைபேசி: 89581/2/3 தந்தி: TAMILTOUR

பதிவு எண். M. 8676



தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் தலைவராக 26-4-1978ல் ஒருமன தாகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற சிலம்புச்செல்வர் திரு. ம. பொ. சிவஞானம் அவர்களுடன் மேலவை முன்னவர் மாண்புமிகு கைத்தறி பஞ்சாலைத்துறை அமைச்சர் திரு. கா. இராசாமுகமது அவர்களும், மாண்புமிகு மேலவை எதிர்க்கட்சித் தலைவர் திரு. சங்கரலிங்கம் அவர்களும்........

# விவசாயிகளுக்கு



# தமிழக அரசு வழங்கும்
# சலுகைகள்

தமிழரசு
இலவச இணைப்பு
16—5—1978

# விவசாயிகளுக்கு தமிழக அரசு வழங்கும் சலுகைகள் !

வெளியீடு :

இயக்குநர்,
செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# பதிப்புரை

விவசாயப் பெருங்குடி மக்கள் நல்வாழ்வில் அக்கறை கொண்டுள்ள தமிழ்நாடு அரசு தன்னுடைய சக்திக்கும் மீறிய பல சலுகைகளை அவர்களுக்கு வழங்கியுள்ளது.

விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்துப் பேசிய பின்னர், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 10-5-'78 அன்று வெளியிட்ட அறிக்கையினையும், அதற்கு முன்னர், 28-11-'77-லும் 11-4-'78-லும் விவசாயிகளுக்கு அரசு அறிவித்த சலுகைகளையும் தொகுத்து 'தமிழரசு' இதழின் இலவச இணைப்பாக இச்சிறுநூல் வெளியிடப்படுகிறது. பொதுமக்களுக்கு, குறிப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்நூல் பெரிதும் பயன்படுவதுடன், அவர்கள்பால் அரசு கொண்டுள்ள ஈடுபாட்டையும் அக்கறையையும் புரிந்து கொள்ள உறுதுணையாகவும் அமையும் என நம்புகிறோம்.

சென்னை-9
12-5-1978.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,
தமிழ்நாடு அரசு.

# விவசாயிகளுக்கு
# தமிழக அரசு
# வழங்கும் சலுகைகள்

## மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் அறிக்கை

விவசாயிகளின் நலனில் மிகுந்த ஈடுபாடும், அக்கறையும், அனுதாபமும் கொண்டுள்ள தமிழக அரசு பல்வேறு விவசாயச் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் சென்ற இரண்டு வாரங்களாக விரிவான பேச்சுவார்த்தைகள் நடத்தியுள்ளது.

ஏப்ரல் 19, 20 ஆகிய தேதிகளில் நடந்த கூட்டங்களில் விவசாய சங்கப் பிரதிநிதிகளான திரு கிருஷ்ணசாமி கவுண்டர், திரு முத்துமல்லா ரெட்டியார், திரு முத்துசாமி, திரு வேலுசாமி, திரு வையாபுரி, திரு கே. என். குமாரசாமி, திரு ராஜாராம் ரெட்டியார், திரு ஆதிமூலம், திரு வீரையன், திரு அழகிரிசாமி, திரு க்ரியமாணிக்க அம்பலம், திரு பரமசிவம், திரு தென்கோவன் ஆகியோரும் மற்றவர்களும் கலந்து கொண்டனர்.

ஏப்ரல் 25-ஆம் தேதியிலும், மே 10-ஆம் தேதியிலும் நடந்த கூட்டங்களில் மேற்சொன்ன பிரதிநிதிகளுடன் திரு நாராயணசாமி நாயுடு, திரு பாலசுப்பிரமணியம், திரு சதாசிவம் ஆகியோரும் மற்றவர்களும் கலந்து கொண்டனர்.

பல்வேறு பிரதிநிதிகள் கூறிய கருத்துக்களையும், கோரிக்கைகளையும் ஆழ்ந்து பரிசீலித்து, நிதிநிலை நெருக்கடியையும் பொருட்படுத்தாமல், உழவர் பெருமக்களுக்கு மன நிறைவு அளிக்க வேண்டுமென்ற ஆர்வத்தில் தன்னுடைய சக்திக்கும் மீறிய சில சலுகைகளை உடனடியாக அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

## (1) மின்கட்டணம்

தமிழ்நாட்டில் ஏறக்குறைய 8 இலட்சம் பம்பு செட்டுகள் மின்சார இணைப்பைப் பெற்றுள்ளன. விவசாயத்திற்குப் பயன்படும் மின்சாரக் கட்டணத்தை யூனிட்டுக்கு 12 பைசாவிலிருந்து 16 பைசாவாக உயர்த்தி 1975-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் அப்போது ஆட்சியிலிருந்த திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆணை யிட்டது. இந்த அரசு பொறுப்பேற்ற பின்பு சிறு விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 பைசாவாக 1-7-1977 முதல், குறைத்து ஆணையிட்டது. இப்போது அரசு மேலும் ஒரு சலுகை அளிக்க முடிவு செய்துள்ளது. பெரிய விவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 14 பைசாவாகவும், சிறுவிவசாயிகளுக்கு யூனிட்டுக்கு 12 பைசாவாகவும் மின் கட்டணத்தைக் குறைக்க அரசு முடிவு செய்துள்ளது. இதனல் அரசுக்கு ஆண்டுக்கு ஆறு கோடி ரூபாய் கூடுதல் நஷ்டம் ஏற்படும். இந்தச் சலுகை 1-6-'78 முதல் அமலுக்கு வரும்.




(2) விவசாயிகளுக்குப் பயன்படும் பம்பு செட்டு களைப் பொறுத்த வரையில் மீட்டர் வாடகை இப்போது மாதம் 5 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளதைக் குறைத்து, மாதம் 4 ரூபாயாக நிர்ணயிக்க அரசு முடிவு செய்துள்ளது. இந்தச் சலுகையும் 1-6-1978 முதற் கொண்டு அமலுக்கு வரும். இதன் விளைவாக மின்சார வாரியத்திற்கு ஆண்டுக்கு மேலும் 1 கோடி ரூபாய் நஷ்டம் ஏற்படும்.

(3) மின் கட்டண பாக்கியைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாதமும் பாக்கியில் ஒரு மாதத் தவணை யையும் அந்த மாதத்திற்குரிய கட்டணத்தையும் செலுத்த விவசாயிகளை அனுமதிக்கும் சலுகையை அரசு அளிக்க முடிவு செய்துள்ளது.

## (4) கூட்டுறவுக் கடன்கள்

*1977-'78ஆம் ஆண்டில் குறுகிய காலப் பயிர்க் கடன்களாக விவசாயிகளுக்கு வழங்கிய 121 கோடி ரூபாய்க்கு மாருக 1978-79-ஆம் ஆண்டில் 140 கோடி ரூபாய் கடன்கள் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. சென்ற ஆண்டு வழங்கப்பட்ட கடன்களை வசூலித்து, ரிசர்வ் வங்கி ஏற்றுக்கொள்ளும் குறைந்த பட்ச அளவுக்காகிலும் 30-6-1978க்கு முன்பு திருப்பிச் செலுத்திஞல் தான், அடுத்த ஆண்டு ரிசர்வ் வங்கியிலிருந்து நிதியுதவி கிடைக்கும். 30-6-'78க்கு முன் செலுத்த வேண்டிய கடன்களைச் செலுத்தாவிட்டால் ரிசர்வ் வங்கியின் நிதியுதவி கிடைக்காது. விவசாயிகளுக்குக் கூடுதலாக நிதியுதவி ஒதுக்கச் செய்யும் அரசாங்கத்தின் திட்டம் நிறைவேற்ற இயலாமல் போய்விடும். இதனல் விவசாயிகளுக்குப் பெருத்த நிதிப் பாதிப்பு ஏற்படும். இந்த நிலையைத் தடுப்பதற்காக இப்போது பெற்றுள்ள குறுகிய காலக் கடன்களை விவசாயிகள் செலுத்த வேண்டுமென்று அரசு கேட்டுக் கொள்ளுகிறது. இருந்தபோதிலும் இந்த ஆண்டு தமிழகத்தின் எந்தப் பகுதியிலும் கூட்டுறவுக் கடன்களை வசூலிப்பதற்காக சிறு விவசாயிகளின் மீது ஜப்தி நடவடிக்கை எடுக்கப்பட மாட்டாது என்று அரசு உறுதி கூற விரும்புகிறது.*

*(5) 1977-'78ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடன்களாக வழங்கப்பட்ட 121 கோடி ரூபாயில் 12 கோடி ரூபாய் அளவில் உள்ள கடன்கள் மத்திய காலக் கடன்களாக ஏற்கெனவே மாற்றப்பட்டுள்ளன. மேலும் 16 கோடி ரூபாய் அளவு உள்ள குறுகிய காலக் கடன்களை மத்திய காலக் கடன்களாக மாற்ற ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.*

*(6) கடந்த ஆண்டு மத்திய காலக் கடன்களாக மாற்றப்பட்டுள்ள கடன்களைப் பொறுத்த வரையில் தவணைகளில் செலுத்தும் காலத்தை 3 ஆண்டுகளிலிருந்து 5 ஆண்டுகளாக நீடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே 4.30 கோடி ரூபாய் அளவுள்ள கடன்களுக்குக் கால நீட்டிப்பு அளிக்கப்பட்டு விட்டது. மேலும் 14 கோடி ரூபாய் அளவிலே உள்ள கடன்களுக்குக் கால நீட்டிப்பு செய்ய ரிசர்வ் வங்கிக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.*

*(7) பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 12.6 சத விகிதத்தில் இருந்து, 12 சதவிகிதமாக அண்மையில் குறைக்கப்பட்டுள்ளது. உணவுப் பயிர் செய்யும் சிறு*




விவசாயிகளுக்கான கடன்களின் வட்டி விகிதம் 10.5 சத விகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. சிறு விவசாயி களுக்கு மேலும் ஒரு சலுகை வழங்கும் நோக்கத்துடன் இந்த 10.5 சத விகித வட்டி உணவுப் பயிர்களுக்கு மட்டும் பொருந்தும் என்ற நிலையை மாற்றி, சிறு விவ சாயிகளின் எல்லாப் பயிர்க் கடன்களுக்கும் பொருந்தும் என்று இப்போது முடிவு செய்யப்பட்டுள்ளது.

(8) 1971-ஆம் ஆண்டுக்குப் பிறகு நில வள வங்கி யிடமிருந்து கடன் பெற்றுப் பொய்த்துப் போன கிணறு களைப் பொறுத்த வரையில் கடனில் 75 சதவிகிதத்தை பத்தாயிரம் ரூபாய் வரம்புக்குட்பட்டு, தள்ளுபடி செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது. சிறு விவசாயிகளைப் பொறுத்த வரையில் இந்தப் பொய்த்துப்போன கிணறு களுக்காக வாங்கிய கடனில் 90 சத விகிதம் வரை பத்தாயிரம் ரூபாய் வரம்புக்கு உட்பட்டுத் தள்ளுபடி செய்யப்படும்.

(9) நில வள வங்கியிலிருந்து கடன் பெற்று பம்பு செட்டுகள் பொருத்தப்பட்டு, இன்னமும் மின் இணைப்புப் பெறாத கிணறுகளுக்கு நஷ்டத்தையும் பொருட்படுத்தா மல் உடனடியாக மின் இணைப்பை வழங்குமாறு அரசு மின் வாரியத்திற்கு ஆணையிட்டுள்ளது.

**(10) அரசுக் கடன்கள்**

புயலாலும் வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பகுதி களில் அரசு கடன்களைப் பொறுத்த வரையில், இந்த ஆண்டு 2 கோடி ரூபாய் அளவுக்குக் கடன் வசூல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. மற்ற பகுதிகளைப் பொறுத்த வரையில் கடன் பாக்கித் தொகை முழுவதையும் வசூல் செய்ய வேண்டாம் என்றும், ஒரு தவணையை மட்டும் இந்தப் பசலியில் வசூல் செய்ய வேண்டும் என்றும் அரசு முடிவு செய்துள்ளது. சிறு விவசாயிகள் மீது அரசாங்கக் கடன்களை வசூலிக்க ஜப்தி நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது என்றும் அரசு உறுதி கூற விரும்புகிறது.

(11) சில பணப்பயிர்களுக்கு முதன் முறையாக வரி விதித்துக் குடியரசுத் தலைவர் ஆட்சியின்போது சட்டம் பிறப்பிக்கப்பட்டது. 1386-ஆம் பசலிக்கு உரிய வரி வசூல் குடியரசுத் தலைவர் ஆட்சியில் ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. இந்த அரசு பொறுப்பு ஏற்ற பின்பு, ஒத்தி வைக்கப்பட்ட அந்த வரி வசூலை முழுமையாகத் தள்ளுபடி செய்தது. மேலும் திராட்சை, கரும்பு, வாழை, தென்னை, வெற்றிலை ஆகியவற்றின் மீது ஏக்கர் ஒன்றுக்கு, பயிர் ஒன்றுக்கு விதிக்கப்பட்டு இருந்த வரி விகிதத்தை ரூபாய் 20லிருந்து 15ஆக இந்த அரசு குறைத்தது. புகையிலை, மிளகாய், பாசன வசதியுடன் சாகுபடியாகும் பருத்தி, வேர்க்கடலை ஆகியவற்றின் மீது விதிக்கப்பட்ட வரியை முழுமையாக இந்த அரசு நீக்கியுள்ளது. இந்த வரி விதிப்பையும் ஆராய்ந்து பரிசீலனை செய்யுமாறு அரசு அமைத்துள்ள விவசாயிகள் உயர் மட்டக் குழு கேட்டுக்கொள்ளப்படும். இதற்கிடையில் இந்தப் பசலியில் பணப்பயிர்களுக்கு விதிக்கப்பட்டுள்ள இந்த வரி வசூலிக்கப்பட மாட்டாது. இதன் விளைவாக மட்டும் இந்த ஆண்டில் தமிழக அரசுக்கு ஒரு கோடி ரூபாய் இழப்பு ஏற்படும்.

## (12) நெல் கொள்முதல் விலை

நெல் கொள்முதல் விலையை நிர்ணயிக்கும் அதிகாரம் மத்திய அரசிடம் உள்ளது. மத்திய அரசு நிர்ணயித்துள்ள கொள்முதல் விலையை உயர்த்தும் உரிமை மாநில அரசுக்குக் கிடையாது. நெல்லின் கொள்முதல் விலையைக் கணிசமாக உயர்த்த வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு தொடர்ந்து வன்மையாக வலியுறுத்தி வரும்.

(13) தமிழக விவசாயிகளுக்கு நன்மை செய்யும் பொருட்டுத் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக 1-2-1978 முதற்கொண்டு மோட்டா ரகத்திற்கு குவிண்டாலுக்கு ரூபாய் 90 , நடுத்தர ரகத்திற்கு ரூ. 95 என்ற விலைகளில் வெளிச் சந்தை வர்த்தக அடிப்படையில் விவசாயிகளிடமிருந்து நேரடியாக நெல்லை வாங்கி வருகிறது. வெளிச் சந்தை விலைவாசி நிலைமையை மனத்தில் கொண்டு, தேவைப்படும் காலம் வரை இந்தத் திட்டம் தொடர்ந்து நடக்கும்.

14. விவசாயிகளுக்கு மேலும் நன்மை செய்யும் பொருட்டுத் தமிழகத்திற்குள்ளாக இப்போதுள்ள லெவி கொள்முதல் முறையையும் அதையொட்டிய கட்டுப்பாடுகளையும் உடனடியாக நீக்கிவிடத் தமிழக அரசு முடிவு செய்துள்ளது. ஆலைகள் மீது விதிக்கப்பட்டுள்ள

20 சதவிகித லெவி நீக்கப்படும். தமிழகத்திற்குள் வர்த்தக லெவி வசூலிக்கப்பட மாட்டாது. லெவி முறையைக் கண்காணிக்க சில மாவட்டங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள சோதனைச் சாவடிகள் உடனடியாக நீக்கப்படும். குடும்பத் தேவைக்காக நிலச்சொந்தக்காரர்கள் தமிழகத்திற்குள்ளாக நெல் எடுத்துச் செல்லுவதற்கு இனிமேல் சான்றிதழ் எதுவும் பெற வேண்டியதில்லை. இதன் பயனாக மாநிலத்திற்குள்ளாக அரிசி, நெல் நடமாட்டத்தின் மீது எந்தவிதக் கட்டுப்பாடோ தடையோ இராது. பரீட்சார்த்தமாகக் கொண்டுவரப்படும் இந்தக் கட்டுப்பாடு நீக்க முறை 1978-ஆம் ஆண்டு இறுதி வரை செயல்படுத்தப்படும். இந்தக் கட்டுப்பாடு நீக்கக் கொள்கை விளைவுகளை ஆராய்ந்து 1979-ஆம் ஆண்டிற்கான உணவுக் கொள்கை, சூழ்நிலையின் தேவைக்கு ஏற்ப வகுக்கப்படும்.

### (15) மணிலாப் பருப்பு நடமாட்டம்

மணிலாப் பருப்பு மற்ற மாநிலங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதை அரசு ஒழுங்குபடுத்தச் சில விதிமுறைகளை வகுத்திருந்தது. இதன் காரணமாக விவசாயிகளுக்குக் குறைந்த விலை கிடைக்கின்றது என்ற குறை எழுப்பப்பட்டதையொட்டி இந்த விதிமுறைகளைத் தளர்த்தி மற்ற மாநிலங்களுக்கு மணிலாப் பருப்பு எடுத்துச் செல்லப்படுவதை நிபந்தனையின்றி அனுமதிக்க அரசு முடிவு செய்துள்ளது.

விவசாயிகளின் பிரச்சினைகளை நீண்ட கால நோக்குடன் ஆராய்ந்து, நிலையான தீர்வுகளைப் பரிந்துரைக்க அரசு பல்வேறு விவசாய சங்கப் பிரதிநிதிகளையும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அதிகாரிகளையும் கொண்ட உயர் மட்டக் குழு ஒன்றை அமைத்துள்ளது. இந்த உயர் மட்டக் குழு செய்யும் ஆக்கபூர்வமான பரிந்துரைகளை அரசு அக்கறையுடன் பரிசீலிக்கும். பன்னெடுங் காலமாக, தொடர்ந்து வந்துள்ள பிரச்சினைகளை உடனடியாகத் தீர்த்து வைப்பது என்பது இயலாத ஒன்று எனினும் அரசுக்கும் விவசாயப் பெருமக்களுக்கும் இடையே இருந்து வரும் நல் உணர்வையும், நட்பு உணர்வையும் உறுதிப்படுத்த வேண்டும் என்ற ஆர்வத்தில் அரசு இப்போது அறிவித்துள்ள சலுகைகளை உழவர் பெருமக்கள் முழு மனத்துடன் ஏற்று வரவேற்பார்கள் என்றும், சிக்கலான பிரச்சினைகளுக்குச் சீரான தீர்வு காண்பதற்குச் சாதகமான — சுமுகமான சூழ்நிலையை உருவாக்க உதவுவார்கள் என்றும் நம்புகிறேன்.

[10-5-'78 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை]

# விவசாயப் பெருங்குடி மக்களுக்கு தமிழ்நாடு அரசு முன்பே வழங்கியுள்ள சலுகைகள்!

[சென்ற ஆண்டு இறுதியில் தமிழ்நாட்டில் வீசிய கடும் புயல், பெய்த பெருமழை ஆகியவற்றினால் பாதிக்கப்பட்ட விவசாயிகட்கு, தமிழக அரசு பல சலுகைகளை வழங்கியது. 28–11–1977 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இது தொடர்பாக ஓர் அறிக்கையை வெளியிட்டார். அவ்வறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள – விவசாயிகள் சம்பந்தப்பட்ட சலுகைகள் இங்கே தரப்பட்டுள்ளன :]

- புயலாலும், வெள்ளத்தாலும் பயிர்கள் சேதமடைந்துள்ள பகுதிகளில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டுள்ள குறுகியகாலக் கடன், மத்திய காலக் கடனாக மாற்றப்படும். இதற்கு ''அன்னாவாரி'' சான்றிதழ் அளிக்க ஏற்பாடு செய்யப்படும்.

- மத்திய காலக் கடன்களைப் பொறுத்தவரையில் இயன்ற நிவாரணம் அளிக்க 'ரிசர்வ்' வங்கியுடன் தொடர்பு கொள்ளப்படும்.

- தாளடிப் பயிருக்கு நாற்றுப் பாவிட, நெல் விதைகள் இனமாக வழங்கப்படும்.

- வெள்ளத்தாலும் புயலாலும் சேதமடைந்த பகுதிகளில் தாளடிப் பயிருக்கு உரமிடுவதற்காகச் செயற்கை உரங்கள் 25 சதவிகித மானியத்துடன் வழங்கப்படும். உரச் செலவுக்கான மீதமுள்ள தொகை, கூட்டுறவுக் கடனாக வழங்கப்படும்.

* சம்பாப் பயிர்கள் பல பகுதிகளில் நீரில் மூழ்கி விட்டன. இதனுல் மகசூல் பாதிக்கப்பட்டது. இந்தப் பகுதிகளில் மீண்டும் ஒருமுறை யூரியா மேலுரமாக இடுவது அவசியம். மேலுரம் இடுவதற்கான உரச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அளிக்கப்படும். உரத்திற்கான மிகுதிப் பணம் கூட்டுறவுக் கடனுக வழங்கப் படும்.

* 1978 மார்ச் மாதம் 31-ஆம் நாள் வரை, மாநிலம் முழுவதும் பயிர்ப் பாதுகாப்பு மருந்துகள் 25 சதவிகித மானியத்துடன் எல்லா விவசாயிகளுக்கும் வழங்கப்படும்.

* மணலால் மூடப்பட்ட நிலங்களில் சிறு விவ சாயிகளுக்கு அரசே தன் பொறுப்பில் மண்ணை அகற்றித் தரும்.

* ஏனைய விவசாயிகளுக்கு மண்ணை அகற்ற 50 சதவிகிதம் மானியம் வழங்கப்படும்.

* பரந்த அளவில் தென்னை மரங்கள் சேதமடைந் துள்ளன. தென்னை சேதமுற்ற பகுதிகளில் தென்னங் கன்றுகள் இனுமாக வழங்கப்படும்.

* சேதமுற்ற கரும்பு, வாழைத் தோட்டங்களை மீண்டும் புதுப்பிக்க ஓர் ஏக்கருக்கு ரூ. 100 என்ற அடிப்படையில் மானியம் அளிக்கப் படும்.

* விதை, உரம், விதை முதல் போன்ற பொருளுக் கான மானியங்கள் சிறு விவசாயிகளுக்கு வழங் கப்படும். [நீர்ப் பாசன வசதியுள்ள நிலமாக இருந்தால் (நன்செய்) 2.50 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்களுடையவர்களும், இதர நிலங்களாக இருந்தால் (புன்செய்) 5 ஏக்கரும், அதற்குக் குறைவான நிலங்கள் உடையவர் களும், குத்தகைக்குச் சாகுபடி செய்பவர் களும் சிறுவிவசாயிகள் எனக் கணக்கிடப் படுவர்]

* புயல் மற்றும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட நிலங்களுக்கு நிலவரி, நீர்த் தீர்வை, இதர நிலவரிகள், இதர நீர் வரிகள், வர்த்தகப் பயிர்கள் வரி ஆகியவைகளிலிருந்து விலக்கு அளிக்கப்படும்.

* எங்கு நில வரியிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறதோ, அங்கெல்லாம் உள்ளூர் வரி ('லோக்கல் செஸ்') விலக்கும் அளிக்கப்படும்.

* இதே இடங்களில், ஊராட்சி ஒன்றியங்கள் உள்ளூர் வரியின் மேல் விதிக்கும் கூடுதல் வரியையும் (லோக்கல் செஸ் சார்ஜையும்) தள்ளுபடி செய்ய வேண்டும் என்று அரசு கேட்டுக் கொள்ளும்.

* நிலவரி மற்றும் 'லோக்கல் செஸ்' தள்ளுபடி பெறுகின்ற நபர்களுக்கு தக்காவிக் கடன் பாக்கிகளும், நடப்பு ஆண்டில் செலுத்த வேண்டிய தக்காவிக் கடன் தவணையும் 1387-ஆம் பசலியிலிருந்து 1388-ஆம் பசலிக்குத் தள்ளி வைக்கப்படும்.

* கால்நடைகளை இழந்த விவசாயிகளுக்குக் கூட்டுறவுச் சங்கம் மூலம் கால்நடை வாங்கக் கடன் உதவி வழங்கப்படும்.

# விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு உயர்மட்ட விவசாய நிபுணர் குழு

விவசாயிகள் போராட்டம் என்ற பெயரில் நடைபெற்ற கிளர்ச்சியைக் கண்டித்து மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 11-4-'78-ல் ஓர் அறிக்கை வெளியிட்டார். அவ்வறிக்கையில் விவசாயிகளின்பால் அரசு கொண்டுள்ள நல்லுணர்வைக் காட்டும் வகையில், அரசு, விவசாயி களுக்கு, கீழ்க்கண்ட சலுகைகளை வழங்கியுள்ளது என்று எடுத்துக்காட்டியுள்ளார். அச் சலுகைகளாவன :—

* *விவசாயத்திற்கு மின்சாரம் வழங்குவதில் ஏற்கனவே ஆண்டு ஒன்றுக்கு 40 கோடி ரூபாய் மின்வாரியத்திற்கு நஷ்டம் ஏற்பட்டாலும், சிறு விவசாயிகளுக்கு மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 16 பைசாவிலிருந்து 14 பைசாவாகக் குறைத்து, மேலும் 2 கோடி ரூபாய் இழப்பிற்கு அரசு தன்னை ஆளாக்கிக் கொண்டுள்ளது. இப்பலன்கள் எல்லாச் சிறு விவசாயிகளையும் சென்று அடைகிற விதத்தில், விரிவான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது.*

* *நெல் கொள்முதல் விலையை அதிகப்படுத்த வேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று, மத்திய அரசு ரூ. 75-க்கு மேல் உயர்த்தக் கூடாது என்று அறிவித்து இருந்தும்கூட, மோட்டா ரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 90, நடுத்தர நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 95 என்று விலை நிர்ணயித்து, நுகர் பொருள் வழங்கும் கழகத்தின் மூலம் கொள்முதல் செய்து, விவசாயிகளின் துயர் தீர்த்தது. கோதுமைக்குக் கொடுத்தது போல் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 110 தேவை என்று மத்திய அரசிடம் வற்புறுத்தி வருகிறது.*

* *கூட்டுறவுக் கடன் பாக்கி ரூ. 160 கோடி என்று இருந்தும், உடனடியாக ரிசர்வ் வங்கிக்குச் செலுத்தினால் தான் விவசாயிகள் கடன் பெற முடியும் என்ற நிலை இருந்தும், கடன் வசூலை இன்னும் 2 மாத காலத்திற்கு ஒத்தி வைத்து, அறுவடைக் காலம் முடியும்வரை ஒத்தி வைக்கப்படும் என்று அரசு அறிவித்துள்ளது.*

* உணவுப் பயிர்கள் தவிர, இதர பயிர்கள் பயிரிடக் கூட்டுறவுக் கடன்களுக்கான வட்டி விகிதத்தை 12.6 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைத்தும் அபராத வட்டியைக் குறைத்தும் ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

* விவசாயிகள் பயன்படுத்தும் இரசாயன உரவிலையைக் குறைக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் வற்புறுத்தி, டன் ஒன்றுக்கு ரூ. 100 குறைக்கப்பட்டது.

* புயல், வெள்ளம் காரணமாக பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 25 சதவிகிதம் மானியம் தந்து, பூச்சி, பூஞ்சாண மருந்துகள் வழங்கப்பட்டன.

* தற்போது ''புரடினியா'' என்னும் பொல்லாத புழு கோவை, மதுரை மாவட்டங்களில் பருத்தி, கம்பு முதலிய பயிர்களைத் தாக்கி வருவதைத் தடுப்பதற்காக 25 சதவிகித மானிய விலையில் பூச்சி மருந்துகள் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டது.

* இரசாயன உரங்கள் வழங்க முன்பு தேவைப்பட்ட அடையாள அட்டையும் கட்டுப்பாடுமின்றி எல்லோருக்கும் கிடைக்கச் செய்தல், இதன் மூலம் இது வரை எந்த ஆண்டிலும் இல்லாத அளவிற்கு, கடந்த ஆண்டில் 2.75 இலட்சம் டன் தழைச் சத்து 0.75 இலட்சம் டன் மணிச் சத்து, 0.90 இலட்சம் டன் சாம்பல் சத்து பயன்படுத்தப்பட்டுள்ளன. இதேபோல் பூச்சி, பூஞ்சாண மருந்துகளும் இதுவரை இல்லாத அளவிற்கு விநியோகிக்கப்பட்டன.

* கரும்பிற்கு டன் ஒன்றுக்கு ரூ. 85 என்று மத்திய அரசு விலை நிர்ணயித்த போதிலும் கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் மூலம் டன் ஒன்றுக்கு ரூ. 100 முதல் ரூ. 125 வரை சர்க்கரைத் தரத்தின் அடிப்படையில் விலை கிடைக்க அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இவைகள் அன்றியும் கிராமப் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் விவசாயிகளின் உண்மையான நலனைத் தக்க புள்ளி விவரங்களுடன் ஆராய்ந்து அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் விவசாயிகளின் பொருளாதாரத்தை ஊக்குவிக்கவும் இந்தியாவில் இது வரை எந்த அரசும் அமைக்காத ஓர் உயர்மட்ட விவசாய நிபுணர் குழுவை இவ்வரசு நியமித்துள்ளது.

உயர்மட்டக்குழு



# தமிழரசு

## இலவச இணைப்பு

தமிழரசு அச்சகம், அரசினர் தோட்டம், சென்னை-2